பூங்கொடி பு

# மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு



டாக்டர் ம.பொ.சிவஞானம்

# மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு

டாக்டர் ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 4943074

## நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர் : மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு

நூலாசிரியர் : ம.பொ.சிவஞானம்

மொழி : தமிழ்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 4

நூல் உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு ஆண்டு : முதற் பதிப்பு ஆகஸ்ட், 1973
இரண்டாம் பதிப்பு அக்டோபர், 1999

பக்கங்கள் : 96

நூல் அளவு : 18.5 x 12.5 செமீ

எழுத்து : 13 புள்ளிகள்

தாள் : 10.7 கி.கி. வெள்ளைத்தாள்

பைண்டிங் : கார்டு போர்டு

ஒளி அச்சுக் கோவை : அமராவதி
34, வண்டிக்காரன் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033

அச்சிட்டோர் : நடராஜ் ஆப்செட் பிரஸ்
சென் னை - 5

விலை : ரூ. 20-00

# முன்னுரை

''மாநில சுயாட்சி'' என்பது, இன்று அனைத்திந்தியாவிலும், அனைத்துக் கட்சிகளாலும் விவாதிக்கப்படும் தேசியப் பிரச்னை ஆகிவிட்டது. ஆனால், சுயாட்சிக் கோரிக்கை எப்போது பிறந்து, யார் யாரா லெல்லாம் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது என்பது பலருக்குப் புரியாதிருக்கலாம். அதனைப் புரிய வைக்கவே இந்நூல் புறப்படுகிறது.

மற்றும், 'மாநில சுயாட்சி' என்றாலே, 'பிரிவினைப் பேச்சு' என்று அச்சுறுத்தப்படுகிறது. இப்படி இன்று அச்சுறுத்துபவர்களே கடந்த காலத்தில் மாநில சுயாட்சிக் கோரிக்கையை முதன் முதலில் எழுப்பியவர்களாக, அதனைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்களாக இருக்கின்றனர் என்பதனையும் இந்நூலில் சான்றுகள் காட்டி நிரூபித்திருக்கிறேன்.

மாநில சுயாட்சிக் கிளர்ச்சியில் தமிழரசுக் கழகத்திற்குள்ள பங்கும் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. சுயாட்சிக் கிளர்ச்சியை வலுப்படுத்த ஒரு சிறிதளவேனும் பயன்படும் என்ற நினைப்புடன் இதனை எழுதி வெளியிட்டுள்ளேன்.

தமிழரசுக் கழக 6ஆவது மாநில மாநாட்டிலே இந்நூலை வெளியிடும் வாய்ப்பினைப் பெற்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்ப நிலைய உரிமையாளர் திரு.சோம, சாமிநாதன் இதனைச் சிறந்த முறையில் தயாரித்து வெளியிட்டுள்ளார். அவருக்கு எனது நன்றி.

**ம.பொ.சிவஞானம்.**

# பதிப்புரை

மொழிவழி தேசிய இன அடிப்படையில், இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஊறு ஏற்படாத வகையில் மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு திட்டவட்டமான ஓர் அரசியல் வடிவம் செதுக்கி, அதற்காகவே ''தமிழ் முரசு கொட்டி'', தமிழரசுக் கழகம் அமைத்து, தர்க்க ரீதியான பிரச்சார நூல்களையும் படைத்து இறுதி மூச்சு அடங்கும் வரையில் ஓயாது பாடுபட்ட முதல் குரலுக்கு, தனிக் குரலுக்கு உரியவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி அவர்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

1946 மே மாதம் அவர் தொடங்கிய தமிழ் முரசு இதழில் அவர் எழுதிய முதல் கட்டுரையின் தலைப்பே ''தமிழகத்தில் தமிழரசு'' என்பதாகும். இதனைத் தொடர்ந்து அதே ஆண்டில் ''தமிழருக்கு சுயநிர்ணயம்'', ''புதிய தமிழகம்'', ''வேண்டியது தமிழரசே'', ''சுய நிர்ணயப் பிரகடனம் வேண்டும்'', ''தமிழரும் அரசியல் நிர்ணய சபையும்'' முதலான தலைப்புகளில் வெளிவந்த கட்டுரைகள் மாநில சுயாட்சி தத்துவத்தின் தோற்றத்திற்குரிய மூல ஊற்றுக்களாகும். இதை அடுத்து அவர் படைத்த நூல்களின் பட்டியல் தனித்த வரலாறாக விளங்குகிறது.

இந்திய தேசிய அரசியலில் மாநிலக் கட்சிகளின் செல்வாக்கும் மைய ஆட்சி அமைப்பில் அவற்றின் பங்கேற்பும் வளர்ந்து வரும் இக்காலச் சூழலில் மாநில சுயாட்சித் தத்துவத்தின் மூல கர்த்தாவாகிய ம.பொ.சி அவர்களை தமிழர்கள் மறதிக்கு ஆட்படாமல் நினைவு கூறவேண்டும் எனும் நோக்கத்துடனும் வேண்டுகோளுடனும் ''மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு'' என்ற இந்நூலையும் ''சட்ட மன்றத்தில் சுயாட்சிக் குரல்'' என்ற மற்றொரு நூலையும் மறுபதிப்பாக அவரது நான்காம் ஆண்டு (03.10.1999) நினைவு நாளில் வெளியிட்டு ஒரு வரலாற்றுத் தேவையை நிறைவு செய்திருக்கிறோம்.

**வே. சுப்பையா**

பூங்கொடி பதிப்பகம்

# “புதிய தமிழக”க் கனவு

மாநில சுயாட்சிக் கோரிக்கை இன்று அகில இந்தியாவிலும் எதிரொலிக்கக் கேட்கின்றோம். இந்தக் கோரிக்கை, சரியாகக் கால் நூற்றாண்டுக்கு முன்பு தனிப்பட்ட முறையில் என்னால் எழுப்பப்பட்டதாகும். நான் எழுப்புவதற்கு முன்பு இங்குமங்குமாக ஒன்றிரு அறிஞர்கள், மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று அவ்வப்போது கூறி வந்தனரென்றாலும், மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரவில்லை. மாநில சுயாட்சிக்காக ஒரு கிளர்ச்சியைத் தொடங்கி, அதனை நடத்துவதற்காகத் தமிழ் நாட்டில் ஒரு கழகமும் கண்ட உழைப்பு என்னுடையதாகும்.

## சிறையில் பிறந்த சிந்தனை

1942 ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது நான் வடக்கேயுள்ள அமராவதி (மகாராஷ்டிர)ச் சிறையில் ஓராண்டுக் காலம் அடைப்பட்டிருந்தேன். அப்போது, என் மனம் எதிர்காலத் தமிழகத்தைப் பற்றிச் சிந்தித்தது. ‘வெள்ளையனே வெளியேறு!’ என்ற இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைபுகுந்த நான், வெள்ளையன் வெளியேறியபின் தமிழகத்தின் நிலை என்ன என்பது பற்றியும் சிறையில் சிந்தித்தேன்.

சிறையில் நான் படித்த சங்க காலத் தமிழ் இலக்கியங்களும் என் சிந்தனைக்குத் துணை புரிந்தன. அந்தச் சிந்தனையின் விளைவாக என் மனத்தில் உருவானதுதான் ‘மாநில சுயாட்சி’’க் கோரிக்கை. இதற்குப் ‘‘புதிய தமிழகம்’’ என்றே தொடக்கத்தில் நான் பெயர் கொடுத்தேன். இதனை அகில இந்தியக் கிளர்ச்சியாகச் செய்துவிட முடியுமென்ற நம்பிக்கை அப்போது எனக்கில்லை.

அதனால், தமிழக அளவில் சுயாட்சி கோருவதனையே எனது கடமையாகக் கொண்டேன்.

அப்போது, தமிழ் வழங்கும் நிலம் தனியரசு மாநிலமாக இருக்கவில்லை. ஆந்திர, கன்னட, கேரளப் பிரதேசங்கள் கலந்த பழைய சென்னை ராஜ்யத்துடன் இணைந்திருந்தது. அதனால், தமிழகத்தைத் தனி மாநிலமாக்குவதை முதல் கடமையாகக் கொண்டு, அது நிறைவேறிய பின்னர், அமையக் கூடிய தமிழ் மாநிலத்துக்குச் சுயாட்சி கோரும் பணியில் ஈடுபட வேண்டியவனாக இருந்தேன்.

அத்துடன், பழைய ''சென்னை ராஜ்யம்'' மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்படும்போது தமிழகத்தின் எல்லைகள் வடக்கே வேங்கடமாகவும் தெற்கே குமரி முனையாகவும் இருக்குமாறு செய்ய வேண்டியவனாகவும் இருந்தேன்.

மற்றும், அப்போது ஆந்திரர் 'மதறாஸ் மனதே' என்று கோஷித்து வந்தனராதலால். அவர்களுடைய ஆக்கிரமிப்பி லிருந்து சென்னை நகரைக் காக்கவும் கடமைப்பட்டவனாக இருந்தேன்.

இப்படி, வேங்கடத்தை வடக்கெல்லையாகவும், குமரி முனையைத் தெற்கெல்லையாகவும், சென்னையைத் தலைநகரமாகவும் கொண்டு அமையும் தமிழ் மாநிலத்திலே, தமிழ் மொழியொன்றே எங்கும் எதிலும் முதலிடம் பெறுமாறு செய்யும் கடமையும் என்மீது சுமந்திருந்தது.

இவ்வளவுக்கும் மேலாக, புதிதாக அமையும் தமிழ் மாநிலம் சுயாட்சியுடையதாக மட்டுமன்றி, சோஷலிசக் குடியரசாகவும் விளங்கவேண்டுமென்று விரும்பினேன்.

இப்படி, எல்லா வகையிலும் ஒரு புதிய தமிழகத்தைப் படைக்க விரும்பினேனாதலால், அதற்குப் 'புதிய தமிழகம்' என்று பெயர் கொடுத்தேன்.

## மலைச் சொற்பொழிவு

எனது கற்பனையிலிருந்த ''புதிய தமிழகத்''திற்கான பிரசாரத்தை முதன் முதலில் நான் தொடங்கியது திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் ஆகும். 1945 ஜூன் 26ஆம் நாளிலே, திருச்சி மலைக்கோட்டையிலே, அப்போது இந்து அறநிலையத் துணை ஆணையராக இருந்த திரு. சண்முகசுந்தரம் (பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி அவர்கள் தமையனார்) அவர்கள் கூட்டிய இலக்கியக் கூட்டத்திலே, ''புதிய தமிழகம்'' என்னும் தலைப்பிலே பேசினேன். அந்தக் கூட்டத்திற்கு நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். எனது பேச்சிலே தமிழக சுயாட்சி பற்றி வற்புறுத்தினேன். சுயாட்சி பெற்ற தமிழகம் இந்திய சமஷ்டியில் நிலைத்திருக்கும் என்றும் உறுதி கூறினேன். தென்னிந்திய மாநிலங்கள் ஒரு துணைச் சமஷ்டியாக இருக்க உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் கூறினேன்.

மலைக்கோட்டைக் கூட்டத்திலே சுமார் ஒன்றரை மணி நேரம் நான் காண விரும்பும் புதிய தமிழகம் பற்றி விரிவுரையாற்றினேன். அந்தப் பேச்சு சுருக்கமாக 'சுதேச மித்திரன்' நாளிதழில் வெளியானது.

## சந்தேகித்தனர்!

எனது பேச்சு காங்கிரஸ் வட்டாரத்திலே பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. அந்நாளில் திராவிடர் கழகம் (அப்போது தி.மு.க. தோன்றவில்லை) திராவிடத் தனிநாடு கோரி வந்ததால், எனது மலைக்கோட்டைப் பேச்சைச் 'சுதேசமித்திரனி'ல் படித்த காங்கிரஸ்காரர்கள், ''கிராமணியார் கருப்புச் சட்டைக் காரர்களோடு கலந்து விட்டார்'' என்று பிரசாரம் செய்தார்கள். அவர்கள், எனது தேச பக்தியையே ஐயுற்றனர். ஆகஸ்டுக் கிளர்ச்சியில் ஈடுபட்டு நான் அடைந்த இன்னல்களையெலாம் மறந்தனர்.

அதே நேரத்தில், ஜஸ்டிஸ் கட்சிக்காரரான திரு. பி.பாலசுப்பிரமணியம் அவர்கள், தம்மால் நடத்தப்பட்டு வந்த ''சண்டே அப்சர்வர்'' என்ற ஆங்கில வார இதழிலே, எனது மலைக்கோட்டைப் பேச்சையொட்டி விரிவான விமர்சனம் எழுதியிருந்தார். அதிலே, நான் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு காட்டுவதாக அவர் வலிந்து பொருள் கூறியிருந்தார். எனது பேச்சு திராவிடர் கழகத்தின் வெற்றி என்றும் வருணித்தார்.

## காங்கிரசின் 'வைதிகம்!'

நான் மலைக் கோட்டையிலே 'புதிய தமிழகம்' பற்றிப் பேசியபோது இந்திய விடுதலைப் போர் முடியவில்லை. தேசப் பெருந்தலைவர்களிலே பலர் சிறையில் இருந்தனர். ஏகாதிபத்தியம் விரைவில் வெளியேறுமோ, வெளியேறாமலேயே நிலைத்து விடுமோ என்றெல்லாம் அரசியல் வட்டாரத்திலே ஐயம் நிலவிய காலம் அது.

அந்நாளில், காங்கிரஸ்காரர்கள் அரசியலில் 'வைதிகர்'களாக இருந்தனர். திராவிடர் கழகம் பற்றி நெஞ்சால் நினைப்பதைக்கூட தேசத் துரோகமாகக் கருதினர். ஆம்; அவ்வளவு வைதிகம்! அந்த நிலையிலே, நான், தமிழகத்திற்குச் சுயாட்சி கோரியதன்றி, திராவிடர் கழகம் கோரும் நான்கு மொழிப் பிரதேசத்தை இந்திய சமஷ்டிக்குட்பட்ட துணைச் சமஷ்டியாகவும் ஏற்க முன்வந்தேனென்றால், காங்கிரஸ்காரர்கள் பொறுப் பார்களா? அப்போது நான் ராஜாஜி கோஷ்டியில் இருந்தேன். அதனாலும், காமராஜ் கோஷ்டிக் காங்கிரஸ்காரர்கள் எனது சுயாட்சிப் பிரசாரத்தைக் காரணம் காட்டி, காங்கிரசிலிருந்தே என்னை விரட்டிவிடவும் முயன்றனர்.

காங்கிரஸ்காரர்களின் எதிர்ப்பு கண்டு நான் கலங்கிவிடவில்லை. மாறாக, எனது கொள்கையில் உறுதி கொண்டு, அத்துறையில் தீவிரமாகப் பிரசார முரசு கொட்ட விரும்பி, ''தமிழ் முரசு'' என்ற மாதப் புத்தகம் வெளியிடத்

திட்டமிட்டேன். அப்போது புதிதாகப் பத்திரிகை வெளியிட அனுமதி கிடைக்காத நிலை இருந்ததால், ''புத்தகம்'' என்ற பெயரில் மாத வெளியீடு நடத்தத் திட்டமிட்டேன்.

## 'தமிழகத்தில் தமிழரசு!'

''தமிழ் முரசு'' முதல் புத்தகம் 1946 மே மாதம் வெளியானது. அதில், ''தமிழகத்தில் தமிழரசு'' என்ற தலைப்பிட்டு நான் எழுதிய சிறப்புக் கட்டுரையிலே, நான் காண விரும்பும் ''புதிய தமிழகம்'' பற்றி விரிவாக விளக்கியிருந்தேன். அதன் இறுதிப் பகுதி வருமாறு:

> ''......தமிழர் இன்றைய சீர்கெட்ட நிலையிலிருந்து மாறிச் சிறப்படைய வேண்டுமானால், வருங்காலச் சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு அமைத்தே தீர வேண்டும்.
>
> ''தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ்நாடு செழிக்கத் ''தமிழரசு'' வேண்டும். அத்தகைய சுதந்திர அரசியலை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை தமிழருக்கு உண்டு.
>
> ''மேற்சொன்ன சுயநிர்ணய உரிமை இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் உண்டு என்பதே நமது கொள்கை.
>
> ''இந்தக் கொள்கை சமரச முறையில் ஒப்புக் கொள்ளப்பட்டு அமலுக்குவருமானால், தமிழன் புதிய தமிழகத்தைக் காண்பான். பழைய தமிழரின் பண்பாடும், இன்றைய புதிய உலகத்தின் புத்துணர்ச்சியும் கொண்ட புதிய தமிழினத்தைப் படைப்பான். அந்தப் புதிய தமிழகத்தின் அமைப்பும், தமிழினத்தின் வாழ்வும் பின் வருமாறு இருக்குமென்று நான் கனவு காண்கிறேன்.
>
> ''தமிழ் நாட்டைத் தாய்நாடாகவும், தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் கொண்டு வாழும் தமிழ்

நாட்டின் நிரந்தரக் குடிமக்கள் அனைவரும் தமிழராகக் கொள்ளப்படுவர்.

''தமிழர் எங்கெல்லாம் பெருவாரியாக வாழ்கிறார்களோ அந்தத் தொடர்ச்சியான பிரதேசங்கள் தமிழ் நாடாகக் கொள்ளப்படும்.

''வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் கூடித் தமிழகத்தில் சுதந்திரத் தமிழரசை அமைப்பர்.

''அந்தப் புதிய தமிழரசு தனியரசுத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் என்றாலும், கடந்த கால சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தேசிய இனங்கள் அடைந்துள்ள ஒற்றுமையுணர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, சர்வதேச நிலை ஆகியவை காரணமாக, தமிழரசு, தானே தனதிஷ்டத்தின் மீது ஏனைய இன அரசுகளடங்கிய இந்திய சமஷ்டியில் இணைய வேண்டும்.

''புதிய தமிழகத்தின் பொருளாதாரக் கொள்கை பொதுவுடைமையே யன்றித் தனிவுடைமை அல்ல. இந்தப் பொதுவுடைமை லட்சியமானது தமிழர் பண்பாட்டின்படியும், தற்கால விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்ட முறைகளின்படியும் நிறைவேற்றப்படும்.

''மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுநிலைமை வகிக்கும்.

''ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துவதிலேயே அரசாங்கம் தனது சக்தியை முதன்மையாகச் செலவழிக்கும்.

''மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பழக்க வழக்கங்கள் சட்டப்படி தடுக்கப்படும்.

"ஏற்றமும் இழிவும் இல்லாத சமத்துவ குணத்தை ஊட்டும் கல்வி முறையையே சர்க்கார் பின்பற்றும்.

"சமயச் சார்பற்ற கலைகளை வளர்க்கும் பொறுப்பை அரசாங்கம் தானே மேற்கொள்ளும்.

"மேற் சொன்ன வகையில் ஒரு புதிய தமிழகத்தைச் சிருஷ்டிக்கத் தமிழரசு ஒன்றினால்தான் முடியும். அத்தகைய அரசு வேண்டுமென்று முரசு கொட்டுவோம்.

("தமிழ் முரசு", மே, 1946)

"தமிழ் முரசு" முதல் புத்தகத்திற்குத் தமிழ் மக்களிடையே நல்ல வரவேற்பிருந்தது. சிந்தனா சக்தியும் தமிழினப் பற்றுமுடைய காங்கிரஸ்காரர்கள் ஆதரவளித்தனர். குறிப்பாக, "தமிழகத்தில் தமிழரசு" என்ற தலைப்புடைய எனது அரசியல் கட்டுரை அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தியவர்கள், தமது "கல்கி" இதழிலே, எனது கட்டுரையில் "சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு" என்று யான் எழுப்பியிருந்த புதிய கோஷத்தை மனநிறைவோடு வரவேற்று மதிப்புரை எழுதியிருந்தார்.

பெரியார் ஈ.வெ.ரா.வும் தமது "குடியரசு" வார இதழிலே எனது கொள்கையை வரவேற்று எழுதியிருந்தார். ஆனால், அவர் தமது திராவிடத் தனிநாட்டுக் கொள்கைக்கு நான் ஆதரவு காட்டுவதாகவும் விமர்சித்திருந்தார்.

அப்போது திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த திரு.சி.என். அண்ணாத்துரை அவர்களும், தமது "திராவிட நாடு" வார இதழிலே, எனது சுதந்திரத் தமிழகக் கொள்கைக்கு ஆதரவு காட்டி எழுதியிருந்தார். ஆனால், அவரும் பெரியாரைப் போலவே, தி.க.வின் திராவிட நாட்டுக் கொள்கையை நான் ஆதரிப்பதாக பாவனை செய்து விமர்சித்திருந்தார்.

''தமிழ் முரசு'' இரண்டாவது புத்தகம் வெளிவருவதற்குள் - அதாவது, முதற் புத்தகம் வெளியாகி ஒரு மாதம் முடிவதற்குள்ளாக பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதுக்குழு இந்தியாவுக்கு வந்தது. இந்தியர்களுக்கு வழங்கவிருக்கும் சுதந்திரத் திட்டத்தை அக்குழு வெளியிட்டது. இந்திய மாநிலங்களை 'ஏ'-'பி'-'சி' என மூன்று தொகுதிகளாக்கி, அந்த மூன்றுங் கலந்த இந்திய சமஷ்டியை நிறுவப் போவதாக அறிவித்திருந்தது. அதன்படி, அப்போதைய சென்னை மாநிலம் (தமிழ்-ஆந்திர-கேரள-கன்னடப் பிரதேசங்கள்) 'ஏ' தொகுதியில் சேர்க்கப்பட்டது. அத்தொகுதி இந்து மாநிலங்களையே கொண்டதாக உருவாக்கப்பட்டது. ஆம்; தமிழர் நாடு 'இந்துத் தொகுதி' என முத்திரை பெற இருந்தது.

## ''தமிழருக்கும் சுயநிர்ணயம்!''

பிரிட்டிஷ் திட்டம் நடைமுறைக்கு வந்தால், 'தமிழர்' என்ற இன உணர்ச்சி அழிந்துவிடக் கூடுமென்று நான் அஞ்சினேன். நான்கு மொழிப் பிரதேசங்கள் கலந்த சென்னை மாகாணத்தை மொழிவழியாகப் பிரிப்பது பற்றிப் பிரிட்டிஷ் திட்டத்திலே ஒரு குறிப்புகூட இல்லை. அதனால், என்றென்றும் தமிழ் மாநிலம் அமையாமலே போய் விடக் கூடுமென்று நடுங்கினேன்.

அதனால், பிரிட்டிஷ் திட்டத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டி, அதனை எப்படியெல்லாம் திருத்த வேண்டுமென்று ஆலோசனை கூறித் ''தமிழ் முரசு'' இரண்டாவது புத்தகத்தில் எழுதினேன். ''தமிழருக்கும் -சுயநிர்ணயம்'' என்ற தலைப்பிட்டு நான் எழுதிய அந்தக் கட்டுரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

> ''இந்தியாவுக்குச் சுதந்திரமா? இதோ கொடுத்து விட்டோம்; எடுத்துக் கொள்ளுங்கள்'' என்ற ஆரவாரத்துடன் பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதுக் கோஷ்டியார் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக் கின்றனர்.

''பிறப்பால், பேசும் மொழியால், வாழ்க்கை நெறியால் நான் ஒரு தமிழன். தமிழகம் என் தாயகம். ஆகவே, பிரிட்டிஷ் திட்டத்தைப் பார்க்குந்தோறும், அதன் ஒவ்வொரு அம்சத்தையும் படிக்குந்தோறும் தமிழன் என்ற எண்ணத்தோடேயே பார்க்கிறேன்; படிக்கிறேன். ''இத்திட்டம் இந்தியாவின் விடுதலைச் சாசனம்'' என்கின்றனர், அதன் கர்த்தாக்கள். அப்படியானால், அதில் தமிழகத்தின் பூரண விடுதலைக்கும் வழி வகுக்கப் பட்டிருக்கிறதா என்றே பார்க்கிறேன்.

''இந்திய மக்களின் சுயநிர்ணய உரிமையை இத்திட்டம் ஒப்புக் கொண்டுவிட்டது'' என்கின்றனர் தூதுக்குழுவினர். இது உண்மையானால், அத்திட்டத்தில் தமிழருக்கும் சுயநிர்ணயம் உண்டா என்று பார்க்கிறேன்.

''இவ்வாறு தமிழன் என்ற இன உணர்ச்சியோடு பிரிட்டிஷ் திட்டத்தையும், அதன்மீது பிரிட்டிஷ் மந்திரிகள் தந்த விளக்கங்களையும் பன்முறை படித்து ஆராய்ந்தபின் எனக்கு ஏற்பட்ட எண்ணங்களையே இக்கட்டுரையில் வெளியிடுகின்றேன்.

''இந்தியாவில்-தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், குஜராத்தியர், வங்காளத்தார், பாஞ்சாலத்தார், மராட்டியர் போன்ற பதினேழு தேசிய இனங்களும், அவற்றின் தாயகங்களும் இருக்கின்றன.

''இந்தப் பதினேழு நாடுகளும் தத்தம் எல்லையில் வேறு எவர் தயவுமின்றி, தனி அரசுபுரியக்கூடிய அளவுக்கு மக்கள் தொகை, பொருள்வளம், நிலவளம் ஆகியவற்றைப் பெற்றிருக்கின்றன.

''ஆகவே, இந்தியாவின் வருங்காலத் திட்டத்தை வகுக்கும் யாரும் மேற்சொன்ன நாடுகளின் அமைப்பைச்

சீர்குலைக்காது, அதில் வாழும் இனங்களின் பண்பாட்டைப் பாதிக்காது பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல், சுதந்திர இந்தியா அமைதியாக வாழ முடியாது. இது திண்ணம்.

''இந்தியாவிலுள்ள மொழிவழி நாடுகளிலே ஒவ்வொன்றும் சுதந்திரமாக இருக்கவும், இந்திய தேசிய இனங்களிலே ஒவ்வொன்றும் சுயமாக முயற்சி செய்து வளர்ச்சியடையவும் வேண்டுமானால், அந்தத் தேசிய இனங்கள் தங்கள் தங்கள் தாயகங்களில் தத்தம் இஷ்டப்படி சுதந்திர அரசை நிறுவிக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை பெற்றவையாயிருக்க வேண்டும்.

''இந்தியாவின் இயற்கை அமைப்பையும் அதன் நீண்ட கால சரித்திரத்தையும் தற்போதைய அனுபவத்தையும் ஒட்டி நிற்கும் மேற்சொன்ன இனவாரிச் சுய நிர்ணயம்-சுய அரசு என்ற கொள்கையை எல்லாத் தேசிய இனங்களும் சமரசமாக ஒப்புக்கொண்டு அமலுக்கு வருமானால், அந்தச் சுதந்திர அரசுகள் தாமாக ஒரு மத்திய சமஷ்டியில் தாமதமின்றிக் கலந்து கொள்ளும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டியதில்லை.

''அப்படி அமைக்கப்படும் அரசாங்கந்தான் பலம் வாய்ந்ததாக இருக்கும்; அன்பை அடிப்படையாகக் கொண்ட அரசாகவும் அமையும். அஃதல்லாமல் காரணங்கள் எவ்வளவுதான் நியாயமானவையாக இருப்பினும் கட்டாயத்தின் மீது அமைக்கப்படும் மத்திய சமஷ்டியானது பலமற்றதாக இருப்பதுடன் அதிகாரத் தோரணையிலும் ஆயுத பலத்தின் ஆதரவிலும்தான் காலந் தள்ள நேரிடும்.''

(''தமிழ் முரசு'',ஜுன், 1946)

இந்தக் கட்டுரைக்கும் தமிழகத்தில் நல்ல வரவேற்பிருந்தது. 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இந்தச் சிறப்புக் கட்டுரைக்கும்-அதாவது, யான் தமிழருக்கும் சுயநிர்ணயம் கோரியதற்கும் ஆதரவு தெரிவித்துக் 'கல்கி'யில் மதிப்புரை எழுதியிருந்தார்.

## 'தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்!'

அண்ணாவும் தமது ''திராவிட நாடு'' வார இதழில், ''தமிழ் முரசு'' இரண்டாவது புத்தகத்துக்கும் மதிப்புரை எழுதினார். அதிலும் வழக்கம்போல தி.க.வின் திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கைக்கு நான் நெருங்கி வந்து கொண்டிருப்பதாக எழுதியிருந்தார்.

''தமிழ் முரசு'' இரண்டாம் புத்தகத்தில் தமிழருக்கும் சுயநிர்ணயம் கோரி யான் எழுதிய சிறப்புக் கட்டுரையைத் ''தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்'' என்னும் பெயரில் தென்றல் பதிப்பகத்தார் தனி நூலாக வெளியிட்டனர். இந்தச் சிறுநூலின் பிரதிகள் பல்லாயிரக்கணக்கில் விலையானது.மாநில சுயாட்சிக் கிளர்ச்சிக்கு ஆதரவாக யான் வெளியிட்ட முதல் நூல் இதுதான்.

காங்கிரஸ்காரனாகிய நான் 'தமிழர்' என்ற இனவுணர்ச்சி கொண்டதும், தமிழ் மாநிலங்கோரியதும், முன் எப்போதோ பறிபோன வடக்கு-தெற்கு எல்லைப் பகுதிகளை மீட்க முன்வந்ததும், தமிழினத்திற்குச் சுயநிர்ணயமும் தமிழ் மாநிலத் திற்குச் சுயாட்சியும் கோரியதும், இந்தக் கோரிக்கைகளுக்குத் தமிழ் மக்களிடையே ஆதரவு தேடத் ''தமிழ் முரசு'' மாத வெளியீட்டின் வாயிலாகப் பிரசாரத்திலே ஈடுபட்டதும் தமிழ் மக்களிடையே பெருத்த பரபரப்பை விளைவித்தது-குறிப்பாக, அந்நாளில் காங்கிரசைப் பகைத்த- காங்கிரசாலும் பகைக்கப்பட்ட திராவிடர் கழகத்தாருக்கு எனது போக்கு மிகுந்த வியப்பைத் தந்தது.

அதே நேரத்தில் காங்கிரஸ் வட்டாரத்திலே-குறிப்பாக, திரு.கு.காமராசர் கோஷ்டியாரிடையே என்னைப் பற்றித்

தப்பெண்ணம் வளர்ந்தது. அவர்களில் பலர் உண்மையாகவே நான்-அப்போது கருஞ்சட்டையினர் என்று அழைக்கப்பட்ட - தி.க.வினருடன் அந்தரங்கத்தில் உறவு கொண்டுவிட்டதாக நம்பி என்னை வெறுத்தனர். நான் மிகவும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்த ராஜாஜி கோஷ்டிக் காங்கிரஸ்காரர்களும் என்னைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். என்னைப் பொறுத்த வரையில் காங்கிரஸ்காரர்களின் -ராஜாஜி, காமராஜ் கோஷ்டிகளின்- சந்தேகங்களைப் போக்கும் வகையிலே கூட்டங்களிலும், ''தமிழ் முரசு''விலும் அவ்வப்போது விளக்கங்கள் தந்து வந்தேன். அதுபோல, திராவிடர் கழகத்தினரும் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்களுடைய திராவிடத் தனிநாடு கோரிக்கைக்கும் எனது ''சுதந்திர சோஷலிசத் தமிழரசு''க் கொள்கைக்கும் அடிப்படையிலே வேற்றுமை யிருப்பதனை ''தமிழ் முரசு'' விலே அடிக்கடி எடுத்துக் காட்டி வந்தேன்.

''தமிழ் முரசு''வில் எழுதத் தொடங்கு முன்னதாகவே பிரசார மேடை அமைத்துவிட்டேன். சென்னையில் மண்ணடி லிங்கி செட்டித் தெருவிலுள்ள ஒரு விசாலமான வீட்டிலே அன்னை கஸ்தூரிபாய் தேசிய சங்கத்தின் ஆதரவில் வாரந்தோறும் தொடர்கூட்டம் நடத்தத் தொடங்கினேன். முதற்கூட்டம் 11-1-1945ல் ஆரம்பமானது. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் எனது பிரசாரக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

''புதிய தமிழகம்'' என்ற தலைப்பிலே தொடர்ந்து ஆறு வாரங்கள்-ஞாயிறு தோறும் காலை நேரத்தில்- பேசினேன். 'தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ்', 'தமிழகத்தில் தமிழரசு'' 'தமிழருக்கும் சுயநிர்ணயம்', 'சோஷலிசத் தமிழரசு' 'தமிழரசும் மத்திய சமஷ்டியும்', 'தமிழரசில் சமயத்தின் நிலை' முதலிய ஆறு பொருள்கள்பற்றிப் பேசினேன். அது ஒரு அரசியல் வகுப்புபோலவே நடந்தது. நானே வியக்கும் வண்ணம் வாரத்திற்கு வாரம் என் பேச்சைக் கேட்க வருவோரின்

எண்ணிக்கை அதிகரித்து வந்தது. அப்படி வந்தவர்களில் மிகப் பெரும்பாலோர் இளைஞர்கள்-மாணவர்கள்.

மண்ணடி வகுப்பு ஆறு வாரங்கள் தொடர்ந்து நடந்து முடிந்த பின்னர், பலருடைய கோரிக்கைக் கிணங்கத் தென் சென்னையிலுள்ள தட்சிண பாரத இந்திப் பிரசார சபைக் கட்டடத்தில் ஞாயிறு தோறும் காலை நேரத்தில் அரசியல் வகுப்பு நடத்தி, மண்ணடி வகுப்பில் பேசியதுபோலவே ''புதிய தமிழகம்'' பற்றிப் பேசினேன். இந்த வகுப்பு தொடர்ந்து நான்கு வாரங்கள் நடந்தது.

மண்ணடி-தி.நகர் பகுதிகளில் என் பேச்சைக் கேட்ட இளைஞர்கள்,புதிய தமிழகம் காண நான் ஒரு தனி இயக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டுமெனக் கோரினர். அதில் தாங்களும் கலந்து பணியாற்றுவதாக உறுதி கூறினர்.

புதிய தமிழகம் காணும் பிரசாரத்தைத் தொடங்கிய நேரத்திலே, நான் சென்னை மாவட்ட காங்கிரஸ் செயலாளனாக இருந்தேன். அத்துடன் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி, சென்னை மகா ஜனசபை, ஐந்தாவது சர்க்கிள் (திருவல்லிக்கேணிப் பகுதி) காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றில் நிர்வாகியாகவும் இருந்து வந்தேன்.

## கழகம் பிறந்தது

1946 நவம்பர் 23ஆம் நாளன்று மாலை, சென்னை மண்ணடி லிங்கி செட்டித் தெருவிலுள்ள நான் அரசியல் வகுப்பு நடத்திய - வீட்டில், ''தமிழ் இளைஞர் கூட்டம்'' ஒன்றை நடத்தினேன். ஆம்; ''தமிழ் இளைஞர் கூட்டம்'' என்ற பெயராலேயே அழைப்பிதழ் அச்சடித்து அனுப்பினேன். அப்போது, நானும் 40 வயது இளைஞன் தானே!

இந்தக் கூட்டத்திற்கு தமிழ்ப் பெரியார் திரு.வி.க., பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு.வரதராசனார் ஆகியோரும் எனது அழைப்பின்பேரில் வந்திருந்தனர். நீண்ட நேர ஆலோசனைக்குப் பின்னர் ''தமிழ் அரசுக் கழகம்'' என்ற பெயரில் புதிய அமைப்பொன்று தொடங்கப்பட்டது. நானே கழகத் தலைவனாக ஒருமனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

கழகம் தொடங்கிய பத்து நாட்களுக்குப் பின் செயற் குழுவின் முதல் கூட்டம் கிருஷ்ணாம்பேட்டையில், நான் தற்போது இருந்துவரும் வீட்டில் நடந்தது. அதிலே, திரு.வி.க., தெ.பொ.மீ. ஆகியோரும் கலந்து கொண்டனர். நீண்ட நேர விவாதத்திற்குப் பின்னர் செய்தி இதழ்களுக்கு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. அது வருமாறு:

> ''தைத் திங்கள் முதல் நாளைத் தமது நாட்டுத் திருநாளாக வும்- பெருநாளாகவும்- தமிழர் கொண்டாடு வது வழக்கம். இவ்வாண்டு அம்முதற் பெருநாள் 1947 ஜனவரி 14-ல் வருகிறது. வழக்கப்படி அத் திருநாள் நாட்டவரால் கொண்டாடப் பெறும்.
>
> ''இம்முறை' தமிழ் நாட்டின் திருவிழா ஒரு வார காலம்-நாடெங்கும் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் சிறப்பாக நிகழப்பெறல் வேண்டுமென்பது எங்கள் வேணவா. காரணம் பலபடக் கூற வேண்டுவதில்லை. ஒன்று கூறுதல் சாலும். அது, தமிழ் நாட்டிற்கெனச் ''சுய நிர்ணய அறிக்கையை உறுதி செய்வதாகும். ''சுய நிர்ணய உணர்வு தமிழ்நாட்டுக்குப் புத்துயிர் வழங்குமென்பதில் ஐயமில்லை.
>
> ''சுய நிர்ணய''த்தின் வழியே தமிழ் நாட்டின் எல்லை கோலல், அரசியல் அமைப்பை வரையறுத்தல்

முதலிய நிகழ்தல் வேண்டும். இதில் தமிழ் மக்களுக்குக் கருத்து வேற்றுமை இராது என்று நம்புகிறோம்.

ஆகவே, தமிழகத்தின் விடுதலைக்குரிய ஒரு விழாவில் கலந்து உழைக்குமாறு எல்லாக் கட்சியாரையும் வேண்டுகிறோம். தமிழர் திருநாளை- பெருவிழாவை ஆங்காங்கே சிறப்பாக நடத்தப் பலதிற அரசியல் கட்சியினர், தொழிலாளர், மாணாக்கர் முதலிய யாவரும் முற்படுவாராக, தமிழ் இனம் எழுவதாக!''

இந்த அறிக்கை கீழ்க் கண்டவர்களின் கையொப்பத்துடன் செய்தி இதழ்களுக்கு அனுப்பப்பட்டு, எல்லா இதழ்களிலும் சிறப்பான தலைப்புக்கள் தரப்பட்டு வெளியிடப்பட்டன. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அறிக்கையிலே கையொப்ப மிட்டவர்கள் பெயர்கள் வருமாறு:-

திரு.வி. கலியாணசுந்தரனார்.
பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்.
டி.டி.கிருஷ்ணமாச்சாரியார்.
கு. காமராசர்.
'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி.
த. செங்கல்வராயன், பி.ஏ., எல்.எல்.பி.
டாக்டர் ப. சுப்பராயன்.
பாவேந்தர் பாரதிதாசன்.
நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை.
ப. ஜீவானந்தம்.
டி.கே.சிதம்பரநாத முதலியார்.
ம.பொ.சிவஞானம்.

இந்தப் பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களிலே காங்கிரஸ் காரர்களானோர், மற்றவர்களைப் போலவே அறிக்கையைப் படித்துப் பார்த்துவிட்டு, மன நிறைவோடுதான்- அறிக்கையின்

பொருளைப் புரிந்துகொண்டுதான் கையொப்பமிட்டனர். இவர்கள், அச்சடிக்கப்பட்டிருந்த தனித்தனி தாள்களில் கையொப்பமிட்டனர்.

இந்த அறிக்கையை யொட்டி நாளிதழ்களில் சில தலையங்கங்கள் தீட்டின. ஆம்; அறிக்கைக்கு ஆதரவாகத்தான்!

## பாவேந்தரின் பாராட்டு

இந்த அறிக்கையின் நகல் தி.க. தலைவர் பெரியார் ஈ.வே.ரா., அந்நாளில் தி.க. வின் செயலாளராகவும் தளபதியாகவுமிருந்த திரு. சி.என் அண்ணாத்துரை, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோருக்கும்-அவர்களுடைய கையொப்பத்தைக் கோரும் எனது கடிதத்துடன்-அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், தி.க. தலைவரும் செயலாளரும் அறிக்கைத் தாளில் கையொப்பமிட்டு அனுப்பாததோடு பதில்கூட எழுதவில்லை. பாவேந்தர் மட்டும் கையொப்பமிட்டு அனுப்பியதோடு, எனது முயற்சியைப் பாராட்டிக் கடிதமும் எழுதியிருந்தார். பாவேந்தரின் கடிதம் எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது.

21-11-46ல் மண்ணடியிலுள்ள வீடு ஒன்றின் அறையிலே பிறந்த தமிழரசுக் கழகம் 1947ஜனவரி 14-ல் மக்கள் மத்தியில் அறிமுகமானது. ஆம் அவ்வாண்டு தைத் திங்கள் முதல் நாளில் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் தமிழரசுக் கழக ஆரம்ப விழா நடைபெற்றது. திரு.வி.கலியாணசுந்தரனார், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். திரு.த.செங்கல்வராயன், திரு.டி.டி. கிருஷ்ணமாச் சாரியார் ஆகியோர் கலந்துகொண்டு கழகத்தை வரவேற்று வாழ்த்துக் கூறினர். இவ்விழாவில் கலந்துகொண்டு கழகப் பெயர்ப் பலகையைத் திறந்துவைக்க இசைந்திருந்த திரு. கு. காமராசர் விருது நகரிலிருந்து குறித்த நாளில் திரும்பி வர இயலாமையால், தந்தி மூலம் கழகத்தை வாழ்த்திச் செய்தி அனுப்பியிருந்தார்.

## தமிழகத்தின் கோரிக்கை

தமிழரசுக் கழகத் துவக்க விழா நாள் பொங்கல் திருநாளாதலால், கழகச் செயற்குழுவின் சார்பில்- தமிழர் தலைவர்கள் பன்னிருவர் கையொப்பத்துடன்-வெளியான அறிக்கைப்படி, தமிழ் நாடெங்கணும் 'தமிழர் திருநாள்' கொண்டாடப் பட்டது. அன்று சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் சென்னைக்கு வெளியே தமிழ் நாடெங்கணும் நடைபெற்ற 'தமிழர் திருநாள்' கூட்டங்களிலும் த.அ.க. வின் வேண்டுகோளுக்கிணங்கக் கீழ்வரும் தீர்மானம் ஒரு மனத்துடன் நிறைவேற்றப்பட்டது.

> ''இம் மாபெருங்கூட்டம், தமிழர் திருநாளாகிய இன்று எல்லாத் தமிழ் மக்களுக்கும் வாழ்த்து கூறுகிறது. சிறப்பாக, திருவிதாங்கூர்த் தமிழகம், பிரெஞ்சு இந்தியத் தமிழகம் ஆகிய இடங்களில் சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழர் நடத்தும் போராட்டங்களுக்கும், தமிழகத்திற்கு வெளியே இலங்கை, பர்மா, மலேசியா, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் உள்ள தமிழர்கள் தங்கள் உயிர் நாடியான உரிமைகளுக்காக நிகழ்த்தும் வீரம் மிக்க போராட்டங்களுக்கும் ஆசி கூறுவதுடன் அவர்களுக்கு எல்லா விதத்திலும் ஆதரவு நல்குமாறு தமிழ் நாட்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.
>
> ''இப்போது டெல்லியில் நடந்துவரும் அரசியல் நிர்ணயசபை மொழிவாரி நாடுகளைப் பிரிக்கும் வேலையை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவதுடன், அப்படிப் பிரிக்குங்கால், திருப்பதி முதல் குமரிவரை உள்ள நிலப்பரப்பைக் கொண்ட புதிய தமிழகத்தின் அரசியல் அமைப்பை வேறு எவர் தலையீடுமின்றித் தாமே வகுத்துக் கொள்ளத் தமிழருக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது.

"இந்தச் சுயநிர்ணயத்தின் வழியே தமிழகத்தின் அரசியல் அமைப்பை வகுக்குங்கால், அது சோஷலிசக் குடியரசாக அமைய வேண்டுமென்று விரும்புகிறது.

"மேற்சொன்ன உரிமைகளை அடைவதற்காக ஒன்று பட்டு உழைக்க வேண்டுமென்று தமிழினத்தார் யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறது."

இந்தத் தீர்மானம் காங்கிரஸ்காரர்களான திரு. டி.டி.கே., த. செங்கல்வராயன் ஆகியவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர்களுடைய ஆதரவையும் பெற்று நிறைவேற்றப்பட்ட தென்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

## மாநில சுயாட்சிக்காக முதலில் தோன்றிய கழகம்

இப்படி, 1947 பொங்கல் திருநாளானது தமிழரசுக் கழகத் துவக்க விழாவாக- தமிழினத்தின் ஒருமைப்பாட்டுத் திருவிழாவாக- தமிழகத்திற்குச் சுயாட்சி கோரும் பெருவிழா வாகத் தமிழ் நாடெங்கணும் கொண்டாடப்பட்டது. இது நிகழ்ந்து கால் நூற்றாண்டுக் காலமாகிறது. ஆனால், அன்று தமிழரசுக் கழகம் போட்ட விதை, கன்றாகி, செடியாகி, மரமாகி, மரத்தின் காயாகி, அந்தக் காயும் கனியாகி வருவதைக் காண்கிறோம்.

**தமிழரசுக் கழகம், மாநில சுயாட்சி-அதாவது சுயாட்சித் தமிழகம் கோருவதற்கென்றே தோன்றிய முதல் அமைப்பு என்பது இதுகாறும் எடுத்துக் காட்டிய சான்றுகளால் விளங்கும்.**

கழகம் தோன்றுவதற்கு முன்பு தமிழகத்திலே எந்த அரசியல் தலைவரும், அரசியல் கட்சியும் மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரியதில்லையென்பதனையும் இங்கு நினைப்பூட்ட வேண்டும். அத்துடனன்றி, மாநில சுயாட்சிக்கு எதிராகத் திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையை வற்புறுத்தி வந்தது திராவிடர் கழகம்.

தமிழரசுக் கழகம் தோன்றி, அதன் சார்பில் மாநில சுயாட்சிப் பிரசார இயக்கம் வலுக்கத் தொடங்கியதுமே, அதுகாறும் மாதப் புத்தகமாக வெளிவந்துகொண்டிருந்த ''தமிழ் முரசு'' 1947 ஜனவரி 1ஆம் தேதி முதல் பத்திரிகைச் சட்டப்படி பதிவு செய்து கொள்ளப்பட்ட மாதம் இருமுறைப் பத்திரிகையாக மலர்ந்தது. அதன் முதல் இதழ் வெளியீட்டு விழாவிலே திரு. வி. கலியாணசுந்தரனாரும், திரு.கு.காமராசரும் கலந்துகொண்டு, 'முரசு'க்கும் அதன் கொள்கைகளுக்கும் வாழ்த்துக் கூறினர்.

## அ.நி. மன்றத்தை அன்றே எதிர்த்தோம்!

'தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது' என்பது பழமொழி. அதுபோல, தமிழர், இன்று எவ்வளவுதான் எழுச்சிகொண்டு சுயாட்சி கோரிக் கிளர்ச்சி செய்தாலும், அது காலங்கடந்த முயற்சிதான். நாடு சுதந்திரம் பெற்ற போதே-அரசியல் நிர்ணய மன்றம் இந்தியாவின் அரசியல் அமைப்பைத் தயாரிக்கத் தொடங்கியபோதே-தமிழரெல்லாம் ஒன்றுபட்டு, தமிழகத்திற்கு மட்டுமே சுயாட்சி கோரியிருந்தாலும், அது கிடைத்திருக்கக் கூடும். ஆம்; அன்றிருந்த நிலை அவ்வளவு சாதகமானதாகும். திருவாளர்கள் காமராசர், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, டாக்டர் ப.சுப்பராயன் ஆகிய காங்கிரஸ் காரர்கள் தமிழரசுக் கழகம் தயாரித்த தமிழருக்கும் சுயநிர்ணயம் கோருகின்ற அறிக்கையில் கையொப்பமிட்டதே சான்று.

அன்று தமிழரிலே ஒரு சாரார்-குறிப்பாக, திராவிடர் கழகத்தினர், இந்தியாவிலிருந்து பிரிந்து வாழும் தனித் திராவிட நாடு காண விரும்பினர். அது ஒரு கழகத்தின் கோஷமாக இருந்ததன்றி, மக்கள் சார்பில் ஆளுவோரின் முன்னே வைக்கப்பட்ட ஒரு கோரிக்கையாக அமையவில்லை. ஆம்; தனித்

திராவிட நாட்டுக் கோரிக்கை ஒன்றை மட்டுமே அரசின் முன்வைத்து அதற்கு மக்களுடைய ஆதரவு திரட்டப்படவில்லை. கடவுள் எதிர்ப்பு, மத எதிர்ப்பு, வருணாசிரம எதிர்ப்பு ஆகிய சமூகச் சீர்திருத்தப் பிரசாரத்திற்கே முதலிடம் தரப்பட்டது. இந்த நிலையில் தமிழரசுக் கழகம் ஒன்றுமட்டுமே-இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் பிரிட்டிஷ் திட்டம் வெளியான போதே-அதனைச் செயல்படுத்த அரசியல் நிர்ணய மன்றம் அமைத்தபோதே அதிலுள்ள குறைகளை எடுத்துக் காட்டித் தமிழ் மக்களை எச்சரித்தது.

## முரசு முழக்கம்

தமிழரசுக் கழகம் தோன்றுவதற்கு முன்பு நான் மட்டுமே தனித்து நின்று தமிழினத்தின் சார்பில் அ.நி.மன்ற அமைப்பை ஆட்சேபித்து, எனது ''தமிழ் முரசு''ப் புத்தகத்தில் எழுதினேன். பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டம் வெளியிடப் பட்டதுமே, அதிலுள்ள அரசியல் நிர்ணய மன்ற அமைப்பு பற்றிய பகுதியை எதிர்த்து ''முரசு''வில் நான் எழுதிய சிறப்புக் கட்டுரையின் முக்கிய பகுதிகள் வருமாறு;

> ''அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதில் தேசிய இனங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, மதங்களின் பேரிலே ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களைத் தற்போதுள்ள மாகாண சட்ட சபைகளின் வகுப்புவாரி அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமாம். அவ்வாறு தேர்ந் தெடுக்கப்படும் பிரதிநிதிகள் தங்கள் மதத்தினருக்குப் பிரதிநிதிகளாக இருப்பார்களேயொழிய, தாங்கள் வாழும் மாகாணத்திலுள்ள எல்லா மக்களுக்கும் பிரதிநிதிகளாக இருக்க மாட்டார்கள்; இருக்கவும் முடியாது.

“அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்டும் தமிழ் நாட்டின் முஸ்லிம் பிரதிநிதிகள் தமிழ் நாட்டுக்கு வேண்டிய அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கவனம் செலுத்த மாட்டார்கள். முஸ்லிம் மதத்தினரின் வாழ்விற்காகவே அவர்கள் போராடுவர்.

“அதுபோல, தமிழ் நாட்டின் ‘இந்து’ப் பிரதிநிதிகளும் ஒன்றுபட்ட தமிழினத்தின் உரிமையைக் காக்கவோ, தமிழகத்தில் தமிழரசு காணவோ கவலை கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய ஆசையெல்லாம் அகண்ட இந்துஸ்தான் மீதுதான் இருக்கும்.

“பிறப்பால் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களான முஸ்லிம்களைத் தங்கள் தாய் நாட்டிலேயே அந்நியராக ஆக்கி வைக்கும் ஒரு அரசியல் திட்டத்தை-தமிழினத்தை இந்து என்றும் முஸ்லிம் என்றும் பிரித்து வைக்கும் பிரிட்டிஷ் தீர்ப்பை-இனவுணர்வுடைய எந்தத் தமிழனேனும் ஏற்க முடியுமா?

“மாகாணங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப் படுவதற்கு முன்னரே அரசியல் நிர்ணய சபைக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது கூடாது. ஏனெனில், தற்போதுள்ள நான்கு இனத்தவர் அடங்கிய சென்னை சட்ட சபையில் தமிழ் இனத்தவர் தங்கள் ஜனத்தொகைக்குரிய பிரதிநிதித்துவத்தை அடைய முடியுமா என்பது சந்தேகமே. அந்தச் சட்ட சபையின் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாட்டு அங்கத்தினர்களே அதிகம் என்றாலும், இவர்களிடம் இனப் பற்றோ, மாகாண நலன்களைக் காப்பதிலே கட்டுப்பாடோ சிறிதளவும் கிடையா தென்பதை சமீபகால சம்பவங்கள் மூலம் நன்கு அறிந்திருக்கிறோம்.

"தற்போதைய சட்டசபையிலுள்ள தமிழ்நாட்டு அங்கத்தினர்கள் தமிழகத்தின் எல்லைக்கோடு, அரசியல் அமைப்பு, பொருளாதாரத் திட்டம் ஆகிய தமிழர் வழிப் பட்ட பிரச்சினைகள் மீது போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அல்லர். அவர்கள் தேர்வின்போது ஒரே விஷயந்தான் மக்களின் முன்பு பிரதானமாக வைக்கப் பட்டது. அதுதான் வெள்ளையனை வெளியேற்றுவது என்ற ஆகஸ்டுத் தீர்மானம். அன்றைய நிலையில் அதைவிட வேறொன்றையும் எதிர்பார்த்திருக்கவும் முடியாது; எதிர்ப்பார்ப்பதும் நியாயமல்ல.

"ஆகவே, முதலில் மொழிவாரி மாகாணங்களைப் பிரித்துவிட்டு, அதன் பின் வயதுவந்த வாக்காளர் மூலம் அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் தேர்தலில்தான் தமிழரின் வாழ்வுக்கும் தமிழ் நாட்டின் வளத்துக்கும் பாடுபடக்கூடிய உண்மைத் தமிழர்கள் பிரதிநிதிகளாக வர வழியுண்டு."

("தமிழ் முரசு", ஜூன், 1946)

## எதிர்ப்பு தொடர்ந்தது!

பிரிட்டிஷ் மந்திரிசபைத் திட்டப்படி அரசியல் நிர்ணய மன்றம் அமைவதை நான் எனது "தமிழ் முரசு'வில் எதிர்த்து எழுதியதோடு 'நின்றுவிடாமல், காங்கிரஸ் மேடைகளிலும், வேறு இலக்கிய மேடைகளிலும் அதற்கு எதிர்ப்பிரசாரம் செய்தேன். ஆனால், தமிழ்நாடு காங்கிரசோ, தி.க.வோ, கம்யூனிஸ்டுக் கட்சியோ, தமிழ்நாட்டில் கிளைவிட்டிருக்கிற வேறு எந்தக் கட்சியோ எனக்குக் கை கொடுக்காததால், எனது குரல் டில்லிவரை எதிரொலிக்கவில்லை. அதனால். 'வல்லான் வகுத்தது வாய்க்கால்' என்ற போக்கிலே, மாநிலந்தோறும் அரசியல் நிர்ணய மன்ற உறுப்பினர்கள் மதவாரி தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களைக்

கொண்ட அ.நி. மன்றம் புதுடில்லியிலே கூடிவேலை செய்யத் தொடங்கியது. அதன் பின்னரும், எனது எதிர்ப்பைத் தொடர்ந்து நடத்தி வந்தேன். இதோ, அந்த எதிர்ப்புக் குரல்:

"அரசியல் நிர்ணய சபை வேலை செய்யத் துவங்கி விட்டது.

"அச்சபையின் பிரதிநிதிகள் வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். இந்து, முஸ்லிம், சீக்கியர் என்று மதவாரி ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு, மாகாண சட்டசபைகளிலுள்ள அந்தந்த மதத்தின் அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எனவே, இந்த அ.நி. சபையின் அங்கத்தினர்களை மக்களின் பிரதிநிதிகள் என்று எண்ணாமல் மதங்களின் பிரதிநிதிகள் என்பதே சாலப் பொருந்தும்.

"இவ்வளவு மோசமான ஒரு அமைப்பின் மூலம் மொழிவாரித் தேசிய இனங்களின் சுதந்திரக் கோரிக்கையைப் பூர்த்தி செய் முடியுமா? முடியாதென்றே அஞ்சுகின்றேன்.

"ஆகவே, ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி, இந்தியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வதோடு இந்த அ.நி. சபையின் ஆயுளை முடித்துவிட்டு, சுதந்திர இந்தியாவின் அரசியலை வகுக்க வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதும், மொழிவழித் தேசிய இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததுமான மற்றோர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கான முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட வேண்டும். இதுதான் மொழிவாரித் தேசிய இனங்கள் காங்கிரஸ் பிரதிநிதி களுக்கு இடும் ஆணை.

"இதற்கு மாறாக, காங்கிரஸ், பிரிட்டிஷ் திட்டத்தின் அடிப்படையில் வருங்கால இந்தியாவின் அரசியலை

வகுக்கும் வேலையை மேற்கொள்ளுமானால், அச்செயல் மொழிவாரித் தேசிய இனங்களுக்கு-குறிப்பாக, தமிழ் இனத்தவருக்குக் கேடு சூழ்வதற்கொப்பாகும்.

''தமிழ்நாட்டின் சார்பாக அ.நி.சபையில் கலந்து கொண்டுள்ளவர்களின் தேசபக்திக்கு நாம் மதிப்பு கொடுக்கிறோம். ஆனால், அவர்கள் இந்தியாவின் பிரதி நிதிகளேயொழிய, தமிழ் இனத்தவரின் தனிநலன் களுக்குப் பிரதிநிதிகளல்லர். ஏனெனில், தமிழ் நாட்டின் எல்லை, தமிழர்களின் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பற்றிய எந்தத் திட்டத்தின் மீதும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்லர்.

''பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பில் இந்தியா இருக்கும்வரை தமிழகத்தின் நலன்களைப் பற்றிப் பேசுவது பாவமென்றும் சொல்லப்பட்டது. எனவே, தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் தாங்கள் ஒரு தனி இனத்தின் பிரதிநிதிகள் என்ற எண்ணத்துடன் சுயமாகச் சிந்தித்துச் சுதந்தரமாக நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

''பிரிட்டிஷ் திட்டத்திலுள்ள தொகுதி முறையை ஏற்பதில்லையென காங்கிரஸ் செய்துள்ள முடிவு வரவேற்கத் தக்கதே. ஆனால், தொகுதி முறை தொலைந்து விடுவதனாலேயே மாகாணங்களில் சுதந்திரமுள்ள குடியரசுகள் அமைந்துவிடு மென்று எண்ணுவதற்கில்லை.

''ஏனெனில், காங்கிரஸ் தலைமையினர் மாகாணங் களின் சுதந்திரத்தைவிட மத்திய சர்க்காரின் பலத்தையே பெரிதாக மதிக்கின்றனர்.

''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் அமைக்கப் பட்டுள்ள தற்போதைய மத்திய சர்க்காருக்குள்ள

அதிகாரங்கள் ஏகாதிபத்யம் வெளியேறிய பிறகும் நீடிக்க வேண்டுமென்பதே காங்கிரஸ் தலைமையினரின் கொள்கை.

"இதை சுதந்திர ஆர்வமுள்ள எந்தத் தமிழரேனும் ஏற்க முடியுமா? இந்தியாவிலுள்ள இதர தேசிய இனங்களுடன் உறவுகொள்ளவே தமிழினத்தார் விரும்பு கின்றனர். ஆனால், 'உறவு' என்பது உரிமையைப் பறிகொடுப்பதாக இருக்கக்கூடாது.

"உயிர் நாடியான வர்த்தகம், கைத்தொழில், நிதி ஆகியவற்றில் மாகாணங்களுக்குச் சுதந்திரமில்லை யென்றால், அப்புறம் 'மாகாண சுயாட்சி' என்பது வெறும் ஏமாற்று வார்த்தையாகத்தான் முடியும்.

"காங்கிரஸ் தலைமையினரின் தேசபக்தியில் நமக்குப் பூரண மதிப்புண்டு. ஆனால், தமிழினத்தின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கு எதிராக அவர்கள் காட்டும் எந்தப் பாதையிலும் தமிழர் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது.

"சரித்திரம் காணாத காலந்தொட்டுச் சுதந்திரமாக வாழ்ந்த தமிழினத்தார் தங்கள் தாயகத்தின் சுதந்திரம் ஒன்றை நாடியே காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்தனர். தங்களைப் போன்றே பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்ட இதர தேசிய இனங்களின் சுதந்திர உணர்ச்சியில் இரண்டறக் கலந்தனர்.

"இந்தியாவின் பொது எதிரியாகிய ஏகாதிபத்தியம் வெளியேறுமானால், தேசிய இனங்களின் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு, அந்தந்த இனங்களின் தாயகங்களில் சுதந்திரமுள்ள குடியரசுகள் அமைய வேண்டும். இதை காங்கிரஸ் தலைமையினர் மறக்கவோ,

மறுக்கவோ செய்வார்களானால், காங்கிரசின் அஸ்திவாரத்தையே தகர்த்தவர்களாவார்கள்.

''அ.நி. மன்றத்தில் அங்கம் பெற்றுள்ள தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளே! உங்கள் இனத்தின் உரிமையைப் பறி கொடுக்காதீர்கள். ''அழிந்துவிட்ட சாம்ராஜ்யங்களின் சுடுகாடு டில்லி நகர்'' என்றார் காங்கிரஸ் தலைவர் கிருபலானி. எதிர்காலத்தில் அழியக்கூடிய இன்னொரு சாம்ராஜ்யத்தை அதே சுடுகாட்டில் அமைக்க இடங்கொடுக்காதீர்கள்.

''உங்களுடன் சிறைபுகுந்து சிப்பி ஏந்திச் சீரழிந்தவன் என்ற முறையில் சிரமேற் கரங்கூப்பி யான் செய்யும் வேண்டுகோள் இதுதான்:

''இந்தியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து ஏகாதிபத்தியத்தை வெளியேற்றத் திட்டமிடுவதோடு, இந்த அ.நி. சபையின் ஆயுளை முடித்துவிட முயலுங்கள்.

''தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணயம் என்ற அடிப் படையில் வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மற்றோர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட முயலுங்கள்.

''சுதந்தரக் காற்றால் ஆடிப்பறக்கும் தாயின் மணிக்கொடியின் கீழ் கூடுவதும், சுதந்திர இந்தியாவில் வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மொழிவாரித் தேசிய இனங்களின் பிரதிநிதிகள் அடங்கியது மாகிய அந்தப் புதிய அ.நி. சபைதான் இந்தியாவின் அரசியலை வகுக்கத் தகுதியும் உரிமையும் உள்ளதாகும்.''

('தமிழ் முரசு', நவம்பர் 1946)

## அ.நி. மன்றம் அமைவதெப்படி?

பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தின் ஒரு பகுதியான அரசியல் நிர்ணய மன்றம்பற்றி நான் எனது ''தமிழ் முரசு''வில் குறை கூறியதோடு அமையாமல், அதே சிறப்புக் கட்டுரையில், அந்த மன்றம் எப்படி அமைக்கப்பட வேண்டுமென்பதையும் தெளிவுபடுத்தியிருந்தேன். இதோ, அந்த பகுதி:

''பிரிட்டிஷ் திட்டத்தைப் பின்வருமாறு திருத்தியமைக்க இன உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழரும் எழுச்சி கொண்டு கிளர்ச்சி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

(1) இந்திய சமுதாயத்தை மொழிவழி பல்வேறு தேசிய இனங்கள் அடங்கிய ஒற்றுமையுள்ள ஒரு கூட்டுக் குடும்பமாகக் கொள்ள வேண்டும்.

(2) மாகாணங்களை மொழிவாரி பிரித்து, அந்த மாகாணந்தோறும் தனித்தனி அரசியல் நிர்ணய சபைகள் அமைக்க வேண்டும். அந்தச் சபைகள், மாகாணங்களில் பூர்ண சுதந்திரமுள்ள அரசாங்கங்களை அமைக்க உரிமை பெற்றதாயிருக்க வேண்டும்.

(3) மேற்சொன்ன மாகாண அரசியல் நிர்ணய சபைகள் அனைத்தும்-மாகாண அரசியலைத் தயாரித்த பிறகு-ஒன்றுகூடி, மத்திய யூனியனின் அரசியலமைப்பைத் தயாரிக்க வேண்டும். இந்திய அரசியல் நிர்ணய சபையானது பிரிட்டிஷ் மன்னர் அல்லது பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அனுமதியைக் கோர வேண்டிய அவசியமில்லாமல் இந்தியாவில் சுதந்திரப் பிரகடனம் செய்யவும், அந்நிய ராணுவத்தை வெளியேற்றவும் உரிமை பெற்றதாயிருக்க வேண்டும்.

(4) மத்திய யூனியன் அதிகாரங்கள் மாகாணங்கள் தாமாக விட்டுக் கொடுப்பவையாக இருக்க

வேண்டுமேயொழிய, கட்டாயப்படுத்திப் பறித்துக் கொள்பவையாக இருக்கக்கூடாது.

(5) மத அடிப்படையில் மாகாணங்கள் தொகுதி சேர்வதற்குப் பதிலாக, கலாசாரக் கூட்டுறவின்பேரில் தொகுதியாகச் சேர்ந்து கொள்ள மாகாணங்களுக்கு உரிமை இருக்க வேண்டும். ஆனால், எப்பொழுது- எந்த மாகாணம் அல்லது மாகாணங்களோடு சேர்ந்து கொள்வது என்பதை மாகாண சட்டசபைகளின் இஷ்டத்திற்கே விட்டுவிட வேண்டும்.

இதைத் தவிர, தமிழினத்தை மதக் கோடரி கொண்டு பிளக்கும் ஏகாதிபத்தியத் திட்டத்தையோ, சமயத்தின் பெயரால் பாமர மக்களைச் சுரண்டும் முதலாளித்துவ முறையையோ தமிழர்கள் ஒரு நாளும் ஏற்க மாட்டார்கள். தமிழர்கள் வேண்டுவது தங்கள் வருங்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்க சுய நிர்ணயம், தங்கள் தாய்நாட்டைத் தாங்களே ஆளக் கூடிய சுய அரசு''.

(''தமிழ் முரசு'', ஜூன், 1946)

# தமிழருக்கும் சுய நிர்ணயம்

தமிழரசுக் கழகமானது தமிழகத்திற்குச் சுயாட்சி கோரியதுபோல, அந்தச் சுயாட்சி அரசியலை வகுத்துக்கொள்ள தமிழினத்திற்குச் சுய நிர்ணய உரிமையும் கோரியதென்பதனை இங்கு நான் நினைப்பூட்ட வேண்டும்.

### ''சுயாட்சி'' என்றால் என்ன?

'சுயாட்சி' என்பதன் பொருள், மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்

என்பது மட்டுமன்று; அதைவிடவும் விரிவானதாகும். 'அதிகாரப் பங்கீடு' என்பது, 'மத்திய அரசு' - 'மாநில அரசு' என்ற இருவேறு நிறுவனங்களிடையிலான நிர்வாகப் பிரச்சினையாகும். 'மாநில சுயாட்சி' என்பது, மொழிவாரி தேசிய இனங்களின்-அவற்றின் தாயகங்களின் உரிமைப் பிரச்சினையாகும். இந்த அடிப் படையில்தான் தமிழரசுக் கழகம் தமிழகத்திற்குச் சுயாட்சி கோருகிறது.

இதனை, பிரிட்டிஷ் திட்டத்தை எதிர்த்த போதே நான் தெளிவுபடுத்தியுள்ளேன். ''தமிழருக்கும் சுயநிர்ணயம்'' என்ற தலைப்பில் ''தமிழ் முரசு'' இரண்டாவது புத்தகத்தில் நான் எழுதியது வருமாறு:

> ''பிரிட்டிஷ் திட்டத்தை ஆராயு முன்னர் இந்தியாவின் இயற்கை அமைப்பு, இந்திய சமுதாயத்தின் இனப்பிரிவுகள், அவற்றின் உரிமைகள் ஆகியவற்றைச் சிறிதளவு ஆராய்வது அவசியமாகும்.
>
> ''இந்தியா பல்வேறு நாடுளைக் கொண்ட ஒரு உப கண்டமாகத் திகழ்கின்றது. நடுநிலையுடன் இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்தோர் அனைவரும் இந்த முடிவுக்கே வந்திருக்கின்றனர். சீதோஷ்ண நிலை, மண்வளம், பொருள் உற்பத்தி, மக்களின் பழக்க வழக்கங்கள், பேசும் மொழிகள் முதலிய யாவும் இந்தியாவிலுள்ளதுபோன்று பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன.
>
> ''இந்தியாவிலுள்ள நாடுகளிலே ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தேசிய இனத்தினர் வாழ்கின்றனர். அந்த இனங்களிலே ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மொழி நாகரிகம், சரித்திரம் ஆகியவை இருந்து வருகின்றன. இங்ஙனம் பல நாட்டுப் பண்புகள் அமைந்திருப்பத னாலேயே இந்தியாவை ஒரு உப கண்டமென்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

''மேலும், இந்தியாவின் அரசியல் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்குங்கால் மேற்சொன்ன நாடுகளில் ஒவ்வொன்றிலும் தனித்தனி அரசாங்கங்கள் நடந்து வந்திருப்பதாகவும் தெரிகிறது. பிரிட்டிஷார் வரும் வரையில்கூட இந்தியாவானது மேற்சொன்னவாறு பல்வேறு நாடுகளாகப் பிரிந்து, வெவ்வேறு அரசர்களால் ஆளப்பட்டு வந்திருப்பதை மறுப்பதற்கில்லை. சரித்திரம் தொடங்கிய காலத்திலிருந்து சிற்சில சமயங்களில் மட்டும் இந்தியாவின் பெரும்பகுதி ஒரே மன்னரால் ஆளப்பட்டதாகத் தெரிகிறது. அசோக சாம்ராஜ்யம், மொகலாய சாம்ராஜ்யம் ஆகியவற்றை அதற்குச் சான்றாகக் கூறலாம். அப்போதும், அந்தச் சாம்ராஜ்யங்களுக்குக் கட்டுப்படாமல், கப்பம் செலுத்தாமல் தனித்து நின்று சுதந்திரமாக ஆண்டனர் நம் தமிழ் மன்னர்கள்.

''மேற்சொன்ன சாம்ராஜ்யங்களும் நெடுங்காலம் நீடித்திருக்க முடியாது முறிந்து வீழ்ந்தன. அசோகரது அன்பு மதங்கூட அவரது சாம்ராஜ்யத்தைக் காக்கத் தவறிவிட்டது.

''ஆங்கிலேயர்களால் இந்தியாவில் ஒரே அரசாங்கத்தை நிலைக்கச் செய்வதும், இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்தைப் பரப்புவதும் ஓரளவு முடிந்தது என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் யாருடைய நன்மைக்காக அப்படிச் செய்தார்கள்? நமக்காக அல்ல. ஏகாதிபத்தியம் என்றென்றும் நிலைத்து நிற்கவேயாகும். பல நாட்டுத் தத்துவத்தைவிட ''ஒருநாடு'' என்ற தத்துவமே ஏகாதிபத்தியத்திற்கு உயிராக இருந்தது. ஆனால், பிரிட்டிஷார் கற்றுத் தந்த 'இந்தியா ஒரே நாடு', 'இந்தியர் அனைவரும் ஒரே இனம்' என்ற பாடம்கூட இந்தியாவிலுள்ள தேசிய இனங்கள் தங்கள் தங்கள் தனித்தனி இன உணர்ச்சியையும், பண்பாட்டுப்

பற்றையும் மறக்கச் செய்யத் தவறிவிட்டது. காரணமென்ன? இது தவறானது, இந்தியாவின் இயற்கை நிலைக்குப பொருந்தாதது என்பதேயாகும். இந்தத் தவறான வழியில் இந்தியா முழுவதையும் ஒரே ஆட்சியின்கீழ் வைத்து இவ்வளவு காலம் பிரிட்டிஷாரால் ஆள முடிந்ததற்குக் காரணம் அவர்களது ஆயுத பலமும், பிரித்தாளும் தந்திர புத்தியுமேயாகும். ஒரு தவறை நிலைநாட்ட இன்னொரு தவறு செய்தாக வேண்டுமல்லவா!

''இந்திய நாடுகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இருக்கவும், இந்திய தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் சுயமாக முயற்சி செய்து வளர்ச்சியடையவும் வேண்டுமானால், இந்திய தேசிய இனங்கள் தத்தம் தாயகங்களில் சுயாட்சி நிறுவிக்கொள்ளும் சுயநிர்ணய உரிமை பெற்றவையாயிருக்க வேண்டும்.

''காங்கிரஸ் மகாசபையும் கலாசார அடிப்படையில் பிரதேசவாரி சுயநிர்ணயம் வழங்குவது என்ற கொள்கையை அங்கீகரித்திருப்பதுடன், 'இந்தியாவிலுள்ள எந்த ஒரு பிரதேசத்தையோ, அதில் வாழும் மக்களையோ இந்திய சமஷ்டியில் சேரும்படிக் கட்டாயப் படுத்துவதில்லை' என்று வாக்குறுதியும் கொடுத்திருக்கிறது.

''இனவாரி சுயநிர்ணயம்-சுய அரசு என்ற கொள்கை எல்லாத் தேசிய இனங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலுக்கு வருமானால், அந்தச் சுதந்திர அரசுகள் தாமாக ஒரு மத்திய சமஷ்டியில் தாமதமின்றிக் கலந்து கொள்ளும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டியதில்லை.

''அப்படி அமைக்கப்படும் சமஷ்டி அரசாங்கந்தான் பலம் வாய்ந்ததாக இருக்கும்.

"இனவாரி சுயநிர்ணயம்-சுய அரசு என்றால், தமிழருக்கும் சுயநிர்ணயம்-சுய அரசு என்றே ஆகிறது. இந்தச் சுயநிர்ணய-சுய அரசு உரிமை பிறர் கொடுத்துப் பெற வேண்டிய அவசியமில்லாமல் தமிழரின் பிறப்புரிமையாக இருக்கிறது."

## காங்கிரஸ் கோரிய அ.நி.மன்றம் எது?

வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாகவே அரசியல் நிர்ணய மன்றம் அமைய வேண்டுமென்று விடுதலைப் போரின்போது காங்கிரஸ் மகாசபைகோரி வந்தது. சுதந்திரமோ, கொடுத்து இந்தியர் பெறுவதாக இருக்கக் கூடாதென்பதே காங்கிரஸ் கொள்கையாக இருந்து வந்தது. இதிலே, காங்கிரஸ் தலைவர்களில் வேறெவரையும்விட ஜவகர்லால் நேருதான் உறுதி காட்டி வந்தார். ஆனால் நடந்ததென்ன? 1946-ல் இந்தியா வந்த பிரிட்டிஷ் மந்திரிசபைக் குழுவினர் கொண்டுவந்த திட்டத்தின் மூலம் இந்தியா சுதந்திரம் பெற்றது. அதனால், இந்திய சுதந்திரமானது, அடிமைப்பட்ட சாதியாரான இந்தியர்களுக்கு ஆளுஞ் சாதியாரான பிரிட்டிஷார் கொடுத்துப் பெறுவதாக இருந்தது. வயது வந்தோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அ.நி. மன்றம் அமைவதற்கு பிரிட்டிஷ் திட்டம் வழி செய்யவில்லை. மாறாக, அப்போதிருந்த சட்ட மன்றங்களின் உறுப்பினர்களைக் கொண்டே தேர்ந்தெடுக்க வகை செய்தது. இதைக் காங்கிரசும் ஏற்றுக்கொண்டுவிட்டது.

சட்டமன்ற உறுப்பினர்களையும் இந்து-முஸ்லிம்-கிறித்துவர் என்ற மத அடிப்படையில் பிரிவினை செய்து, ஒவ்வொரு மதத்தாரும் தத்தம் மதத்தாரையே அ.நி. மன்ற உறுப்பினர்களாத் தேர்ந்தெடுக்கப் பணித்தது பிரிட்டிஷ் திட்டம். இதையும் ஏற்றுக்கொண்டது இந்திய தேசிய காங்கிரஸ்.

## சுதந்திரம், பிரிட்டிஷார் தந்த பரிசு!

மதங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அ.நி. மன்றமானது எத்தகைய அரசியலைத் தயாரிக்க வேண்டுமென்பதையும் பிரிட்டிஷ் திட்டமே மேற்போக்காக வகுத்துக் காட்டிவிட்டது. ஆம்; அந்தத் திட்டம், சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்ட நகலாகவும் அமைந்துவிட்டது. இதையும் ஏற்றுக்கொண்டுவிட்டது தேசிய காங்கிரஸ் மகாசபை.

சுருங்கச் சொன்னால், ''வயது வந்த வாக்காளர்களால் சாதி மத வேறுபாடின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்டதாக அ.நி. மன்றம் அமையவேண்டும்; அந்த அ.நி. மன்றத்தில் முதல் கூட்டத்திலே இந்தியாவின் சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட வேண்டும்; அதாவது, இந்தியாவின் சுதந்திரம் பிரிட்டிஷார் கொடுத்து வாங்குவதாக இல்லாமல், இந்தியர்கள் தாங்களே எடுத்துக் கொள்வதாக இருக்கவேண்டும். சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டமானது, பிரிட்டிஷாரின் தலையீடின்றி இந்தியரே தயாரித்துக் கொண்டதாக இருக்கவேண்டும்- என்ற தன் பழைய கொள்கைகளையெல்லாம் இந்திய தேசிய காங்கிரஸ் கைவிட்டுவிட்டது.

ஆம்; பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சில நிபந்தனைகளோடு சுதந்திரம் தந்தார்கள். ஆனால், தங்கள் அரசியலைத் தாங்களே வகுத்துக்கொள்ள இந்திய மக்களுக்கு சுயநிர்ணய உரிமை தரவில்லை.

இந்திய தேசிய காங்கிரஸ் ஆளப்படும் மக்கள் சார்பில் ஆளுஞ் சாதியாரிடம் சரணாகதியடைந்து ஏற்றுக்கொண்ட பிரிட்டிஷ் திட்டத்தின்படி அமைந்த அ.நி.மன்றத்தை மொழிவாரித் தேசிய இனங்களின் பிரதிநிதித்துவ அமைப்பென்று சொல்வதற் கில்லை. அந்த மன்றம் பற்றி அப்போதே நான் வெளியிட்ட கருத்து வருமாறு:

"ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி, இந்தியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்வதோடு, இந்த அ.நி. சபையின் ஆயுளை முடித்துவிட்டு, சுதந்திர இந்தியாவின் அரசியலை வகுக்க வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டதும், இந்திய தேசிய இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததுமான மற்றோர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கான முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட வேண்டும்."

மொழிவாரி தேசிய இனங்கள் தத்தம் தாயகத்தின் அரசியலைத் தாமே தயாரித்துக்கொள்ள அவற்றிற்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென்று நான் 1946-லேயே வற்புறுத்தக் காரணம், அப்போது காங்கிரஸ் மகாசபையே அதை ஏற்றுக்கொண்டிருந்ததுதான். அத்துடன் பிரிட்டிஷ் திட்டத்திலும் சில நிபந்தனைகளோடேனும் மாநிலங்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்ததும் ஒரு காரணமாகும்.

## மதவாதிகள் வகுத்த மதச்சார்பற்ற அரசு

அ.நி. மன்றத்திலே நானும் தமிழரசுக் கழகமும் கோருகிற அளவுக்கு மாநில சுயாட்சிக் கோரிக்கையை யாரும் எழுப்பியதாக அம்மன்றத்தின் நடவடிக்கை ஏடுகளிலிருந்து தெரியவில்லை. காரணம், அ.நி. மன்றத்தின் உறுப்பினர்கள் மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்படுவதற்கு முன்பே மத அடிப் படையிலே தேர்ந்தெடுக்கப் பட்டதுதான்.

இன்று நடைமுறையிலுள்ள அரசு சமயச் சார்பற்றதெனச் சொல்லப்படுகிறது. வேடிக்கை என்னவென்றால், இந்து- இஸ்லாம் கிறித்துவர் என மதவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் மதச் சார்பற்ற அரசி யலைத் தயாரித்தார்கள் என்பதாகும்.

# காங்கிரசின் மனமாற்றம்!

'பழசு'-'புதுசு' என்ற அடைமொழிகளைப் பெற்றுள்ள காங்கிரஸ் வட்டாரங்கள் இன்று மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஏற்க மறுக்கின்றன; எதிர்த்தும் போராடுகின்றன. ஆனால், உண்மையில் இந்தியாவில் சுயாட்சிக் கொள்கையை மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவந்த முதல் அரசியல் கட்சி காங்கிரஸ் மகாசபையேயாகும். நான், மாநில சுயாட்சிக் கிளர்ச்சியைக் கால் நூற்றாண்டுக்கு முன்பு காங்கிரசில் இருந்தபோதுான் துவக்கினேன். அது, காங்கிரசின் கொள்கை என்று கருதித்தான்-காங்கிரசே அதனை உரிய நேரத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரும் என்ற நம்பித்தான் தொடங்கினேன்.

**காங்கிரசுக்குள்ளேயே...**

சுயாட்சிக் கிளர்ச்சியை 1946-ல் நான் தொடங்கினேன். அதன் பின்னரும் தொடர்ந்து எட்டாண்டுக் காலம் தமிழ்நாடு காங்கிரசில் முன்னணியில் இருந்து வந்தேன்.

1952-ல் தமிழ் நாடு காங்கிரஸ் செயற்குழு உறுப்பினனாகவும் அதன் தலைவர் திரு. காமராசரால் நியமிக்கப் பெற்றேன்.

1951-52ல் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

அத்துடன் 1952 முதல் 1954 வரை காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியில் ஆல்டர்மேனாக இருந்து வந்தேன்.

1952 முதல் 1954 வரை சென்னை மாநில சட்ட மேலவை உறுப்பினனாகவும் காங்கிரஸ் சார்பில் பதவி வகித்திருக்கிறேன்.

மேலவையில் ராஜாஜி ஆட்சியின்போது, மாநில சுயாட்சிக் கோரிக்கையை பலமுறை உறுதியாக வலியுறுத்திப் பேசியிருக் கிறேன்.

மாநிலங்களுக்குச் சுயாட்சி கோருவது காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளுக்கு விரோதமான தென்றால், அக் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைமை என்னை காங்கிரசில் நீடித்திருக்க விட்டிருக்குமா? எம்.எல்.சி., ஆல்டர்மேன் பதவிகளை எனக்குத் தந்திருக்குமா?

காங்கிரஸ்காரர்கள் இன்று சொல்வதுபோல மாநில சுயாட்சிக் கோரிக்கை நாட்டுப் பிரிவினைக்கு வழிகோலக் கூடியது என்றால், அந்தக் கோரிக்கையை காங்கிரஸ் மாநாடுகளிலேயும் வற்புறுத்திப் பேசியதற்காக தமிழ்நாடு காங்கிரஸ் என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்காதா? 1954-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்னை வெளியேற்ற முன்வந்ததென்றால், அதற்குக் காரணம், நான் மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரியதன்று. அதற்காக நான் காங்கிரசிலிருந்து கொண்டே தனியாகக் கட்சி அமைத்து நடத்தி வந்ததுதான்.

காங்கிரஸ் மகாசபையும், காந்தியடிகளும், காங்கிரஸ் பெருந் தலைவர்களும் மாநில சுயாட்சிக்கு ஆதரவாகப் பல்வேறு நேரங்களில் வெளியிட்ட கருத்துக்களை இங்கு தொகுத்துக் காட்டுவது எனது கடமையாகும்.

## அரிபுரா தீர்மானம்

விடுதலைப் போராட்டக் காலத்திலேயே விடுதலை பெற்ற இந்தியாவில் மாநிலங்களுக்குப் பரிபூரண சுயாட்சி வழங்கப்படுமென்று உறுதிகூறும் தீர்மானம் காங்கிரஸ் மகாசபையிலேயே ஒருமனத்துடன நிறைவேற்றப்பட்டதுண்டு. நேதாஜீ சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் 1938-ல் அரிபுராவில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தில் மாநில சுயாட்சி வலியுறுத்தப்பட்டது.

''1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம்'' என்ற ஒரு சட்டத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டு அது 1937ல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதிலே, மாநிலங்களுக்குப் ''பொறுப்பாட்சி'' (சுயாட்சி அல்ல) வழங்கப் பட்டது. மத்தியில் ''சமஷ்டி''' அரசு அமையவும், அந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. ஆனால், காங்கிரஸ், அந்தச் சட்டத்திலுள்ள மாநிலப் பொறுப்பாட்சியை ஏற்றுக்கொண்டு, மத்திய சமஷ்டியை ஏற்க மறுத்தது. காரணம், சமஷ்டியானது பூரண சுதந்திரமுடைய மாநிலங்களைக் கொண்டதாக இருக்க 1935-வது ஆண்டு அரசியல் சட்டம் வாய்ப்பளிக்கவில்லை என்பதுதான். அதாவது, அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டிருந்தன என்பதுதான். அரிபுரா தீர்மானம் வருமாறு:

> ''சமஷ்டித் தத்துவத்தைக் காங்கிரஸ் எதிர்க்க வில்லை. ஆனால், உண்மையான சமஷ்டி எப்படி இருக்க வேண்டுமென்றால், ஜனநாயக முறைப்படித் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கியதாயும், சம அந்தஸ்தும் சமவாய்ப்பும் உள்ள சுதந்திரப் பிரதேசங்கள் ஒன்று சேர்ந்ததாயும் இருக்க வேண்டும்.
>
> ''அப்படிக்கின்றி, இப்போது யோசிக்கப்படுவது போல் சமஷ்டித் திட்டம் புகுத்தப்படுமானால், இந்தியா வில் ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதிலாக வேற்றுமை உணர்சிகள் ஏற்படுவதோடு, தேசத்திற்கு உள்ளும் புறமும் பல போராட்டங்கள் ஏற்படும். ஆகவே, உத்தேச சமஷ்டியை இந்தக் காங்கிரஸ் நிராகரிக்கிறது.''

இந்தத் தீர்மானத்தில் சமஷ்டியின் அங்கங்களான மாநிலங் களை ''சுதந்திரப் பிரதேசங்கள்'' என்று சொல்லியிருப்பது சிந்தனைக்குரியதாகும். ஆம்; மத்திய சமஷ்டியானது மாநிலங் களின் விருப்பத்தின்பேரில் அமைவதாக இருக்கவேண்டும்; எந்த ஒரு மாநிலத்தையும் அதன் விருப்பத்திற்கு மாறாக மத்திய சமஷ்டியில் இணைக்கக்கூடாதென்பது அரிபுரா தீர்மானத்தின் பொருள்.

## பிரிந்து வாழவும் உரிமை

ஒரு முறை மத்திய சமஷ்டியில் சேர்ந்துவிட்ட மாகாணம் திரும்பவும் சமஷ்டியிலிருக்க விரும்பாதபோது பிரிந்து வாழவும் அதற்கு உரிமை உண்டு என்பதைக் காங்கிரஸ் மகாசபை தனது கொள்கையாகக் கொண்டிருந்தது.

இந்திய சமஷ்டியில் விரும்பி இணைந்துவிட்ட மாநிலங்களை ''சுதந்திரப் பிரதேசங்கள்'' என்று அரிபுரா காங்கிரஸ் தீர்மானம் கூறுவதனாற்றான், ''சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு'' என்று நான் ''தமிழ் முரசு''க் கட்டுரைகளில் கூறினேன். ஆம்; ''சுயாட்சி'' என்ற பொருளிலேயே ''சுதந்திரம்'' என்ற சொல்லைப் பயன்படுத்தினேன்.

2-4-42ல் புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி மாநிலங்களுக்குப் பிரிந்து வாழும் உரிமை உண்டென்று உறுதிகூறி நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு:

> ''ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக, இந்திய யூனியனுள் இருக்கும்படிக் கட்டாயப்படுத்த காங்கிரஸ் விரும்பவில்லை...''

பாகிஸ்தான் பிரிவினையை ஏற்கும் தீர்மானத்தை முன்மொழிந்து டில்லி நாடாளுமன்றத்தில் பிரதமர் நேருஜி பேசியபோது,

> ''விரும்பாத மாநிலம் அல்லது மாநிலங்களுக்கு இந்திய சமஷ்டியிலிருந்து பிரிந்து வாழும் உரிமை உண்டென்று காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படித்தான் இப்போது பாகிஸ்தானிலுள்ள மாநிலங்கள் பிரிந்து செல்ல அனுமதிக்கப் பட்டிருக்கின்றன.'' என்று கூறினார்.

## மாநில சுயாட்சி பற்றி காந்திஜி

காந்தியடிகள், மாநிலங்கள் விரும்பி விட்டுக் கொடுத்த அதிகாரங்கள் மட்டுமே மத்திய சமஷ்டி அரசிடம் இருக்கவேண்டும்; மற்ற வகையில் ஒவ்வொரு மாநிலமும் 'சுதந்திர அந்தஸ்'துடன் விளங்கவேண்டும் என்றே தமது வாழ்நாள் முழுவதும் வற்புறுத்தி வந்தார்.

சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த தருணத்திலே சுதந்திர இந்தியாவில் மாநிலங்களின் அரசியல் அந்தஸ்தானது எவ்வாறு இருக்கவேண்டுமென்பது பற்றிச் செய்தி நிருபர்கள் எழுப்பிய வினாவுக்கு விடையாக அடிகள் கூறியது வருமாறு:

**நிருபர்** : மாநிலங்கள் தனித்தனியாகப் பிரிந்து சுயேச்சையுடன் வாழ விரும்பினால், அவை எவ்விதமான அரசியலை வகுத்துக்கொள்ள வேண்டும்?

**காந்திஜி** : இந்தியா முழுவதற்கும் எந்தவிதமான பரிபூரண சுயேச்சை அரசியல் வகுக்கப்படுமோ அதுபோன்ற அரசியல்தான். பரிபூரண சுயேச்சைக்கு நான் கூறும் இலக்கணப்படி பார்த்தால் அதில் தவறு ஒன்றும் கிடையாது.

('அரிஜன்', 21-2-47)

ராஜாஜி அவர்கள் தேச விடுதலைக்கு விலையாக லீக் கோரிய பாகிஸ்தானைக் கொடுத்துவிட வேண்டுமென்று முதன் முதலாகக் கூறியதை நாடறியும். அதுபோல, சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே, மாநிலங்களுக்குப் பரிபூரண சுயேச்சை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் எழுப்பினார். மாநில சுயாட்சி அடிப்படையில்தான் 'பாகிஸ்தான்' கோரிக்கை யாளரைத் திருப்தி செய்ய ராஜாஜி முயன்றார்.

## ராஜாஜி அன்று சொன்னது

''காந்தி-ஜின்னா பேச்சு'' என்ற தொகுப்பு நூலுக்கு ராஜாஜி அளித்துள்ள முன்னுரையில், சுதந்திர இந்தியாவில் மாநிலங் களுக்கு வழங்க வேண்டிய சுதந்திரம் பற்றி அவர் கூறியிருப்பது வருமாறு:

''இந்திய தேசம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுத் தான் அரசாட்சி நடைபெற வேண்டும். நாடு முழுவதும் மத்திய அரசாங்கத்தாரால் நடத்தப்பட முடியாது. அரசாட்சியின் வேலைகளையும் அதிகாரங்களையும் இரண்டாகப் பிரித்து, ஒருசில வேலைகளையே மத்திய அரசாங்கத்தின் கைஃயில் கொடுக்க முடியும். மற்ற அரசியல் வேலைகளெல்லாம் மாகாண அரசாங்கத்தின் பூரண ஆதிக்கத்தில் இருந்தே தீரும்.

''மத்திய அரசாங்கத்தின் வேலைகளும் அதிகாரங் களும் வேறு; மாகாண அரசாங்கத்தின் வேலைகளும் அதிகாரங்களும் வேறு. அன்னிர்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய ராணுவ ஏற்பாடுகள், வெளிநாட்டு வியாபார நியமங்கள், நாணயச் செலாவணி விஷயங்கள், ரயில் முதலிய போக்குவரத்துச் சாதனங்கள் இவையும், இவைபோன்ற வேறு விஷயங் களும் மத்திய அரசாங்கத்தின் கீழ் நடைபெறும்.

''மற்ற விஷயங்கள் அனைத்தையும் பூரண அதிகாரத்துடன் மாகாணக் குடியரசு சர்க்கார் நடத்தும்.

''மாகாண ஆட்சியின்மேல் மத்திய சர்க்காருக்கு யாதொருவித அப்பீல் பாத்தியமும் கிடையாது.

''மாகாண சர்க்கார் செய்த காரியங்களையாவது, சட்டங்களையாவது மாற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்குக் கிடையாது.''

(''காந்தி-ஜின்னா பேச்சு''-
''தினசரி'' வெளியீடு; பக். 6-7)

இந்த முன்னுரையை 24-12-44ல் - அதாவது, தேசம் விடுதலை பெறுவதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார் என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

## பிரிட்டிஷ் திட்டத்தில் சுயாட்சி

1946-ல் இந்தியா வந்த பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதுக் குழுவினர் வழங்கிய திட்டத்திலும் காங்கிரசின் கொள்கை மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்குவதுதான் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வருமாறு:

> ''ஐக்கிய இந்தியாவில் தங்கள் கலாசாரமும் சமூக வாழ்க்கையும் பாதிக்கப்படும் என்று முஸ்லிம்களுக்குள்ள அச்சத்தை நாங்கள் உணராமலில்லை. இதற்குப் பரிகாரமாக காங்கிரஸ் சொல்லும் யோசனை என்ன வென்றால், அயல் நாட்டு விவகாரங்கள், தற்காப்பு, போக்குவரத்து போன்ற சில விஷயங்களில் மட்டும் அதிகாரமுள்ள மத்திய சர்க்காரும், இதர விஷயங்களில் பூரண சுயேச்சையுள்ள மாகாணங்களும் அடங்கிய அரசியலமைப்பும், மாகாணங்கள் விரும்பினால் இதர விஷயங்களிலும் மத்திய அரசுக்கு அதிகாரங்கள் அளிக்கலாம் என்பதாகும்...''
>
> (திரு.ந.வெங்கடராமன், பி.ஏ. பி.எல். அவர்கள் எழுதி, 'சக்தி' காரியாலயத்தாரால் வெளியிடப்பட்டுள்ள ''இந்தியக் குடியரசின் அரசியலமைப்பு'' என்னும் நூலில், பக். 57ல் எடுத்துக் காட்டியுள்ளபடி.)

காங்கிரசின் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டுதான் மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்குவதாக பிரிட்டிஷ் திட்டம் கூறியது. அத்திட்டத்தில் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் உரிய அதிகாரங்கள் பற்றிய பகுதிகள் வருமாறு:

"பிரிட்டிஷ் இந்தியாவும், சமஸ்தானங்களும் அடங்கிய இந்திய யூனியன்-அதன் அதிகாரங்கள்-அயல் நாட்டு விவகாரங்கள், தற்காப்பு, போக்குவரத்து, இவ்விஷயங்களை நடத்த நிதி வரவு செலவுக்கான அதிகாரமும் வேண்டியது.

"யூனியனுக்கு விடப்பட்ட விஷயங்கள் நீங்கலாக இதர விஷயங்களும் மிச்ச அதிகாரங்களும் மாகாணங் களுக்கு உரியவையாகும்."

இப்படி, 1946ஆம் ஆண்டு மே 16ல் பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவினர் வெளியிட்ட திட்டத்திலே, "மத்தியில் சமஷ்டி; மாநிலத்தில் பரிபூரண சுயாட்சி" என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதனைக் காங்கிரஸ் மகாசபையும் ஏற்றுக்கொண்டதன் விளைவாகத்தான் பாரதப் பெருநாடு 1947 ஆகஸ்டுப் பதினைந்தில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் பெற்றது என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

"மத்தியில் சமஷ்டி; மாநிலத்தில் பூரண சுயாட்சி" என்று விடுதலைப் போராட்டக் காலத்தில் காங்கிரஸ் வலியுறுத்தி வந்த கோரிக்கைக்கு இணங்கத்தான் பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டத்திலே மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கப்பட்டது.

இதனை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு காங்கிரசை வற்புறுத்தத்தான் நான் காங்கிரசிலிருந்து கொண்டே 1946ல் தமிழரசுக் கழகத்தைத் தொடங்கினேன்.

## அ.நி. மன்றத் தீர்மானம்

பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுத் திட்டப்படி அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய மன்றத்தின் முதல் கூட்டத்திலே ஒருமனத்துடன் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்திலேயும் மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கும் வகையில் சுதந்திர

இந்தியாவின் அரசியல் சட்டம் தயாரிக்கப்படுமென்று உறுதி கூறப்பட்டது. அது வருமாறு:

> "தற்போது பிரிட்டிஷ் இந்தியாவில் அடங்கிய ஆட்சிப் பகுதிகளும் இந்திய சமஸ்தானங்களாக அமைந்துள்ள ஆட்சிப் பகுதிகளும் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியிலுள்ள இந்தியாவில் அமைய விரும்பும் மாநிலங்களும் பிற ஆட்சிப் பகுதிகளும் ஒன்றியமாக இருக்கும்;
>
> "இப்போதுள்ள அவற்றின் எல்லைகளுடனோ அல்லது அரசமைப்புச் சட்டமன்றத்தாலும், பின்னர் அரசமைப்புச் சட்ட விதிகளின்படியும் தீர்மானிக்கப் படக்கூடிய பிற எல்லைகளுடனோ மேற்சொன்ன ஆட்சிப் பகுதிகள் சுயாட்சி (Autonomous)உரிமைத் தகுதியைப் பெற்று தன்னகத்தே வைத்திருக்கும் எஞ்சிய அதிகாரங்களுடன் அமைந்து அரசின் எல்லா அதிகாரங் களையும் கடமைகளையும் நிறைவேற்றும்.
>
> "மைய அரசிடம் நிலைபெற்றுள்ள அல்லது மைய அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும் நீங்கலாக அல்லது மைய அரசிடம் உள்ளடங்கியுள்ள அல்லது பொருள் கொள்ளத்தக்க அதிகாரங்கள் நீங்கலாக மேற்சொன்ன ஆட்சிப் பகுதிகள் ஆட்சி செலுத்தும்."

(22-1-1947ல் அ.நி. மன்றத்தில்
பிரதமர் நேரு முன்மொழிந்த லட்சியத்
தீர்மானத்தின் பகுதி)

## நேருவின் உறுதி மொழி

இந்த உறுதிமொழியை ஒரு அங்கமாகக் கொண்ட அரசியல் தீர்மானத்தை அ.நி. மன்றத்தில் முன் மொழிந்து பிரதமர் நேரு பேசியது வருமாறு:

"நாம் உருவாக்கும் இந்த அரசியல் அமைப்பிலே உறுப்புகள் (மாநிலங்கள்) சுய ஆட்சி பெற்ற பகுதிகளாகத் திகழும். உறுப்புகளிடத்திலேயே "எஞ்சிய அதிகாரங்கள்" தங்கி நிற்கும். அத்தகைய உறுப்பு களிடத்திலேயே அரசின் முழு அதிகாரமும், நிர்வாகப் பொறுப்பும் பொலிவுற்று விளங்கும். யூனியனிடம் உறுப்புக்கள் தாமே விரும்பிக் கொடுத்துள்ள அதிகாரங் களையும், அத்தகைய அதிகாரங்களில் தொக்கி நிற்கின்ற, அன்றி, அவைகளின் விளைவுகளாகவுள்ள பொறுப்புக் களைத் தவிர ஏனைய அதிகாரங்கள் எல்லாம் உறுப்புக் களையே சாரும்.

"இந்த அடிப்படை லட்சியங்களை இந்தியாவில் யாரும் மறுக்கவில்லை; யாரும் மறுக்கவும் கூடாது. நாம் அந்த லட்சியங்களை ஏற்றுக்கொள்ளுகிறோம். அந்த லட்சியங்களில் ஊன்றி நிற்கிறோம். லட்சியத் தீர்மானம் வெறும் தீர்மானம் மட்டுமல்ல. அது ஒரு லட்சிய முழக்கம். நமது உறுதியான முடிவு. நாம் எடுத்துக் கொண்ட சபதம். நிறைவேற்ற வேண்டிய பிரதிக்னை. நம்முடைய வாழ்க்கையின் சமர்ப்பணம்."

## பிரிவினை நோய்க்கு மருந்து

மாநிலங்களுக்குச் சுயாட்சி கோருவது பாரதப் பெருநாட்டில் ஒருமைப்பாட்டிற்கு விரோதமாகும் என்று சிலர் கூறுகின்றனர். இது அறியாமை; அல்லது அறிந்தே சொல்லும் பொய். மாநில சுயாட்சி என்பது பிரிவினை வாதமல்ல; பிரிவினை நோய்க்கு மருந்து. ஆம்; பிரிவினை வாதத்திற்கு எதிர்வாதம். (பிரிவினை கோருவோரைத் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாதவாறு திருப்திபடுத்தும் மாற்று வாதமாகவே "மாநில சுயாட்சி" வாதம் பிறந்தது).

## பிரிவினர்க்கு எதிரான இயக்கம்

தமிழரசுக் கழகமோ, அது பிறப்பதற்கு முன்னர் நானோ, ''பாகிஸ்தான்'' - ''திராவிடஸ்தான்'' - ''தமிழ் ஸ்தான்'' ஆகிய பிரிவினைக் கோரிக்கைகளை ஆதரித்ததில்லை. இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்திய அரசியல் தலைவர்களிடமும், அரசியல் கட்சிகளிடமும் அனுதாபங்கூடக் காட்டியதில்லை. பிரிவினை இயங்கங்களை முழுமூச்சுடன் எதிர்த்து வந்த பெருமை எனக்கும், தமிழரசுக் கழகத்துக்கும் உண்டு. ஆனால், பிரிவினை எதிர்ப்புணர்ச்சி காரணமாகக்கூட மாநில சுயாட்சியை ஏற்க மறுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு நானோ. தமிழரசுக் கழகமோ ஆதரவு அளித்ததில்லை.

ஆம்; தேசிய இனங்களில் உரிமை என்ற பெயரால் வலியுறுத்தப்பெற்ற தேசப் பிரிவினைக் கோரிக்கையையும், தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரால் வலியுறுத்தப்பெற்று வரும் ஏகாதிபத்திய வாதத்தையும் ஏக காலத்தில் எதிர்த்துப் போராடி வந்திருக்கின்றது தமிழரசுக் கழகம்.

இன்னொரு வகையில் சொன்னால், மத அடிப்படையில் நாட்டைத் துண்டாட வேண்டுமென்ற கோரிக்கையைத் தயவு தாட்சண்யமின்றி எதிர்த்து வந்த வரலாறு தமிழரசுக் கழகத்திற்கு உண்டு. அப்படியே, 'ஆரியர்' - 'திராவிடர்' என்ற நிறவழிப்பட்ட வருண அடிப்படையில் நாட்டுப் பிரிவினை கோரிய இயக்கத்திற்கு 'எதிர்ப்பு இயக்கம்' நடத்திய பெருமையும் தமிழரசுக் கழகத்திற்கு உண்டு. சாதி சமய, வருண வேறுபாடுகள் அடிப்படையில் அரசியல் பேசுவதை எனது கழகம் எந் நாளிலும் அங்கீகரித்ததில்லை.

வரலாற்றுப்படி பார்த்தால், மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவதிலே காங்கிரஸ் மகாசபை உறுதிகாட்டத் தவறியதன் விளைவாகத்தான் 1947 ஆகஸ்டு 15லே இந்திய உபகண்டம் துண்டாடப்பட்டது என்பது புலனாகும்.

தேசம் துண்டாடப்படுவதற்குக் காரணமாக இருந்ததென்று கருதப்படும் பழைய முஸ்லிம் லீக், 1906 ஆம் ஆண்டில் பிறந்தது. அந்தக் காலந் தொட்டு 1940 வரை முஸ்லிம் லீக் நாட்டைத் துண்டாடக்கூடிய 'பாகிஸ்தான்' பிரிவினையைக் கோரவில்லை. முஸ்லிம்கள் பெருவாரியாக வாழும் பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புறம், பலுசிஸ்தான், வங்காளம் ஆகிய மொழிவழி மாகாணங்களை அமைத்து, அவற்றிற்குப் பரிபூரண சுயாட்சி வழங்க வேண்டுமென்று தான் கோரி வந்தது.

## பதினான்கு கோரிக்கை

1913 ல் ஜனாப் ஜின்னா அவர்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கையைத் திட்டவட்டமாக வெளியிட்டார். இதோ சான்று:

> ''1913 -ல் ஜனாப் ஜின்னா, மத்திய சர்க்காரின் ஆதிக்கத்திலுள்ள விஷயங்களைச் சாத்தியமான அளவு குறைத்து, மீதமுள்ள விஷயங்களில் மாகாணங்களுக்குப் பூரணமான சுயேச்சை வேண்டுமென்றும், மத்திய சர்க்காரானது ஒரு சமஷ்டியாக இருக்க வேண்டு மென்றும்... வற்புறுத்தினார்''.

(திரு.ஏ.என். சிவராம் எழுதிய ''சுதந்திர இந்திய அரசியல் நிர்ணயம்'' - பக்.29)

இதன் சாரம், ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்பதாகும்.

இந்திய முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதித்துவ அமைப்பாக விளங்கிய முஸ்லிம் லீகின் சார்பில் 1928ல் ''பதினான்கு அம்சக் கோரிக்கை'' என்பதாக ஒன்றை வெளியிட்டார் ஜனாப் ஜின்னா. அதிலே, முதலிரண்டு கோரிக்கைகளும், கடைசிக் கோரிக்கையும் மத்தியில் சமஷ்டியையும் மாநிலங்களில் சுயாட்சியையும் வற்புறுத்துவனவாகும்.

"(1) பிற்கால இந்திய அரசு, சமஷ்டி முறையிலே இருக்கவேண்டும்;

"(2) எல்லா மாநிலங்களுக்கும் பூரண சுயாட்சி இருக்க வேண்டும்;

"(14) இந்திய சமஷ்டியில் சேர்ந்துள்ள மாநிலங்கள் ஒப்புக்கொண்டாலொழிய மத்திய சமஷ்டி அமைப்பை இந்திய சட்டசபை மாற்றக்கூடாது."

(திரு.ஏ. என். சிவராமன் எழுதிய "சுதந்திர இந்திய அரசியல் நிர்ணயம்" என்ற நூலில் பக். 35ல் எடுத்துக் காட்டாகத் தரப்பட்டுள்ளது.)

## இக்பால் சொன்ன தென்ன?

மிகச் சிறந்த தேசிய வாதியாகவும், இந்திய முஸ்லிம்கள் எல்லோருடைய மதிப்புக்குரியவராக விளங்கியவருமான சர். முகமது இக்பால் அவர்கள் 1930 டிசம்பரில் அலகாபாத்தில் கூடிய முஸ்லிம் லீக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அப்போது அவர் மத்தியில் சமஷ்டியையும், மாநிலங்களில் சுயாட்சியையும் வலியுறுத்திக் கீழ்வருமாறு கூறினார்.

> "இந்திய தேசிய ஒற்றுமையை மக்களுடைய உறவிலும், ஒத்துழைப்பிலும் காண வேண்டும். இத்தகைய ஒற்றுமையைக் காண்பதில்தான் இந்தியா வின் வருங்காலமும், ஆசியாவின் வருங்காலமும் நிலை நிற்கும். சுதந்திர இந்தியாவில் ஒரே அரசாங்க (யூனிட்டரி) அமைப்பு என்பது என்னால் நினைக்கக் கூடாத காரியம். "மிச்ச அதிகாரங்கள்" என்பது சுயாட்சி மாநிலங்களிடமே இருக்க வேண்டும். மத்திய சமஷ்டி அரசாங்கத்திடம் அதைச் சார்ந்துள்ள மாநிலங்களால் ஒப்புவிக்கப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே இருக்க வேண்டும்."

(டாக்டர் ராஜேந்திர பிரசாத் எழுதிய "இந்தியா பிரிக்கப்பட்டால் ..." என்னும் நூலில் - பக். 210-211ல் எடுத்துக் காட்டாகத் தரப்பட்டுள்ளது.)

சுதந்திர இந்தியாவில் மொழி அடிப்படையிலே சிந்து, பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புறம், பலுசிஸ்தான், வங்காளம் ஆகியவை தனித்தனி மாநிலமாக அமையும்; மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கப்படும்; மத்தியில் தாமே விரும்பிக் கலந்த மாகாணங்கள் கொண்ட சமஷ்டி அமைக்கப்படும் என்ற கொள்கை அடிப்படையில் இந்திய தேசியக் காங்கிரசுக்கும் அனைத்திந்திய முஸ்லிம் லீகுக்குமிடையே நீண்ட நெடுங்காலம் உறவு நிலவி வந்தது.

1916 ல் முஸ்லிம் லீகுக்கும், காங்கிரசுக்குமிடையே இலக்கு மணபுரியில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதற்கு "இலக்குமணபுரி உடன்படிக்கை" என்று பெயர் தரப்பெற்றது. அதிலேயும், "மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

## மோதிலால் குழுவும் ஆதரித்தது

1928 ல் ஜனாப் ஜின்னா அவர்களையும் உறுப்பினராகச் சேர்த்து, பண்டித மோதிலால் நேருவின் தலைமையில் இந்திய தேசியக் காங்கிரஸ் ஒரு குழு அமைத்தது. சுதந்திர இந்தியா எப்படி அமைய வேண்டும் என்பதனை நன்கு ஆராய்ந்து தனது பரிந்துரையை பிரிட்டிஷ் அரசுக்கு வழங்கியது மோதிலால் குழு. அதிலேயும், "மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி" என்ற கொள்கை ஏற்கப்பெற்றது.

1937ல் ஆறு மாநிலங்களில் காங்கிரசும், வேறு சில மாநிலங்களில் முஸ்லிம் லீக் உள்ளிட்ட காங்கிரஸ் அல்லாத கட்சிகளும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றன. துரதிருஷ்டவசமாக, அப்போதுதான் மாநில சுயாட்சிக் கொள்கையில் காங்கிரசுக்கு

இருந்த உறுதியிலே முஸ்லிம் லீகுக்கு ஐயப்பாடு ஏற்பட்டது. அதன் விளைவாக, 1940 மார்ச்சு லாகூரில் கூடிய முஸ்லிம் லீக் கூட்டத்திலே பாகிஸ்தான் கோரிக்கை முதன் முதலாக வலியுறுத்தப்பெற்றது.

1942ல் இராஜாஜி அவர்கள் முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்குமாறு காங்கிரஸ் மகாசபையைத் தூண்டினார். அப்போது கூட மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்குவதன் அடிப்படையில் பாகிஸ்தான் கோரிக்கையாளரைத் திருப்திப் படுத்துவதுதான் இராஜாஜியின் குறிக்கோளாக இருந்தது.

1942 மார்ச் மாதத்தில் அப்போது பிரிட்டிஷ் அமைச்சராக இருந்த சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பவர் அரசாங்கத்தின் தூதுவராக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அவர் கொண்டுவந்த அரசியல் சீர்திருத்தத்திலே முஸ்லிம் லீக் கோரிய பாகிஸ்தான் பிரிவினை மறுக்கப் பெற்றது. அதற்குப் பரிகாரமாக, ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்பது கிரிப்ஸ் திட்டத்திலே வழங்கப் பெற்றது.

1944 ல் காந்தி - ஜின்னா. சந்திப்பு ஏற்பட்டது. அப்போதும், ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் பூரண சுயாட்சி'' என்ற குறிக்கோளின் அடிப்படையில்தான் ஜனாப் ஜின்னாவைத் திருப்திப் படுத்த காந்தியடிகள் முயன்றார்.

## பிரிட்டிஷாரின் ஆதரவு

1946 மே மாதம் 16 ஆம் தேதியில் பிரிட்டிஷ் அமைச்சரவையின் சார்பில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட தூதுக் குழுவினர் வெளியிட்ட திட்டத்திலேயும் பாகிஸ்தான் பிரிவினை மறுக்கப்பெற்றது. அதற்குப் பரிகாரமாக ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்ற அரசியல் வழங்கப் பெற்றது. பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவினர் வழங்கிய திட்டத்தில் ஒரு பகுதி வருமாறு:

''முஸ்லிம் லீக் கோரிய தனித்த பூரண சுயேச்சையான பாகிஸ்தான் சாத்தியமானதா என்று யோசித்தோம். லீக் கோரிய பாகிஸ்தான் சிறுபான்மை யோர் பிரச்சினையைத் தீர்க்காது என்ற முடிவுக்கு வந்தோம். ஆகவே, இரண்டு நாடுகளாக இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்ற யோசனையை நாங்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கூற முடியாது.

''எல்லோருடைய பாத்தியங்களுக்கும் நியாயமான வகையில், காரிய சாத்தியமான அரசியலமைப்பு அடியிற்கண்ட அடிப்படையில் இருக்க வேண்டும்.

''பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தானங்களும் அடங்கிய யூனியன் - அதன் அதிகாரங்கள் - அயல்நாட்டு விவகாரங்கள், தற்காப்பு, போக்குவரத்து இவ்விஷயங் களை நடத்த நிதி வரவு செலவுக்கான அதிகாரமும் இருக்க வேண்டியது.

''மேலே சொல்லப்பட்ட யூனியன் விஷயங்கள் நீங்கலாக, இதர விஷயங்களும், மிச்ச அதிகாரங்களும் மாகாணங்களுக்கு உரியவை.''

மேலே எடுத்துக் காட்டப்பெற்ற பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவினர் தந்த திட்டத்திலேயும் முஸ்லிம் லீகின் பிரிவினைக் கோரிக்கை மறுக்கப்பெற்று, இந்திய உபகண்டம் முழுவதும் ஒரு சமஷ்டி நாடாகவும், அதிலே முழு சுயேச்சை பெற்ற அங்கங்களாக மாநிலங்களும் அமையக் கூடிய ஒரு திட்டம் வழங்கப் பெற்றது. இதனாலும் ''மாநில சுயாட்சி'' என்பது பிரிவினைக்கு வழி செய்வதன்று; பிரிவினைக்கு முன்னோடித் திட்டமும் அன்று; பிரிவினைக்குப் பரிகாரம் என்றே பிரிட்டிஷாராலும், இந்திய தேசிய காங்கிரசாராலும் கருதப்பட்டு வந்தது புலனாகும்.

## காங்கிரஸ் தடம் புரண்ட வரலாறு

முஸ்லிம் லீகானது மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் கைவிட்ட பின்னரும், காங்கிரசிலுள்ள ''தேசிய முஸ்லிம்கள்'' எனப்படுவோர், அந்தக் கொள்கையை வற்புறுத்தி, அதன் மூலம் பாகிஸ்தான் கோரிக்கை அமுலுக்கு வராதபடிச் செய்து விட முயன்றனர். குறிப்பாக, ஆகஸ்டுக் கிளர்ச்சிக்குப் பின்னர், அப்போது காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்த மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள், மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஏற்குமாறு செய்ய முயன்றார்.

இதுபற்றி மௌலானா ஆசாத், ''இந்தியா விடுதலை வெற்றி'' என்ற தமது நூலில் கூறியிருப்பதைப் பார்ப்போம்.

> ''1946 ஏப்ரல் 2 ஆம் தேதி நான் டெல்லியை அடைந்தேன். இந்தக் கட்டத்தில் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கு மிடையே இருந்த அரசியல் பிரச்சினை யல்ல; இந்தியாவின் வகுப்புப் பிரச்சினைதான் - என்று எனக்குப் புலப்பட்டது. அரசியல் பிரச்சினை முடிவு காணும் கட்டத்தை அடைந்துவிட்டதென்ற நம்பிக்கை சிம்லா மாநாட்டில் எனக்கு ஏற்பட்டுவிட்டது. வகுப்பு வேற்றுமைதான் இன்னும் தீர்வு காணாது நீடித்தது.
>
> ''இந்த விஷயத்தைப்பற்றி நான் தொடர்ந்து கவலையுடன் சிந்தித்தேன். உலகமெங்கும் அரசியல் அதிகாரத்தைப் பிரித்து வினியோகிக்கும் போக்குத்தான் காணப்பட்டது.
>
> ''இந்தியா, பெரிய நிலப்பரப்புள்ள தேசம். மொழி, பழக்க வழக்கங்கள், பூகோள நிலைமைகள் ஆகியவற்றில் நிறைய வேறுபாடுகள் உண்டு. எனவே, இந்தியா

முழுவதற்குமாக ஓர் ஐக்கிய அரசு இருந்து வருவது சிறிதும் சரிப்படாது என்பது தெளிவு.

''ஒரு பெடரல் (சமஷ்டி) அமைப்பின்கீழ் அதிகாரம் பரவலாக வினியோகிக்கப்பட்டிருப்பதுதான் சிறுபான்மை யோரின் பயத்தைத் தணிக்க உதவும்படியாக இருக்கும். விவகாரத்தின் தன்மையைக் கொண்டு பார்த்தால் இந்தியாவின் அரசியல் அமைப்பானது பெடரல் (சமஷ்டி) அமைப்பாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு நான் வந்தேன். கூடியவரை அதிக அளவு அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கி, மாகாண சுயாட்சியை உத்தரவாதப்படுத்தும் வகையில் அது (இந்திய சமஷ்டி) அமைக்கப்பெற வேண்டும்.

''மாகாண சுயாட்சியின் தேவைகள், தேசிய ஐக்கியத்தின் தேவைகள் ஆகிய இரண்டையும் சமரசப்படுத்த வேண்டி யிருந்தது. மத்திய - மாகாண அரசாங்கங்களிடையே அதிகாரங்களையும், பணிகளை யும் வினியோகிப்பதற்குத் திருப்திகரமான ஒரு அடிப்படையைக் கண்டு பிடிப்பதன் மூலமாகத்தான் இதைச் செய்ய முடியும்.

''சில அதிகாரங்களும் பணிகளும் மத்திய பொறுப்புகளாக இருக்க வேண்டியது. அத்தியாவசியம். மற்றவை மாகாணங்களின் பொறுப்புகளாக இருக்க வேண்டும்.

''இந்தியா போன்ற ஒரு நாட்டுக்கு இதுவே மிகச் சிறந்த அரசியல் பரிகாரம் என்ற திருப்தி எனக்கு ஏற்பட்டது. இந்தியா விஸ்தீரணம் மிகுந்த தேசம். மக்கள் தொகை அதிகம். ஏறக்குறைய ஒரே தன்மையுள்ள பிரிவுகளாக வெவ்வேறு மாகாணங்களில் மக்கள் வசிக்கின்றனர். எனவே, அரசியல் நிலைமையையும் நிர்வாக நடைமுறைச் சவுகரியத்தையும் பொதுப்

படையாகக் கருத்தில் கொண்டு அதிகபட்ச சுயாட்சியை மாகாணங்களுக்கு உறுதி செய்வது அவசியம்.''

**சகாக்களும் ஏற்றனர்!**

பாகிஸ்தான் கோரிக்கைக்கு மாற்றுத் திட்டமாக மட்டும் ஆஸாத் மாநில சுயாட்சியை விரும்பினாரில்லை. இந்தியா முழுவதற்குமே - அனைத்து மாநிலங்களுக்குமே - தமது திட்டம் பொருந்தக் கூடியதென்று அவர் கருதினார்.

வியப்பென்னவென்றால், 1945 ஜூன் 26 -ல் திருச்சி மலைக்கோட்டையில் நான் பேசியபோது வற்புறுத்திய அதே அரசியல் திட்டந்தான் - அதாவது, 'மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்பதுதான் 1946 ஏப்ரலில் மௌலானா ஆஸாதின் சிந்தனையிலும் பட்டதாகும்.

தமது திட்டத்தைக் காந்தியடிகளும் காங்கிரசும் ஏற்கும்படிச் செய்ய தாம் மேற்கொண்ட முயற்சிகளையும் ஆஸாத் அவர்களே கூறுகிறார். அது வருமாறு:-

> ''சிறிது சிறிதாக இந்தக் கருத்து என் மனத்துள் உருப்பெற்று வந்தது. பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதுக்குழு இந்தியாவுக்கு வருவதற்குள் இது தெளிவாக எனக்குப் பட்டது. ஆனால், அதுவரை என் சகாக்களுடன் நான் இதைப்பற்றி விவாதிக்க வில்லை. சரியான, பக்குவமான காலம் வரும்போது விரிவாக ஐயத்துக்கு இடமில்லாமல், எனது நிலையைத் தெளிவுபடுத்தி விடலாம் என்று நினைத்திருந்தேன்.
>
> ''1946 ஏப்ரல் 6 ஆம் தேதி முதல் தடவையாக மந்திரி சபைத் தூதுக்குழுவினரை நான் சந்தித்தேன். விவாதத்திற்காக சில வினாக்களை அவர்கள் தயாரித்து அளித்திருந்தனர். முதல் விஷயம் இந்தியாவிலுள்ள வகுப்புப் பிரச்சினை பற்றியதாகும். வகுப்புப்

பகைமையை நான் எப்படிச் சமாளிப்பேன் என்று தூதுக் குழுவினர் என்னைக் கேட்டார்கள். என் மனத்தில் ஏற்கெனவே நான் கொண்டிருந்த முடிவை எடுத்துச் சொன்னேன்.

“என் யோசனையில் சர். ஸ்டாபோர்ட் கிரிப்சுக்கு விசேஷ சிரத்தை பிறந்தது. நெடுநேரம் என்னை அவர் குறுக்குக் கேள்விகள் போட்டு விசாரித்தார். இறுதியில் என் திட்டம் அவருக்குத் திருப்தியளித்ததாகவே தெரிந்தது.”

தூதுக் குழுவினரைச் சந்தித்து இந்தியாவின் வகுப்புப் பிரச்சினையைத் தீர்க்க, ‘‘மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி’’ என்ற திட்டமே உகந்தது என்பதை எடுத்துக்கூறி, அதனை அவர்களும் சிந்திக்கும்படி செய்தபின்னர், தன் காங்கிரஸ் சகாக்களும் தனது திட்டத்தை ஏற்குமாறு செய்ய தாம் மேற்கொண்ட முயற்சிகளை ‘‘இந்தியாவின் விடுதலை வெற்றி’’ என்ற தமது நூலில் ஆசாத் கூறுகிறார்.

“ஏப்ரல் 12-ல் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. அமைச்சரவைத் தூதுக் குழுவுடன் நான் நடத்திய பேச்சைப் பற்றிக் கமிட்டிக்குத் தெரிவித்தேன். வகுப்புப் பிரச்சினைக்கு நான் சொன்ன யோசனையை இன்னும் அதிகமான விளக்கங்களுடனும் வருணித்தேன்.

“காந்தியடிகளும் மற்ற சகாக்களும் என் திட்டத்தை விவாதிப்பதற்கு முதல் தடவையாக இப்போதுதான் வாய்ப்புக் கிடைத்தது. முதலில் காரியக் கமிட்டி சிறிது அவநம்பிக்கையுடன் காணப்பட்டது. எல்லாவிதமான கஷ்டங்களையும், ஐயங்களையும் உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினர். அவர்களுடைய ஆட்சேபனை களுக்கு நான் சரியான சமாதானம் கூறினேன். சந்தேக

மிகுந்த அம்சங்களை விளக்கினேன். பிரேரணை சரியானதுதான் என்ற நம்பிக்கை இறுதியாகக் காரியக் கமிட்டிக்கு ஏற்பட்டது.

''காந்திஜி இதை முழுவதும் ஏற்றுக்கொண்டார். அதுவரை எவராலும் வழி காண முடியாமலிருந்து வந்த பிரச்சினைக்கு நான் தீர்வு கண்டுவிட்டதாகச் சொன்ன காந்திஜி என்னைப் பாராட்டினார். இந்தியா போன்ற ஒரு நாட்டில் சமஷ்டி அரசியல் அமைப்புத்தான் செயலாற்றக் கூடியதென்று காந்திஜி உறுதியாக நம்பினார்.''

## சர்தாரின் சந்தேகம்

அந்நாளில் காங்கிரஸ் தலைவர் ''ராஷ்டிரபதி'' என்று அழைக்கப்பட்டார். அந்த ராஷ்டிரபதி, காங்கிரசின் சாதாரணத் தொண்டனாகிய நான் தென்னகத்திலிருந்துகொண்டு பலவீனமான குரலில் விளம்பரமில்லாமல் 1945 ல் வெளியிட்ட மாநில சுயாட்சிக் கொள்கையை ஓராண்டு கழித்து 1946 ஏப்ரலில் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் பிரேரணை செய்தார். கமிட்டியின் பெரும்பாலான உறுப்பினர்களும் காந்தியடிகளும் ஏற்கும்படிச் செய்தார்.

காரியக் கமிட்டியில் ''இந்து தேசியத்''தின் ஏகப் பிரதிநிதியாக விளங்கிய சர்தார் பட்டேல் நிலை என்ன? இதோ, ஆசாத் கூறுகிறார்.

''மத்திய ஆட்சிக்கு மூன்று அதிகாரங்கள்தான் இருக்குமோ?'' என்று சர்தார் பட்டேல் என்னைக் கேட்டார். செலாவணி, நிதி முதலியவை மத்திய ஆட்சியில்தான் இருக்க வேண்டியவை என்று அவர் சொன்னார். வர்த்தகமும் தொழில்களும் அகில இந்திய அடிப்படையில் தான் வளர்ச்சி காண இயலும். சர்வதேச வர்த்தகங்களும் அதே தன்மையுள்ளவைதான் என்று அவர் சொன்னார்.

" அவரது ஆட்சேபனைகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. என் கருத்துக்களைத் தம்முடையவையாக ஏற்றுக்கொண்டு காந்திஜியே சர்தார் பட்டேலுக்குப் பதிலளித்தார்... ''மத்திய அரசியல் கட்டாய அதிகாரப் பட்டியலில் செலாவணி அல்லது நிதியைச் சேர்க்க வேண்டியது அவசியமில்லை.'' என்று அவர் (காந்திஜி) கூறினார்.

இதன் பின்னர், சர்தார் படேல் என்ன ஆனார் என்பது பற்றி ஆசாத் தமது நூலில் விவரிக்கவில்லை. அவர், மௌனத்தில் மறைந்துகொண்டு, காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் போலும்!

## பாகிஸ்தான் கைவிடப்பட்டது

கதையை வளர்ப்பானேன்; ஆசாத் சொன்ன திட்டத்திற்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டி அனுமதியளித்துவிட்டது. பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவும் இசைவு தெரிவித்துவிட்டது. நாடே வியக்கும் வகையில் முஸ்லிம் லீகும் ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்ற திட்டத்தை ஒரு மனத்துடன் ஏற்றுக்கொண்டு விட்டது. அதாவது, பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டது. அதன்பேரில், காங்கிரசும் லீகும் ஏற்றுக்கொண்ட அடிப்படையில் பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவின் திட்டம் நாடறிய வெளியானது. நேருவின் தலைமையில் இயங்கிய இடைக்கால அமைச்சரவையில் முஸ்லிம் லீக் பிரதிநிதிகளாக ஜனாப் லியாகத் அலிகான் உள்பட பலர் அமைச்சர்களாயினர்.

இதனால், ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்பது, பிரிவினையல்ல; பிரிவினை நோய்க்கு மருந்து என்பது மற்றொரு முறையும் உறுதிப்பட்டது.

ஏற்கெனவே நான் எடுத்துக் காட்டியது போல அ.நி. மன்றத்தின் முதல் கூட்டத்திலேயே "சுதந்திர இந்திய அரசானது பூரண சுயாட்சியுடைய மாநிலங்கள் தாமே விரும்பிக் கொடுத்த அதிகாரங்கள் மட்டுமே கொண்ட சமஷ்டியாக விளங்கும்" என்ற லட்சியத் தீர்மானம் பிரதமர் நேருவால் முன்மொழியப்பட்டு, லீகின் ஆதரவோடு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

லட்சியத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய நேரு ஐயத்திற்கிடமற்ற முறையில் "சுயாட்சி மாநிலங்கள்" என்றுகூடச் சொல்லாமல், "சுதந்திர மாநிலங்கள்" கொண்ட சமஷ்டியாக சுதந்திர இந்தியா அமையும் என்று மிகுந்த எழுச்சியோடு சொற்பொழிவாற்றினார்.

காங்கிரசுக்கும், லீகுக்குமிடையே அதுவரை நிலவிவந்த பகைமை மறைந்து, அ.நி. மன்றத்திலும் மத்திய அரசிலும் இந்த இரண்டு அமைப்புகளும் ஒத்துழைக்குமென்ற நம்பிக்கை பிறந்தது. தேசம் துண்டாடப்படும் கொடுமை தவிர்க்கப்பட்டு, இந்து - முஸ்லிம் சமுதாயங்களின் ஒத்துழைப்போடு புதிய பாரதம் பிறக்கும் என்று இந்திய மக்கள் நம்பினர். மாநிலங்களுக்குச் சுயாட்சியின்மையாலும். மத்தியிலே அதிகாரங்கள் குவிக்கப் பட்டதனாலுந்தான் பாகிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சி தோன்றிய தென்ற உண்மையை உலகம் அனுபவபூர்வமாக அறிந்தது.

நானும், எனது உயர்ந்த கொள்கையான மாநில சுயாட்சி நடைமுறைக்கு வரவிருப்பதையறிந்து பூரிப்படைந்தேன். நாடு சுதந்திரம் பெற்றதும், அடுத்த நடவடிக்கையாக ராஜ்யங்கள் மொழிவாரித் திருத்தியமைக்கப்படும். அப்போது, சுயாட்சித் தமிழகம் அமையும் என்று கற்பனை செய்து கொண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தேன்.

மாநில சுயாட்சியில் மனநிறைவு பெறாத சர்தார் படேல் போன்ற காங்கிரஸ் தலைவர்களும் நாட்டைத் துண்டாடும் வகையிலே சிந்திக்கலாயினர்.

காங்கிரஸ் மீது செல்வாக்கு பெற்றிருந்த இந்து முதலாளிகள் பலம் வாய்ந்த மத்திய அரசையே விரும்பினர். குறிப்பாக, தொழிலும் உள்நாட்டு - அயல்நாட்டு வாணிகமும் மாநிலங்களிடம் விடப்பட்டதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் 'ஏக இந்தியா' என்பதற்கு, 'ஏகாதிபத்திய இந்தியா' என்றே பொருள் கொண்டனர்.

இந்த நேரத்தில், காங்கிரஸ் தலைவர் பதவியில் மாறுதல் ஏற்பட்டது. ஆம்; மௌலானா ஆசாதின் பதவிக் காலம் முடிந்து, அவருக்குப் பதிலாக; பண்டித நேரு தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

கிட்டத்தட்ட இதே நேரத்தில் இந்திய வைசிராயும் மாற்றப்பட்டார். லார்டு வேவல் போய், லார்டு மவுண்ட் பேட்டன் வந்தார். ஏககாலத்தில் ஏற்பட்ட இந்த மாறுதல் இந்தியாவின் அரசியல் சூழ்நிலையிலும் விரும்பத்தகாத மாறுதலை ஏற்படுத்த காலதேவன் செய்த சதி போலும்!

முஸ்லிம் லீக் வைஸ்ராய் நிர்வாக சபையிலும், அ.நி. மன்றத்திலும் சேர்ந்து பணியாற்ற வந்தபின், காங்கிரஸ் தலைவர்கள் போக்கு மாறலானது.

## திடீர் வெடிகுண்டு!

பிரதமர் நேரு செய்தி நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியிலே, ''பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தை காங்கிரஸ் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு விட்டதென்று நம்பலாமா?'' என்ற வினாவுக்கு விடையளிக்கையில்,

> ''பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்திற்குக் காங்கிரஸ் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வில்லை. தனக்கு உகந்ததென்று தோன்றும் வகையில் அந்தத் திட்டத்தை மாற்றவோ, திருத்தவோ காங்கிரசுக்குச் சுதந்திரம் உண்டு.''

என்று கூறினார். இது, முஸ்லிம் லீக் தலைவர்களுக்குக் கவலையைத் தந்தது.

> ''பிரிட்டிஷார் நாட்டிலிருக்கும்போதே - அதிகாரம் தனது கைக்கு வராமலிருக்கையிலேயே - காங்கிரஸ் தனது வாக்குறுதியிலிருந்து பிறழக்கூடுமானால், பிரிட்டிஷார் வெளியேறிய பிறகு மீண்டும் ஜவஹர்லால் அறிக்கையிலுள்ள பாதைக்குக் காங்கிரஸ் திரும்ப தென்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டார் ஜனாப் ஜின்னா.

மாநில சுயாட்சியை காங்கிரஸ் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு விட்டதென்று நம்பித்தான் பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை முஸ்லிம் லீக் கைவிட்டது. ஆனால் மாநிலங்களின் அதிகாரங்களைக் குறைக்கக் கூடியவகையில் பிரிட்டிஷ் திட்டத்தைத் திருத்த காங்கிரஸ் முயற்சி எடுக்குமென நேரு அறிவித்தபின், ஜனாப் ஜின்னா ஆத்திரமடைந்தது இயற்கைதானே!

நேருவின் அறிக்கைபற்றி மௌலானா ஆசாத் தமது நூலில் கூறுவதாவது:

> ''ஜவகர்லாலின் அறிக்கை ஒரு திடீர் வெடிகுண்டு போன்ற அதிர்ச்சியைத் தந்தது. காங்கிரஸ் தலைவரது அறிக்கையின் விளைவாக நிலைமை முழுவதையுமே மறுபரிசீலனை செய்ய வேண்டியிருப்பதாக ஜனாப் ஜின்னா ஒரு அறிக்கை வெளியிட்டார்.
>
> ''இந்தப் புதிய நிலவரத்தைக் கண்டு நான் பெரிதும் கலங்கினேன். மிகவும் சிரமப்பட்டு நான் உருவாக்கிய திட்டம் காங்கிரஸ் தலைவர் போக்கு காரணமாக அழிக்கப்படுவதைக் கண்டேன். நிலைமையைப் பரிசீலனை செய்ய காங்கிரஸ் காரியக் கமிட்டி உடனடியாகக் கூட வேண்டுமென்று வற்புறுத்தினேன்.

> "ஆகஸ்டு 7-ஆம் தேதி காரியக் கமிட்டி கூடியது. காங்கிரஸ் கருத்து அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதுதான். அதை எந்தத் தனி நபரும் காங்கிரஸ் தலைவரும் கூட மாற்ற முடியாதென்பதை நாம் தெளிவாக்கினாலொழிய கிடைத்ததை இழக்காமலிருக்க முடியாதென்று எடுத்துக் காட்டினேன். ஒரு தர்மசங்கடத்தில் சிக்கிக்கொண்டிருப்ப தாகக் காரியக் கமிட்டியினர் கருதினர்".

என்று கூறும் ஆசாத், பிரிட்டிஷ் திட்டத்தை ஏற்பதாக முன்னர் எடுத்த முடிவை உறுதிப்படுத்தும் போக்கில் காரியக் கமிட்டியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்கிறார். மேலும் அவர் தமது நூலில் கூறுவதாவது:

> "நேருவின் அறிக்கை தவறானதென்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். தன் விருப்பப்படி பிரிட்டிஷ் திட்டத்தைத் திருத்திக் கொள்ள காங்கிரசுக்குச் சுதந்திரம் இருப்பதாகச் சொல்வது சரியாகாது.
>
> "மத்திய அரசு சமஷ்டி அமைப்பாக இருக்கு மென்று நாங்கள் உண்மையில் ஒப்புக்கொண்டாகி விட்டது. மத்திய அரசின் அதிகாரப் பட்டியலில் மூன்று அதிகாரங்கள் (பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டுறவு) மட்டுமே இருக்கும். மற்றவை மாநிலங்களின் அதிகாரங்களாக இருக்கும். இந்த விஷங்களை உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மற்றக் கட்சிகளின் இசைவின்றி ஒரு தலைப்பட்சமாக மாற்ற இயலாது."

காங்கிரஸ் காரியக் கமிட்டி நேரு ஏற்படுத்திய குழப்பத்தி லிருந்து நாட்டை மீட்க முன்வந்தது. காங்கிரஸ் காரியக் கமிட்டி புது டில்லியிலே கூடி, 'இரண்டுங் கெட்டான் தனமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி முஸ்லிம் லீகினர் அடைந்த அதிர்ச்சியிலிருந்து அவர்களை மீட்க முனைந்தது. ஆனால், பயன் ஏற்படவில்லை.

பிரிட்டிஷ் திட்டம் வழங்கிய மாநில சுயாட்சிக்கு காங்கிரஸ் குழி தோண்டிவிடுமென்று உறுதியாக நம்பி, பிரிட்ஷார் வெளியேறிய பிறகும் இந்துக்களின் ஆதிக்கத்தில் இஸ்லாமிய மக்கள் சிக்கிவிட நேருமென்று அஞ்சி, முஸ்லிம் லீகின் செயற்குழுவைக் கூட்டினார் ஜனாப் ஜின்னா. அந்தக் குழுவிலே, பிரிட்டிஷார் திட்டத்தை ஏற்று, பாகிஸ்தானைக் கைவிடுவதென்று முன்பு செய்திருந்த முடிவை ரத்து செய்யும் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. அத்துடன, பாகிஸ்தான் கோரிக்கையைத் திரும்பவும் வற்புறுத்திப் பிரகடனம் செய்யப்பட்டது.

## மவுண்ட் பேட்டன் ஓதிய மந்திரம்!

இவ்வளவு மோசமான ஒரு நிலைக்கு இந்தியாவைக் கொண்டுவருமளவுக்கு காங்கிரஸ் தலைவர்கள் மனமாற்றம் அடையக் காரணம் என்ன? படேலையும் பண்டித ஜவகர்லால் நேருவையும் அழைத்துப் பேசியபோது, அவர்கள் காதுகளிலே வைசிராய் லார்டு மவுண்ட் பேட்டன் ஓதியது என்ன? இதோ, மவுலானா ஆசாத் கூறுகிறார்.

> ''முஸ்லிம் லீகின் ஆட்சேபனைக்கு மதிப்புக் கொடுத்துத்தான் பலக்குறைவான மத்திய அரசாங்கத்துக்கு காங்கிரஸ் உட்பட்டது. ஆனால், மொழி, வகுப்பு, பண்பாடு ஆகியவற்றால் பிரிந்து கிடக்கும் நாட்டில், மத்திய அரசாங்கம் பலக்குறைவானதாக இருக்கும் பட்சத்தில், பிரிவினைப் போக்குகளை ஊக்குவிப்பதாகத்தான் ஏற்படும் என்று லார்டு மவுண்ட் பேட்டன் வாதித்தார். முஸ்லிம் லீக் இருக்கவில்லையானால், நாம் பலம் பொருந்திய ஒரு மத்திய அரசாங்கத்துக்குத் திட்டமிட்டு இந்திய ஐக்கியத்தைக் கருத்தில்கொண்டு, ஓர் அரசியல் சட்டத்தைத் தயாரிப்பது விரும்பத்தக்கதாக இருக்கும்; வடமேற்கிலும் வடகிழக்கிலும் சிறிய பகுதிகளைக் கொடுத்துவிட்டு, பலம் பொருந்திய,

உறுதியாக இணைக்கப்பட்ட இந்தியாவை உருவாக்கு வது நல்லதென்று லார்டு மவுண்ட் பேட்டன் யோசனை கூறினார்.

"இந்த வாதம் சர்தார் படேலைக் கவர்ந்தது. சர்தார் படேலை மட்டுமின்றி, ஜவகர்லாலையும் இந்த வாதங்கள் பாதித்தன என்று எனக்குத் தோன்றியது."

('இந்திய விடுதலை வெற்றி' பக். 97)

ஆம்; இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி வழங்குவதைவிட, சிந்து, பஞ்சாப் (மேற்கு), வங்காளம் (கிழக்கு), எல்லைப்புற மாகாணம், பலுச்சிஸ்தான் ஆகிய மாநிலங்களை இழந்து எஞ்சியுள்ள இந்தியாவில் வலுவான மத்திய அரசு ஒன்றை அமைப்பதே நல்லதென்று வைசிராய் மவுண்ட் பேட்டன் யோசனை கூறினார்.

நிலைமை இவ்வளவு தூரம் மோசமான பின்னரும், "மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் சமஷ்டி" என்ற கொள்கையில் காங்கிரசை நிறுத்தி வைக்க முடியுமென்ற நம்பிக்கை ஆசாதுக்கு இருந்தது. காந்தியடிகள், இயற்கையாகவே மாநிலங்களுக்குப் 'பரிபூரண சுதந்திரம்' இருக்க வேண்டும் என்ற கொள்கை யுடையவர். அதனால் அவர் தம்முடைய பொக்கைவாய்ச் சிரிப்பால் படேலையும், பண்டித நேருவையும் மவுண்ட் பேட்டனின் வலையிலிருந்து மீட்டு விடுவாரென்று ஆசாத் நம்பினார். ஆனால், அது நடக்கவில்லை. முதலில் பிரிட்டிஷ் திட்டத்திலிருந்து காங்கிரஸ் பின்வாங்குவதைக் காந்தியடிகள் வெறுத்தார் என்று தமது நூலில் ஆசாத் கூறுகிறார். ஆனால், பண்டித நேரு காந்திஜியைச் சந்தித்துப் பேசி, அவரைச் சரிப்படுத்திவிட்டாராம்.

காங்கிரஸ் மகாசபை 'இந்துயிஸ' - 'இம்பீரியலிஸ'ப் பாதைக்குத் திரும்பிக் கொண்டிருந்த செய்தியை அறிந்ததும் எல்லைப்புற காந்தி அப்துல் கபார்கான் அழுதுவிட்டார் என்கிறார்

ஆசாத். இஸ்லாமிய மக்களெல்லாம் முஸ்லிம் லீக் பக்கம் சரிந்து கொண்டிருந்த நிலையிலும், மதம் கடந்த அரசியலில் கொண்ட நம்பிக்கை காரணமாக இந்துக்கள் நிறைந்த காங்கிரசிலே தஞ்சம் புகுந்திருந்த ஆசாதும், கபார்கானும் தனிமைப்படுத்தப் பட்டுவிட்டனர். துண்டாடப்படும் பாகிஸ்தான் ஆட்சியிலே தாம் என்ன வெல்லாம் தொல்லைப் பட நேருமோ என்று எண்ணி யெண்ணி கபார் கான் விம்மினாராம்.

''பாகிஸ்தான் கோரிக்கையை ஜனாப் ஜின்னா கைவிட்ட பின்னரும் காங்கிரஸ் தலைவர்கள் வலுவில் ஜின்னாவின் சட்டைப்பையில் பாகிஸ்தானைத் திணித்தார்கள்'' என்று மனவேதனையோடு ஆசாத் கூறுகின்றார்.

எப்படியோ, நாட்டைத் துண்டாடக் காங்கிரஸ் தயாராகிவிட்டதன் பலனாகத் தேச விடுதலைக்கான நாள் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. ஆம்; 1947 ஆகஸ்டுப் பதினைந்தில் இந்திய உப கண்டம் இரு வேறு நாடுகளாகப் பிரிந்து விடுதலை பெறும் என்று பிரிட்டிஷார் அறிவித்துவிட்டனர்.

எனக்கென்னவோ, அமராவதிச் சிறையிலே நான் கனவு கண்ட சுயாட்சித் தமிழகம் என் வீட்டு வாசற்படிவரை வந்து, திரும்பவும் ஓடிப்போய் விட்டது போன்ற ஒரு ஏமாற்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஆயினும், தன்னம்பிக்கை என்ற ஊன்று கோலைக் கொண்டு மனம் தளர்ந்து விடாமல் நடை போடலானேன்.

## சுதந்திரப் போர் முடியவில்லை!

ஆகஸ்டுப் பதினைந்தில் தமிழகத்தையும் தன்னகத்தே கொண்ட பாரதப் பெருநாடு பிரிட்டிஷாரின் இருநூறு ஆண்டு கால ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற இருந்தது. ஆம்; ''இந்திய உபகண்டம்' என்று அழைக்கப் பெற்ற நம் விசால பாரதம், 'பாகிஸ்தான்' என்ற புதுப் பெயர் பெற்ற பிரதேசத்தை இழந்து,

''எஞ்சிய இந்தியா'' என்ற அவலப் பெயருடன் விடுதலை பெற இருந்தது. ''சேதமில்லாத இந்துஸ்தானம்'' என்று பாரதியார் பாடியதற்கு மாறாக, 'இந்துஸ்தான்' சேதப்படுத்தப்பட இருந்தது. இந்த நிலைமை என் இதயத்தைப் புண்படுத்தியது. பாட்டாளியாக அரசியலில் புகுந்து, ''பாரத மாதாவுக்கு ஜே!'' என்று பதினாயிரம் பதினாயிரம் முறை வாய் வலிக்கக் குரல் கொடுத்தேனே, அந்தப் பாரத மாதா துண்டாடப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கி இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றிக் கொடுக்க அந்நியர்களான ஆங்கிலேயர்கள் மனமுவந்து முன் வந்தார்கள். ''பிரித்தாளும் தந்திரக்காரர்கள்'' என்பது பிரிட்டிஷாருக்கு இந்திய தேசபக்தர்கள் தந்த பட்டப் பெயர். அந்த பிரிட்டிஷார்கூட, இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரிக்க மறுத்து, பிணைத்து வைத்தே வெளியேற விரும்பினார்கள். ஆனால், சர்தார் படேல் போன்ற இந்து தேசிய வாதிகளும், டாட்டா, பிர்லா, டால்மியா போன்ற இந்து முதலாளிகளும் இந்தியாவைத் துண்டாடச் செய்வதிலே வெற்றி பெற்று விட்டார்கள்.

## வங்கத்துக்கு நேர்ந்த அவதி!

என்னுடைய மனதுக்கு வேதனை அளித்த மற்றொரு விஷயம் என்னவென்றால், வங்க மொழி பேசும் தேசிய இனத்தவரின் தாயகமான வங்காளத்தையும், பஞ்சாபி மொழி பேசும் தேசிய இனத்தவரின், தாயகமான பஞ்சாபையும் துண்டாடத் துணிந்ததாகும்.

தமிழினத்தின் தாயகமான தமிழகத்தின் எல்லைப் பகுதிகளைக் காக்கப் போராடிக் கொண்டிருந்த நான், சகோதர இனத்தவரான வங்காளியருக்கும், பஞ்சாபியருக்கும் நேரவிருந்த விபத்துக்களைத் தாங்கிக் கொள்வது எங்ஙனம்?

1906-ல் லார்டு கர்ஸான் அப்போதிருந்த பெரிய வங்க மாநிலத்தை இரண்டாகத் துண்டாடத் திட்டமிட்டார். ஆம்; இந்துப் பிரதேசம் - இஸ்லாமியப் பிரதேசம் என்ற மதவழி மாநிலங்களாக! அந்தப் பிரிவினையை எதிர்ப்பதிலே பிறந்ததுதான் இந்தியாவின் விடுதலைப் போர்! வியப்பு என்னவென்றால், வங்கப் பிரிவினை எதிர்ப்பிலே பிறந்த இந்திய விடுதலைப் போர், அதே வங்க மாநிலத்தைக் கிழக்கு - மேற்காகத் துண்டாடுவதிலே முடிந்ததுதான்!

லார்டு கர்ஸான் கூட துண்டாடப்படும் கிழக்கு வங்கப் பகுதியை இந்தியாவுக்குட்பட்ட ஒரு நிர்வாகப் பிரதேசமாக வைக்கத்தான் திட்ட மிட்டார். காங்கிரஸ் மேலிடத்துத் தலைவர்களோ, கிழக்கு வங்கத்தை இந்தியாவிலிருந்து பிரித்தெடுத்து சுதந்திர தேசமான பாகிஸ்தானிலே சேர்த்துவிடத் துணிந்தார்கள். எவ்வளவு பெரிய கொடுமை! இத்தகைய கொடுமையைச் செய்யத் துணிந்தது எதற்காக? மாநிலங்கள் சுயாட்சி பெற இருந்ததைத் தவிர்ப்பதற்காகத்தான். மாநிலங்களுக்குச் சுயாட்சி கொடுத்து மத்தியிலே சமஷ்டி அமைப்பதை விட, பத்து கோடி மக்கள் கொண்ட நிலப் பகுதியை இழப்பதற்கும் தயாரானார்கள் இந்தியத் தேசியத் தலைவர்கள்!

## போர்முனைமாறும் நாள்

ஆகஸ்டுப் பதினைந்து நெருங்கிக்கொண்டிருந்த நேரம்! எந்த நாட்டின் சுதந்திரத்திற்காக ஆறு முறை சிறை புகுந்தேனோ, அமராவதிச் சிறையிலே நோய்ப்பட்டு முப்பத்தோரு பவுண்டு அளவில் உடல் நிறையை இழந்தேனோ, அந்தப் பாரத நாடு சுதந்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது என்மனம் துக்கத்திலே தோய்ந்து கிடந்தது. ஆம்; சுதந்திர இந்தியா சுருங்கி விடப்போகிறதே என்ற வேதனையினால்! ஆதிகாலத் தமிழன் வாழ்ந்த 'அரப்பா'வும், 'மொகஞ்சோ - தாரா'வும் பாகிஸ்தானிலே சிக்கி, தமிழனுக்கு அந்நியப் பிரதேசங்களாகி விடுகின்றனவே என்பதனை நினைந்து நெஞ்சம் விம்மியது. இந்தியா இந்தியருக்கு

ஆகும் நாளிலே, தமிழ்நாடு தமிழருக்காகும் என்று நம்பித்தான் ஏழைத் தொழிலாளியாகிய நான் இந்திய விடுதலைப் போரில் இரண்டறக் கலந்தேன். ஆனால் என்ன செய்வது? அந்நியன் வெளியேறிய நாளிலே என் அன்னையகமான கன்னித் தமிழ்நாடு நிர்வாக ரீதியில் தனி மாநிலமாகக் கூட அமையவில்லை என்பதை நினைத்து நினைத்து துக்கப்பட்டேன். அந்தத் துக்கத்திலே எனது எழுதுகோலைத் தோய்த்து ''ஆகஸ்டு - 15'' என்ற தலைப்பிலே 'தமிழ் முரசு' இதழிலே நான் எழுதிய தலையங்கம் வருமாறு:

''ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று இந்தியாவின் - தமிழகத்தின் வரலாற்றில் ஒரு சிறப்பான நாளாகும். இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவை அடக்கி ஆண்டுவந்த ஏகாதிபத்தியம் அன்று இந்தியாவை ஆளும் பொறுப்பை இந்தியத் தலைவர்களிடம் - இந்தியாவில் செல்வாக்கு வாய்ந்த காங்கிரஸ் - லீக் கட்சிகளிடம் ஒப்படைத்து வெளியேறுகிறது. எனவே, ஆகஸ்டு 15 - ஆம் நாளில் விழாக் கொண்டாட வேண்டுமென்று காங்கிரஸும் மாகாண மத்திய அரசாங்கங்களும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

''ஆகஸ்டு 15-ஆம் தேதியின் சிறப்பில் தமிழருக்கும் பெரும் பங்கு உண்டு. வெள்ளையரை வெளியேற்ற நடத்திய சுதந்திரப் போரில் தமிழ் இனத்தார் காட்டிய வீரமும் அடைந்த இன்னலும் வேறு எந்த இனத்தவருக்கும் குறைந்ததல்ல. அதிகமென்று கூறினாலும் பொருந்துவதே. ஆங்கிலப் படைகளை எதிர்த்து நேருக்கு நேர் போர் புரிந்த பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மு, ஆங்கில அதிகாரத்தையும் வாணிகக் கொள்ளையையும் எதிர்த்த வீரர் வ.உ.சி., போலீசாரின் குண்டாந்தடிக்கு இரையான திருப்பூர் குமரன் போன்ற தமிழகத்து வீரர்களின் வரலாறுகள் வஞ்சனையின்றி வாய்மையுடன் எழுதப்படுமானால், உலகமே தமிழ் இனத்தின் தேச பக்தியைக் கண்டு வியக்கக்கூடிய உண்மைகளை அவற்றில் காணலாம்.

''ஆகஸ்டு 15-ஆம் தேதியைத் தமிழர் கொண்டாடு வதன் பொருள் எதுவாக இருக்க வேண்டும். சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழகம் அமைந்துவிட்ட தென்பதா? இல்லவே இல்லை. பாட்டாளி மக்களின் பசி தீர்க்கும் சோஷியலிச ஆட்சி கிடைத்து விட்டதென்பதா? அதுவுமில்லை. பின் எதற்காக நாம் அந்த நாளைக் கொண்டாட வேண்டும்? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

''முதலாவது, நமது முதற் பகையான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி வெற்றி கண்ட நாள்.

''இரண்டாவது, இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டுச் சொல்லொணா இன்னலுற்ற எல்லா வீரர்களுக்கும் தமிழ் நாட்டினர் தலைவணங்கி நன்றி செலுத்த வேண்டிய நன்னாள்.

''ஆகவே, தமிழ் இனத்தை வேண்டுகிறோம். நமக்கு எவ்வளவு குறைகளிலிருப்பினும் நமது முதல் பகைவனை முறியடித்து வெற்றி கண்ட நாளை விழாக் கொண்டாடுங்கள்; சுதந்திரப் போரில் உயிர்நீத்த தியாகிகளுக்குத் தலைவணங்குங்கள். இன்று நம் மிடையே வாழும் வீரர்களுக்கு வாழ்த்து கூறுங்கள்.''

சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே, மொழி வாரி மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரும் கிளர்ச்சிக்குத் தலைவனான எனது நிலை இதுவாக இருக்க, என் காங்கிரஸ் சகாக்கள் எல்லாம் சுதந்திர இந்தியாவிலே பதவிகளைப் பங்கு போட்டுக் கொள்ளப் போகிறோம் என்ற மகிழ்ச்சியிலே, 'ஆனந்தப்பள்ளு' பாடி, ஆகஸ்டுப் பதினைந்தைக் கொண்டாடத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அவர்களை எச்சரிப்பதற் காகத்தான் ''தமிழ் முரசு'' பத்திரிகையிலே மேலே தந்துள்ளவாறு தலையங்கம் எழுதினேன்.

**துக்க நாளல்ல!**

அதே நேரத்திலே, திராவிடத் தனிநாடு கோரிய திராவிடர் கழகத்தார், ''துக்க நாள்'' கொண்டாடத் தயாராகிக் கொண்டிருந் தார்கள். அவர்கள் தலைவர் பெரியார் ஈ.வே.ரா. திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் துக்க நாளை எப்படி எப்படியெல்லாம் கொண்டாட வேண்டுமென்று நாள்தோறும் ''விடுதலை''யில் எழுதிக் கொண்டிருந்தார். ஏதோ மத்திய ஆதிக்கத்தை எதிர்க்கும் அளவிலேனும் ஒருவகையான இனவுணர்ச்சி திராவிடர் கழகத்தினரிடம் இருந்தது கண்டு அந்நாளில் நான் ஆறுதலடைந் தேன். அந்த ஆறுதலோடு, துக்க நாள் கொண்டாடுவதிலுள்ள தவறையும் ''தமிழ் முரசு'' தலையங்கத்திலே எடுத்துக் காட்டினேன். அந்தப் பகுதி வருமாறு;

> ''ஆகஸ்டு 15-ஆம் தேதி தமிழர்களுக்குத் துக்கநாள் என்கின்றனர் சிலர். இது தவறு. இரண்டு முனையில் போரிடும் படையினருக்கு ஒரு முனையில் போர் முடியுமானால் அது எப்படி துக்க நாளாகும்? பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு முனை, வட இந்தியப் பாசிச எதிர்ப்பு முனை ஆகிய இரண்டிலும் தமிழர் வெற்றி கண்டாலொழிய தமிழகத்துக்குப் பூரண விடுதலை யில்லை. தமிழ் இனத்துக்குப் புது வாழ்வில்லை. இது உண்மைதான். என்றாலும் ஏகாதிபத்தியத்தை வெளி யேற்றாத நிலையில், வட இந்திய ஆதிக்கத்தை மட்டும் எதிர்த்து தமிழர் பிற இந்திய இனங்களுடன் இணைந்து நின்று போராட்டம் நடத்தினால் அது ஏகாதிபத்தியத் துக்குத் துணை செய்யும் உள்நாட்டுக் குழப்பமாக இருக்குமேயொழிய, தமிழருக்குப் பூரண விடுதலை அளிக்கும் சுதந்தர இயக்கமாக இருக்க முடியாது. ஆகவே, தமிழர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர் புரிந்ததோ, அந்தப் போர் முடிந்து வெற்றி கண்ட நாளை விழாக் கொண்டாடுவதோ எப்படித் தவறாயிருக்க முடியும்? ஆகஸ்டு 15 ஆம் தேதி துக்கம் கொண்டாட வேண்டியது

இங்கிலாந்தே ஒழிய, இந்தியா அல்ல; தமிழகமும் அல்ல என்பதை இந்த நண்பர்களுக்கு நினைவூட்டு கின்றோம்.

''ஆகஸ்டு 15-ஆம் தேதி கொண்டாட்டத்தில் பங்கு கொண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர் புரிந்த தமிழ் வீரர்களுக்கு வாழ்த்து கூறி வணங்குவது தனிப்பட்ட ஒரு கட்சிக்கோ அல்லது மனிதர்களுக்கோ செய்யும் வணக்கம் அல்ல. தமிழ் இனத்தின் வீரத்துக்கு செய்யும் வணக்கமாகும்.

''ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈடுபட்ட ஒவ்வொரு வீரரும் இனி நாம் நடத்தவிருக்கும் தமிழகத்தின் பூரண விடுதலைப் போருக்குப் பயன்படக்கூடியவர்களே. அவர்கள் தமிழகத்தின் விடுதலையை விரும்பாத வட இந்திய பக்தர்களென்று கூறுவதெல்லாம் வெறும் கற்பனை வாதம். காலம் வரும்போது ஏகாதிபத்தியத்தை எதிர்த்த ஒவ்வொரு வீரத் தமிழனும் வட இந்திய ஆதிக்கத்தையும் எதிர்த்துத் தமிழகத்தில் தனிக் குடியரசை நிறுவுவதைக் காணலாம். எனவே, ஆகஸ்டு 15-ஆம் நாளைத் துக்க நாள் என்போர் விடுதலைக்குப் போரிட்ட தமிழ் வீரர்களின் உணர்ச்சியைப் புண்படுத்துகிறார்கள் என்பது நினைவிருக்கட்டும். இந்த விபரீதச் செயலால் தமிழகத்தின் விடுதலையை விரும்பாத விரோதிகள் முகாமுக்கு அவர்களை விரட்டுகின்றனர் என்றும் எச்சரிக்கிறோம். நேற்றுவரை நிலைமை எதுவானாலும், இனி தேச பக்தியுள்ள எந்தத் தமிழனையும் தமிழர் இயக்கத்திற்கு விரோதமாகச் செல்லும்படி விட்டுவிடக் கூடாது. அப்படிச் செய்வது தற்கொலைக் கொப்பான தாகும்.

''தமிழரசுக் கழகத்தைப் பொறுத்தவரையில் நிலைமை இதுதான்:

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெற்றி கண்ட நாள் என்ற வகையில் ஆகஸ்டு 15-ஐக் கொண்டாடுகிறோம். போர்க்களத்தில் நின்றுதான் கொண்டாடுகின்றோம். ஏனெனில், ஆகஸ்டு 15-க்குப் பிறகு வட இந்தியப் பாசிசத்தை எதிர்த்து நாம் போரிட வேண்டியிருக்கிறது. ஒரு முனையில் முடிந்த போர் மறுமுனையில் துவங்குகின்றது. ஆகவே, ஆகஸ்டு 15-ஆம் தேதி நமக்கு போர் நிறுத்த நாளல்ல. போர் முனையும் போர் முறையும் மாறும் நாள். அந்நாளில் நமக்குள்ள களிப்பு ஆகாயப் படை, தரைப்படை, கப்பற்படை முதலியவற்றில் பலம் பொருந்திய ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தை - முதற்பகையை வீழ்த்தி விட்டோம் - வெளியேற்றினோம் - வெற்றி கண்டோம் என்பதேயாகும்.

"எனவே, தமிழினத்தவரை - தமிழரசு வாதிகளை வேண்டுகிறோம்:

"ஆகஸ்டு 15-ஆம் தேதி விழாவில் பங்கு கொண்டு வ.உ.சி., திருப்பூர் குமரன் போன்ற வீரத் தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துங்கள். இன்று நம்மிடையே வாழும் வீரர்களுக்கு வாழ்த்து கூறுங்கள்.

"அதே நேரத்தில், சுதந்திரத் தமிழகத்தை, சோசியலிசக் குடியரசை அடைந்தே தீருவோம்; அதை எதிர்ப்பவர்கள் எவரானாலும் அவர்களின் எதிர்ப்பை முறியடித்து, தமிழ் நாட்டில் தனியரசை - தமிழரசைக் கண்டே தீருவோம் என்று உறுதி மேற்கொள்ளுங்கள்.

"சுதந்திர இந்தியா வாழ்க!"

## வருத்தமும் மகிழ்ச்சியும்

தேச மக்களெல்லாம் - குறிப்பாக, என் தமிழ்நாட்டு மக்களெல்லாம் பெற்ற சுதந்திரத்தைப் பற்றித் தவறான மதிப்பீடு

செய்துகொண்டு, வெள்ளையன் வெளியேறிவிட்டதனாலேயே எல்லாம் கிடைத்து விட்டதென்று ஏமாளித்தனமாக நம்பி, ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, - ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று - ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'' என்பதாகப் பாடியாடி, விடுதலை விழாவைக் கொண்டாடினார் கள். ஆகஸ்டுத் திங்கள் முழுவதிலும் எங்கும் ''சுதந்திரம்'' என்பதே பேச்சாக இருந்தது.

ஒருபுறம் மகிழ்ச்சி, இன்னொருபுறம் மனவேதனை என்ற நிலையிலே நானும் விடுதலை விழாவில் பங்கு கொண்டேன்; துக்கம் கொண்டாட வில்லை. எதிர்காலத்தில் சுதந்திர இந்தியாவில் ''சுயாட்சித் தமிழகத்''தைப் படைக்க வேண்டிய பொறுப்பை என் மெலிந்த தோள்களின்மீது நானே சுமத்திக் கொண்டிருக்கிறேன் என்ற பொறுப்புணர்ச்சியோடுதான் விடுதலை விழாவில் பங்கு கொண்டேன்.

## சுயாட்சி, பிரிவினையாகுமா?

மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கிவிட்டால் பின்னர் பிரிவினைப் போக்கு வளர்ந்து விடக் கூடுமென்று கூறப்படுகிறது. இது, ஆதிக்கவாதிகள் காட்டும் பூச்சாண்டி உலக சமஷ்டி நாடுகளின் வரலாறு இதற்கு எதிராகவே இருக்கிறது.

### சோவியத் யூனியனிலே...

''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி என்பது இந்தியாவில் மட்டுமே முதன் முதலாகப் பரீட்சிக்கப்பட விருக்கும் புதிய தத்துவமன்று. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் பழைய சித்தாந்தமாகும். மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்ட சமஷ்டி நாடுகளில் ஒன்றில்கூட பிரிவினைப் போக்கு வலுத்து, நாட்டின்

ஒருமைப்பாடு குலைந்து போனதாக வரலாறு கூறவில்லை. மாறாக, சுயாட்சி பெற்ற மாநிலங்கள் தேச ஒற்றுமையைக் காத்து வருவதையே காண்கிறோம்.

சோவியத் யூனியன் மொழிவாரிக் குடியரசுகளைக் கொண்ட கூட்டுக் குடியரசு நாடாகும். அங்கு மாநிலங்கள் விரும்பினால் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து வாழவும் அரசியல் சட்டப்படி அவற்றுக்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் சோவியத் யூனியன் அமைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் அங்கு பிரிவினைப் போக்கு தலைகாட்டவே இல்லை. மாறாக, 1917ல் வர்க்கப் புரட்சி வெற்றிபெற்று சோவியத் யூனியன் அமைந்தபோது அந்த யூனியனுக்கு வெளியிலிருந்த அண்டை நாடுகள் சில, நாளடைவில் தாமே விரும்பி சோவியத் யூனியனிலே இணைந்துள்ளன. ஆம்; உண்மையான சமஷ்டியில் மாநிலங்களின் உரிமை பறிக்கப்படமாட்டா வென்பதை, சோவியத் ஆட்சி தன்னைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு உணர்த்தியதன் விளைவாகவே அந்த நாடுகள் சோவியத் யூனியனில் விரும்பி இணைந்தன.

### அமெரிக்காவிலே...

அமெரிக்கப் பெருநாடு பல்வேறு குடியரசு நாடுகளைக் கொண்ட சமஷ்டிக் கூட்டரசாகும். அமெரிக்க சமஷ்டி அமைந்து சுமார் 200 ஆண்டுகளாகின்றன. இவ்வளவு நீண்ட காலத்திலே அந்த சமஷ்டியில் பிரிவினைப் போக்கு தலைகாட்டியதில்லை. அமெரிக்க சமஷ்டி அரசியல் முதன் முதலாக வகுக்கப்பட்டபோது மாநிலங்கள் விரும்பினால் பிரிந்து வாழலாம் என்றும் அதிலே விதி இயற்றப்பட்டது. அப்படி இருந்தும், எந்த ஒரு மாநிலமும் அந்த விதியைப் பயன்படுத்தி அமெரிக்கக் குடியரசிலிருந்து பிரிந்துச் செல்லவில்லை. மாறாக, 12 மாநிலங்களைக் கொண்டு ஆரம்பமான அமெரிக்க சமஷ்டியானது, இன்று 52 மாநிலங்களைக் கொண்டதாக விரிவடைந்துள்ளது. ஆம்; ஆரம்பத்தில் அமெரிக்க

சமஷ்டியில் சேர விரும்பாத பிரதேசங்கள் நாளடைவில் தாமாகவே வலுவில் வந்து சேர்ந்துகொண்டன. அத்துடனன்றி, விரும்பினால் பிரிந்து வாழ மாநிலங்களுக்கு உரிமையளிக்கும் விதியையும் அரசியல் சட்டத்திலிருந்து அகற்றிவிட மாநிலங்களனைத்தும் ஒரு மனத்துடன் இசைந்தன.

மலேசியாத் தீவு ஒரு கோடி மக்களைக் கொண்ட சின்னஞ்சிறு நாடு. இந்தியா, பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்ட காலத்திலே மலேசியாவும் அடிமைப்பட்டது. இந்தியா விடுதலைப் பெற்றதை யடுத்து மலேசியாவும் விடுதலை பெற்றது. அப்படி விடுதலை பெற்ற ஆரம்ப கட்டத்திலேயே அதன் அங்கங்களான பினாங்கு போன்ற மாநிலங்களுக்கு முழு அளவு சுயாட்சி வழங்கப்பட்டது. மிச்ச அதிகாரங்கள் உட்பட மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுங்கம் கூட மாநிலங்களுக்கே உரிமையாக்கப் பட்டுள்ளது. பினாங்கு மாநிலத்திலிருந்து மலேசியாவின் மற்ற பகுதிக்கு வருங்கால் சுங்கச் சோதனையுண்டு.

மலேசியாவின் மக்கள் தொகையிலே, பூர்வ குடியினரான மலாய்க்காரர்கள் 45 சத விகிதம்தான். முன் எப்போதோ வந்தேறியவர்களான சீனர்கள் 40 சத விகிதத்தினர். இந்தியர்கள் 10 சதவிகிதத்தினர். நிலைமை இப்படி இருந்தும், மலேசியாவின் மக்கள் தொகையில் சரி பாதியினராகக் கூட இல்லாத மலாய்க்காரர்கள் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கத் தயங்கவில்லை.

உலக சமஷ்டி நாடுகளின் வரலாறு காட்டும் இந்த உண்மைகளுக்கு மாறாக, மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கிவிட்டால் பிரிவினைப் போக்கு வலுத்துவிடுமென்று பூச்சாண்டி காட்டுகின்றனர் இங்குள்ள ஆதிக்கவாதிகள்!

அமெரிக்காவிலே மதவழிப்படி பார்த்தால், மக்களில் பெரும்பாலோர் கிறித்துவர்கள். உடையாலும் உணவாலும் இதர பழக்க வழக்கங்களாலும் ஒரே விதமான நாகரிகத்தைப்

பின்பற்றுபவர்கள். ஆங்கில மொழியே அந்த நாட்டின் மொழியாக இருந்து வருகிறது. இப்படி மதம் மொழி நாகரிகம் ஆகியவற்றில் ஒருமைப்பாடுடைய மக்களைக் கொண்ட அமெரிக்காவிலே மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கப்பட்டிருக்கிறது. ஆம்; ''யூனிடரி'' ஆட்சி முறையில் அமெரிக்காவில் தேசிய ஒருமைப் பாடு காண்பது சாத்தியமில்லை என்பது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ''சமஷ்டி'' முறைதான் சிறந்ததென்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலே, மொழி வேறுபாடுகளும் மத வேறுபாடு களும் நாகரிக வேறுபாடுகளும் நிறைய இருக்கின்றன. இந்த நாட்டிலே ''யூனிடரி'' முறையில் ஒருமைப்பாடு காண்பதென்பது இயலாத காரியம். ''இயன்றிருக்கிறதே'' என்று கூறலாம். இன்றுள்ள அரசியல் அமைப்பு நிலையானதன்று. இது நீடித்தால், தேசிய ஒருமைப்பாடு என்றேனும் ஒருநாள் குலைவது உறுதி. இன்றுள்ள ஒருமைப்பாடுடைய இந்தியாவானது, அடித்தள மில்லாமல் எழுப்பப்பெற்ற கட்டிடம் போன்றது. அதனாற்றான், ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்ற சித்தாந்தப்படி நடைமுறையிலுள்ள அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டு மென்கிறது தமிழரசுக் கழகம்.

இந்திய உபகண்டத்திலே, மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்க மனமொப்பாததால்தான் பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டது. பாகிஸ்தானிலும் மாநில சுயாட்சி மறுக்கப்பட்டதால்தான் கிழக்கு வங்கம் தனியாகப் பிரிந்து 'வங்க தேசம்' ஆகிவிட்டது!

இனியும் தொடர்ந்து மாநில சுயாட்சி மறுக்கப்படுவது புத்திசாலித்தனம் தானா?

# மாநில சுயாட்சிப் பிரசாரம்

நான் விரும்பியது போல பிரிட்டிஷ் திட்டப்படி மதவாரித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய மன்றம் கலைக்கப்படவில்லை. நாடு துண்டாடப்பட்ட பின்னரும் தொடர்ந்து வேலை செய்தது. ஆனால், பிரிட்டிஷ் மந்திரி சபை வழங்கிய திட்டப்படியல்ல. அ.நி. மன்றத்தின் முதல் கூட்டத்தில் பிரதமர் ஒருமனதுடன் நேருவால் முன் மொழியப்பட்டு ஒருமனதுடன் நிறைவேற்றப்பெற்ற லட்சியத் தீர்மானத்தின் படியுமல்ல. பிரிட்டிஷ் திட்டத்தையும் லட்சியத் தீர்மானத்தையும் கைவிடுவதென்று முடிவு செய்தது அ.நி. மன்றம்!

இந்து தேசியவாதிகளும், இந்து முதலாளிவர்க்கமும் நிர்ப்பந்தித்ததற்கேற்ப, 'யூனிடரி' முறையில் அரசியல் சட்டத்தைத் தயாரிக்க அ.நி. மன்றம் பயன்படுத்தப்பெற்றது. இந்தக் கொடுமையை எதிர்த்து அப்போதே குரல் கொடுத்த ஒரு இயக்கம் உண்டென்றால், அது தமிழரசு இயக்கம்தான்!

## செயற்குழு செய்த முடிவு

அரசியலமைப்புச் சட்டத்தின் நகல் தயாரிக்கப்பட்டு, அதை நாட்டு மக்களின் கவனத்துக்கு வைத்தபோதே, அதனை எதிர்த்து 4-4-48ல் கூடிய தமிழரசுக் கழகச் செயற்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அ.நி. மன்றத்தலைவர், பிரதமர் நேரு, காங்கிரஸ் மகாசபைத் தலைவர் ஆகியோருக்கு அத்தீர்மானத்தின் நகல் அனுப்பப்பட்டது. தீர்மானம் வருமாறு:

> "இந்திய அரசியல் நிர்ணய மன்றத்தாரால் தயாரிக்கப்பட்டு அண்மையில் வெளியான சுதந்திர இந்தியாவின் அரசியல் நகலை இக்கழகம் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன். ஆராய்ந்ததில், அதில் பின்வரும்

முக்கிய குறைபாடுகளை, தமிழினத்தாரின் நினைவுக்குக் கொண்டு வருவது தனது கடமையெனக் கருதுகிறது.

''தமிழர் தனி இனம்; தமிழகம் தனி நாடு என்ற உண்மைகள் அங்கீகரிக்கப்படவில்லை.

''புதிய அரசியல் அமுலுக்கு வருவதற்குள் மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டு விடுமெனத் தெளிவாகக் கூறப்படவில்லை. ஆந்திர மாகாணப் பிரிவினையைப் பற்றி மட்டும் அரசியல் நகலின் முகவுரையில் குறிப்பிடப் பட்டிருப்பதால், உடனடியாக ஆந்திரம் பிரிக்கப்படுமென்றும் அதற்குப் பின்னரும் தமிழகம் மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று பகுதிகளும் இன்றுள்ளதே போன்று ''சென்னை மாகாணம்'' என்ற பெயரால் இருந்துவரும் என்றும் யூகிக்க இடமிருக்கிறது.

''சமஸ்தானங்களுக்கும், மாகாணங்களுக்கும் இடையே பாரபட்சம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, சமஸ்தானங்கள் அயல்நாட்டு உறவு, போக்கு வரத்து, பாதுகாப்பு ஆகிய மூன்று விஷயங்களையும் இந்திய யூனியனுக்குத் தந்துவிட்டு மற்ற எல்லா அதிகாரங்களையும் கொண்டு, தனிக் கொடியுடன் கூடிய சுதந்திர அங்கங்களாக இருக்க அனுமதிக்கப்பட்டிருக் கின்றன. ஆனால், 'பலம் வாய்ந்த மத்திய சர்க்கார்' என்ற பெயரால், மாகாணங்களுக்குரிய கல்வி, கைத்தொழில், வாணிபம் இன்ன பிறவற்றில் மத்திய அரசாங்கம் தனது விருப்பப்படியெல்லாம் ஆதிக்கம் செலுத்த இடமளிக்கப் பட்டிருக்கிறது.

''மாகாண வாசி அல்லாதவரும் கவர்னராக வரமுடியும். மாகாண கவர்னரை குடியரசுத் தலைவரே தேர்ந்தெடுப்பார். இதில் மாகாண மக்களுக்கு உரிமை

இல்லை. ''மாகாண அரசாங்கங்களுக்கென ஒதுக்கப் பட்டுள்ள விஷயங்களைக்கூட மத்திய அரசாங்கம் இஷ்டப்பட்டபோது (மத்திய மேல் சபை மூலம்) எடுத்துக் கொள்ள உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாகாணங்களிடமிருந்து மத்திய அரசு எடுத்துக் கொண்டுள்ள அதிகாரங்களில் எதையேனும் அவசிய மானபோது திருப்பிக் கேட்க மாகாணங்களுக்கு உரிமை தரப்படவில்லை. ''மிச்ச அதிகாரங்கள்'' மாகாணங் களுக்கு உரிமையாக்கப்படாமல், யூனியன் ஆட்சிக்கே தரப்பட்டுள்ளன.

''வருங்கால இந்தியக் குடியரசு. சோஷலிசக் குடியரசாகத்தான் இருக்க வேண்டும் என்பதைக் கொள்கையளவில் கூட புதிய அரசியல் அங்கீகரிக்க வில்லை.

''இதுவரை கூறியவற்றிலிருந்து புதிய அரசியலா னது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த இந்தியாவின் அரசியலின் மற்றொரு நகலாக, சில விஷயங்களில் அதைவிடவும் மோசமானதாகக்கூட இருக்கிறது என்பதே கழகத்தின் திடமான கருத்து.

''ஆங்கிலேயர் ஆதிக்கம் அகன்றதும், வயது வந்தோர்க்கு வாக்குரிமை அளிக்கப்பட்டதும் தவிர, அடிமை இந்தியாவுக்கும், சுதந்திர இந்தியாவுக்கும் உள்ள அரசியல், சமூக, பொருளாதார மாறுதல்கள் ஒன்று மில்லை.

''எனவே, இந்த அரசியலைக் கொண்டு புதிய தமிழகம் கிடைத்துவிடுமென்றோ, தமிழினத்தார் தமது சொந்த முயற்சியில் சுக வாழ்வு பெற்றுவிட முடியு மென்றோ எண்ணுவதற்கில்லை.

"என்றாலும், இக் கழகம் நம்பிக்கையிழந்து விடவில்லை. புதிய அரசியலில் உள்ள வரவேற்கத்தக்க ஒரே நல்ல அம்சமான வயது வந்தோரின் வாக்குரிமையைப் பயன்படுத்த, இந்தப் பிற்போக்கான அரசியல் திட்டத்திலிருந்து தமிழகத்தை விடுவிக்க முடியுமென்று நம்புகிறது. எனவே, இந்திய உபகண்டத்தை மொழிவாரி நாடுகளாகப் பிரித்து, அதில் வாழும் மொழிவாரித் தேசிய இனங்கள் தத்தமக்கென சுதந்திர சோஷலிசக் குடியரசு அமைத்துக்கொள்ள சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டு மென்ற கிளர்ச்சியைச் சட்டத்திற்குட்பட்டு, அமைதிகரமான முறையில் தொடர்ந்து நடத்துவதென்று இக்கழகம் தீர்மானித்திருக்கிறது."

அரசியலைப்பு நகல்பற்றி நாட்டிலுள்ள அரசியல் நிபுணர்கள் தத்தம் கருத்தை வெளியிட்டனர். அவர்களிலே சிலர் மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகார்ரங்கள் வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தின் நகலைத் திருத்த அ.நி. மன்ற உறுப்பினர்கள் முயற்சிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள். அவர்கள் கூட மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கவேண்டுமென்று கோரவில்லை.

## கருத்தரங்கு

திராவிடத் தனிநாடு கோரியவர்கள் அரசியல் சட்ட நகலுக்கு எதிராகக் கிளர்ச்சியோ, பிரச்சாரமோ செய்ய முன்வரவில்லை. என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும். தமிழரசுக் கழகம் நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்தி அரசியலமைப்பு நகல் திருத்தப்படாமல் சட்டமாவதால் தமிழினத்துக்கு விளையக்கூடிய கேடுகளை எடுத்துக் காட்டியது.

டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் பெரு முயற்சியால் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திலே அரசியல் நகல் திட்டம் பற்றி விவாதிக்கும் கருத்தரங்கு 30-8-49ல்

நடத்தப்பெற்றது. அதற்கு நான்தான் தலைமை வகித்தேன். 'தினமணி' ஆசிரியர் ஏ.என். சிவராமன், எஸ். முத்தையா முதலியார், டாக்டர் ஆரோக்கியசாமி, மற்றும் பலர் விவாதத்தில் கலந்து கொண்டனர். அதிலே மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினேன். அரசியல் நகலை அப்படியே சட்டமாக்க அனுமதிப்பது தற்கொலைப் போக்காகும் என்றும் கூறினேன்.

நாடு சுதந்திரம் பெற்று அ.நி. மன்றம் வேலை செய்து கொண்டிருந்த நேரத்திலே தமிழினத்தின் கோரிக்கையை அ.நி. மன்றத்துக்கு உணர்த்தும் வகையில் தமிழ்த் தலைவர்கள் பன்னிருவர் கையொப்பமிட்ட கூட்டறிக்கை யொன்றைப் பத்திரிகைகளில் வெளியிட்டேன்.

மாநில சுயாட்சிக் கோரிக்கைக்குத் தமிழின மக்களில் பெரும்பாலோருடைய ஆதரவு இருக்கிற தென்பதை எடுத்துக் காட்ட 14-1-47 ல் தமிழக மெங்கணும் தமிழ்த் திருநாள் நடத்தச் செய்து, அக் கூடங்களிலே சுயாட்சித் தமிழகக் கோரிக்கையை வலியுறுத்தித் தீர்மானங்கள் போடச் செய்தேன்.

## கோவை மாநாட்டிலே...

1948 ஜனவரியில் கோவையில் நடைபெறவிருந்த தமிழ் மாகாண அரசியல் மாநாட்டுத் தலைவர் தேர்தலிலே திரு. கு. காமராசரை எதிர்த்துப் போட்டியிட்டேன். ஆம்; ''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்ற கோரிக்கையைத் தேர்தல் பிரச்சனையாக்கித்தான் தமிழ்நாடு காங்கிரசின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்த திரு. காமராசரை எதிர்த்துப் போட்டியிட்டேன். வெற்றி கிடைக்காதெனத் தெரிந்திருந்தும், மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் காங்கிரஸ் வட்டாரத்தினரின் கவனத்திற்குக் கொண்டு செல்வதையே எனது வெற்றியாகக் கற்பனை செய்துகொண்டு போட்டியிட்டேன். நானே எதிர்பார்த்தபடி அத் தேர்தலில் திரு. காமராசர் வெற்றிபெற்றார்! ஆயினும்,

வாக்காளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் நான் ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளாத நிலையில் எனக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்தத் தேர்தலை அடுத்துக் கோவை நகரில் கூடிய மாகாண அரசியல் மாநாட்டிலே மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கக் கோரும் தீர்மானத்தை முன்மொழியப் போவதாக மாநாட்டுத் தலைவர் திரு. காமராசருக்கு அறிவித்தேன். தீர்மான நகலையும் அனுப்பியிருந்தேன். ஆனால் எனது தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் வைக்கப்படவில்லை. அதனால், ராஜ்யங்களை மொழிவழிதிருத்தியமைக்கக் கோரி முன் மொழியப்பட்ட தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுத்து மாநில சுயாட்சிக் கோரிக்கையை கோவை மாநாட்டிலே வற்புறுத்திப் பேசினேன். என் திருத்தத்தையும் மாநாட்டுத்தலைவர் அனுமதிக்க மறுத்து அதனை நிராகரித்தார். தலைவரின் தீர்ப்புக்குப் பணிய மறுத்து என் திருத்தத்தை வறுபுறுத்தி நான் தொடர்ந்து பேசினேன். மாநாட்டுத் தலைவர் நான் பேசுவதைத் தடுக்க முனைந்தார். என்னைப் பேச அனுமதிக்குமாறு மாநாட்டுப் பிரதிநிதிகளும் பதினாயிரக் கணக்கான பார்வையாளர்களும் குரலெழுப்பினர். பின்னர், தலைவர் என்னைப் பேச அனுமதித்தார்.

எனது திருத்தத்தோடு அசல் தீர்மானத்தை மறுநாள் காலை கோவை சண்முகா தியேட்டரில் மாநாட்டுப் பிரதிநிதிகளை மட்டும் கூட்டி வைத்து விவாதத்திற்கு விடுவதாகக் கூறினார். அதிலுள்ள சூழ்ச்சியைப் புரிந்துகொண்டு நான் அதற்கு இணங்க மறுத்தேன். மாநாடு குழப்பத்தில் கலையும் போலிருந்ததால் நான் விசுவாசமுள்ள ஒரு காங்கிரஸ்காரன் என்ற முறையில் அதைத் தவிர்ப்பதற்காகத் தலைவருடன் ஒத்துப்போனேன்.

கோவை மாநாட்டின் விளைவாக மாநில சுயாட்சிக் கோரிக்கைக்குக் காங்கிரஸ்காரர்களிடையே போதிய ஆதரவு கிடைத்தது. பல்லாயிரக்கணக்கானவர்கள் தமிழரசுக் கழகத்தில்

சேர்ந்தனர். சேராதவர்களும், காங்கிரசிலிருந்து கொண்டே கழக வளர்ச்சிக்கு உதவி புரிந்தனர்.

தமிழரசுக் கழகம், 1946ல் தொடங்கி இற்றை நாள்வரை தொடர்ந்து கால் நூற்றாண்டு காலமாக மாநில சுயாட்சிக் கோரிக்கையை வற்புறுத்தி வருகிறது. மறந்தும் பிரிவினைக் கோரிக்கையைக் கழகம் ஆதரித்ததில்லை.

1957 டிசம்பர் 8 ஆம் தேதி காஞ்சியில் கூடிய கழகப் பொதுக்குழுக் கூட்டத்திலே, ஆண்டு தோறும் ஜனவரி 26ல் மாநில சுயாட்சி நாள் கொண்டாடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன் படி கொண்டாடவும் படுகிறது.

முதல் ஆண்டிலே தமிழ் நாடு முழுவதிலும் தொடர்ந்து ஒரு வாரம் பொதுக் கூட்டங்களும் கருத்தரங்குகளும் ஊர்வலங்களும் நடத்தி, ''மாநில சுயாட்சி வாரம்'' கொண்டாடப் பெற்றது.

## மாநாடுகள்

2-2-59ல் திருச்சி உறையூரிலே மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்துவதற்கென்றே மாநில மட்டத்தில் ''மாநில சுயாட்சி மாநாடு'' நடத்தப் பெற்றது. அதிலே, கம்யூனிஸ்டுத் தலைவர் கலியாணசுந்தரம் உட்பட பிரிவினைக் கோரிக்கைக்கு எதிராகவும் சுயாட்சிக்கோரிக்கைக்கு ஆதரவாகவு முள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கு பெற்றனர்.

இரண்டாவது ''மாநில சுயாட்சி மாநாடு'' 1962 ஜனவரி 19ல் வேலூரில் நடைபெற்றது. அதிலே, தோழர் ப. ஜீவானந்தம் (கம்யூனிஸ்டு), திரு. ஈ.வே.கி. சம்பத் (த.தே.க.), டாக்டர் எஸ். விஜயலட்சுமி (பி.சோ.) ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மாநில சுயாட்சி கோரும் 3 ஆவது மாநில மாநாடு 20-7-68ல் சென்னை ஆபட்ஸ்பரியில் தமிழரசுக் கழக ஐந்தாவது மாநில மாநாட்டுடன் சேர்த்து நடத்தப்பட்டது. அதிலே, தமிழக

முதல்வர் அண்ணா அவர்களும், கேரள முதல்வர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாதும் கலந்துகொண்டு உரையாற்றினர். மற்றும், முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாய்பு, கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. எம். கலியாணசுந்தரம் ஆகியோரும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஆம், மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தும் அனைத்துக் கட்சி மாநாடுகளை மூவேறு நகரங்களில் - மூவேறு சந்தர்ப்பங்களில் - தமிழகம் தழுவிய அளவில் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது தமிழரசுக் கழகம்.

மாநில சுயாட்சியின் அவசியத்தை விளக்கும் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு நாடு முழுவதும் பரப்பியது தமிழரசுக் கழகம்.

## மொழிச் சிக்கல்

மத்திய அரசு ஆட்சி மொழி பற்றி எதிரும் புதிருமான வாதங்கள் கடந்த முப்பத்தைந்தாண்டு காலமாக நடந்துவருவது நாடறிந்ததாகும். தமிழினத்தின் உத்தியோக நலன்களைக் காப்பதற்காக இந்தி எதிர்ப்பு நடத்தப்படுகிறது. ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுவதற்காக இந்தியை ஆட்சி மொழி யாக்குவதற்கு முயற்சிக்கப்படுகிறது. இருதரப்பினரும் மக்களைக் குழப்பி வருகின்றனர். ஆங்கில ஆதிக்கம் மத்தியில் அகற்றப்படாத வரையில் தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கு முதலிடம் தேடுவது சாத்தியமில்லை.

மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கும் நிலையிலே ஆங்கிலமே மத்தியில் ஆட்சி மொழியாக நீடித்தாலும், தமிழகத்தில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு தொடங்கி, பட்டப் படிப்புவரை ஆங்கில மொழி கட்டாய பாடமாக நீடித்தே தீரும். ஆங்கிலத்துக்குப் பதிலாக, இந்தி மத்தியில் ஆட்சி மொழியா னாலும், உயர்தரக் கல்வி பயிலும் தமிழர் அவ்வளவு பேரும் அந்த மொழியைக் கட்டாயமாகப் படித்தாக வேண்டும். இந்த

இரண்டையுமே தமிழரசுக் கழகம் ஏற்கவில்லை. எதிர்க்கவும் செய்கிறது.

இந்தச் சிக்கலிலிருந்து தமிழையும் தமிழ் இனத்தையும் மட்டுமேயன்றி, இந்திய சமுதாயம் முழுவதையுமே காப்பதற்கு புதுவழி யொன்றை தமிழரசுக்கழகம் அறிமுகப்படுத்தியது. 31-12-67ல் கூடிய தமிழரசுக் கழக செயற்குழு மத்திய ஆட்சி மொழிப் பிரச்சினைக்கும் மாநில சுயாட்சிப் பிரச்சினைக்கு முள்ள தொடர்பை விளக்கியும், இந்திமொழியல்லாத பிரதேசத்தினரின் உத்தியோக நலனுக்குக் கேடில்லாத வகையில் மத்தியில் ஆட்சிமொழி மாறுவதற்கு வழி கூறியும் கீழ்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:

(1) பிரதேச மொழி ஒவ்வொன்றும் அதனதன் பிரதேசத்தில் ஆங்கிலத்தின் இடத்தை முழு அளவில் கைப்பற்றிய பின்னரே மத்தியில் ஆட்சி மொழியை மாற்றும் பிரச்சினை எழவேண்டும். அதற்கு முன்பே பிரதேச மொழிகளில் ஒன்றான இந்தி மொழியை மத்தியில் ஆட்சி மொழியாக்கி, அதன் வளர்ச்சிக்கு மத்திய அரசே பொறுப்பேற்பது பிரதேச மொழிகளிடையே பாரபட்சம் காட்டுவதாகும். அதனால், ஒவ்வொரு பிரதேசமொழியும் அதனதன் பிரதேசத்தில் ஆட்சி மொழியாகவும், பயிற்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் முழு அளவில் வருவதற்கு ஒரு காலவரம்பைக் குறிப்பிட்டு, அதுவரை மத்தியில் ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடித்திருக்க வேண்டுமென்று இக் குழு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

(2) மத்தியில் அளவுக்கு மீறி அதிகாரங்கள் குவிக்கப் பட்டிருத்தலால் அந்த அளவுக்கு அரசாங்க உத்தியோகங்களும் மத்திய அரசின் பொறுப்பில் இருந்து வருகின்றன. இந்த நிலையில் மத்தியில் ஆங்கில

மொழியே நீடிப்பதானாலும், மாறாக, இந்தி மொழியே ஆட்சி மொழியாவதானாலும், தமிழருக்கு இரண்டுமே வேற்று மொழிகளாதலால், மத்திய அரசின் உத்தி யோகங்களை எதிர்பார்த்து அதிகம் பேர் அந்த மொழிகளை படித்தாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது ஆட்சிமொழி சிக்கல் தீர்வதற்குப் பெரும் தடையாக இருந்து வருகின்றது. ஆகவே, இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காகப் பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு உறவு ஆகிய மூன்று பொறுப்புக்களை மட்டும் மத்தியில் விட்டு, மற்ற பொறுப்புக்களை யெல்லாம் உடனடியாக மாநில அரசுகளுக்கு மாற்றித் தரவேண்டும் என்று இக்குழு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறது.

இதன் மூலம் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளின் ஆதிக்கங்களிலிருந்தும் தமிழகம் விடுபடக் கூடுமாதலால், மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவு அளிக்குமாறு தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளை இக்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

இந்தத் தீர்மானத்தைப் பத்திரிகைகளிலே படித்த கவிஞர் பாரதிதாசன், என்னை நேரில் கண்டு பாராட்டினார். அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற தமது பிறந்த நாள் விழாக் கூட்டத்திலும், ''மொழிச் சிக்கல் தீரத் தமிழரசுக் கழகம் காட்டும் வழியே சிறந்தது'' என்று பாராட்டிப் பேசினார். சட்டப் பேரவையில் நான் அங்கம் வகித்தபோது, இந்தியாவின் மொழிச் சிக்கல் தீருவதற்கு மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்குவதுதான் வழி என்றும் ஒரு முறை விளக்கிப் பேசினேன். அதன்பின், ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் சட்டப் பேரவையைத் தொடங்கி வைத்து நிகழ்த்திய உரையிலும் எனது கருத்து மறைமுகமாக வரவேற்கப்பட்டிருந்தது. அப்போதைய முதல்வர் அண்ணா அவர்களும் சட்டப் பேரவையில் நிகழ்த்திய உரையொன்றிலே எனது கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

எதிர்காலத்தில் என்றேனும் ஒரு நாள் தமிழரசுக் கழகச் செயற்குழு காட்டிய வழியில்தான் இந்தியாவின் மொழிச் சிக்கல் தீர்க்கப்படுவதாக இருக்கும்.

மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் பிரசாரம் செய்வதற்காக இதுவரை ஆறு நூல்களை வெளியிட்டிருக்கிறேன். அவற்றின் பெயர்கள் வருமாறு:

- சுயாட்சித் தமிழகம்
- தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்
- சுயாட்சியா, பிரிவினையா?
- திராவிடஸ்தானா?. தமிழரசா?
- மொழிச்சிக்கலும் மாநில சுயாட்சியும்
- மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு

1970 ஆகஸ்டு 20ல் தமிழக சட்டப் பேரவையில் மாநிலங்களுக்கு முழு அளவில் சுயாட்சி வழங்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொள்ளும் உத்தியோகப் பற்றற்ற தீர்மானமொன்றை நான் முன் மொழிந்தேன். வலது - இடது கம்யூனிஸ்டு, பி.சோ., ச.சோ., சுதந்திரா ஆகிய கட்சிகள் மனநிறைவோடு என் தீர்மானத்தை ஆதரித்தனர். பழைய காங்கிரஸ், புதிய காங்கிரஸ் உறுப்பினர்கள் மவுனத்தில் மறைந்துகொண்டனர். உரிய நேரத்தில் யான் முன் மொழிந்தது போன்ற ஒரு தீர்மானத்தைத் தமிழக அரசே கொண்டுவருமென்று சட்டப் பேரவையின் முன்னவர் மாண்பு மிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் உறுதி கூறியதன் பேரில், எனது தீர்மானத்தைத் திரும்பப்பெற இசைந்தேன்.

## தி.மு.க உதவி

தமிழரசுக் கழகத்தின் மாநில சுயாட்சிக் கொள்கையை மற்ற கட்சிகளும் ஆதரிக்கக்கூடிய நல்ல சூழ்நிலையை உருவாக்கு

வதற்காக 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாடுபட்டு வந்தேன். கட்சிக் காழ்ப்பு காரணமாக மாநில சுயாட்சிக் கொள்கையை மற்ற கட்சிகள் எதிர்க்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தால், தமிழரசுக் கழகத்தைப் பார்லிமெண்டரித் துறைக்குப் புறம்பான ஒரு இயக்கமாகவே நடத்த முனைந்தேன்.

திராவிடர் கழகமும், திராவிடர் முன்னேற்றக் கழகமும் தனித் திராவிட நாடு கோரிக்கையை வற்புறுத்தி வந்தபோது, நட்புணர்ச்சிக்குக் கேடு இல்லாத வகையில் நான் அதைக் கண்டித்தேன். என்றாவது ஒருநாள் தி.க.வும், தி.மு.க வும் என் கொள்கையை ஏற்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் எதிர்பார்த்தபடியே தி.மு.கழகம் தனித் திராவிட நாடு கோரிக்கையை அறவே கை விட்டு, மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றபோதும் கட்சி வெறி காட்டி எனது கழகம் வெற்றி விழா கொண்டாடவில்லை. தி.மு.க. வின் மனமாற்றத்தை மகிழ்ச்சியோடு வரவேற்றது.

தி.மு. கழகத்தை ஆட்சி பீடத்திலேற்றுவதன் மூலம்தான் மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு வெற்றி தேட முடியும் என்று நம்பி அதன் தலைமையில் அமைந்த கூட்டணியில் தமிழரசுக் கழகம் இணைந்தது. கழகத்தின் நம்பிக்கை வீண்போகவில்லை. ஆம்; தி.மு. கழக அரசு என்னை ஏமாற்றி விடவில்லை.

தமிழரசுக் கழகத்தின் மாநில சுயாட்சிக் கொள்கையைத் தன்னுடையதாக்கிக் கொண்டு அதற்கு வெற்றி தேட தி.மு.க. முயன்று வருகிறது.

## அண்ணாவின் உயில்!

''மத்தியில் சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி'' என்று கால் நூற்றாண்டுக்கு முன்பு தமிழரசுக் கழகம் கொடுத்த குரலை தி.மு.கழகம் இன்று எதிரொலிக்கிறது. அண்ணா அவர்கள் தமக்கு மரணம் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே, ''திராவிட நாடு'' பொங்கல் மலருக்கு எழுதியிருந்த சிறப்புக் கட்டுரையிலே, மாநில

சுயாட்சி பெறப் பாடுபடுமாறு தன் தம்பிமார்களுக்கு அன்புக் கட்டளையிட்டு அமரவாழ்வு பெற்றார். அந்த எழுத்து தி.மு. கழகத்துக்கு அதன் அமைப்புத் தலைவர் தயாரித்துவைத்த ''உயில்'' என்று நான் சொன்னதை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மனம் உவந்து ஏற்றுக் கொண்டுள்ளார்.

தமிழரசுக் கழகம் தி.மு.கழகத்துடன் தோளோடு தோள் சேர்த்து நிற்பது அதிகாரப் பதவிகளைப் பங்கு போட்டுக் கொள்வதற்காக அல்ல; மாநிலங்களுக்கு சுயாட்சி தேடுவதற்காகவே!

இதுதான், மாநில சுயாட்சிக் கிளர்ச்சி தோன்றி வளர்ந்து வந்த வரலாறு.

## பூரண சுயாட்சியே குறிக்கோள்

தமிழரசுக் கழகத்தின் இன்றைய நிலை என்ன என்பதனையும் நான் தெளிவுபடுத்தியாக வேண்டும். கழகம் கடந்த கால் நூற்றாண்டுக் காலமாகக் கடைப்பிடித்து வரும் கொள்கைகளிலோ, கோரிக்கைகளிலோ ஒன்றில்கூட அது மனமாற்றம் அடையவில்லை யென்பதனை உறுதியாக நான் கூறிவிட விரும்புகிறேன். ஆனால், அந்தக் கொள்கைகளை, கோரிக்கைகளை விமர்சிப்பதிலே காலத்திற் கேற்ற தெளிவு தேவைப்படுகிறது.

தமிழரசுக் கழகம் சுயாட்சி கோருவது தமிழகத்திற்கு மட்டுமல்ல; அனைத்து மாநிலங்களுக்குந்தான்! அதனாற்றான், ''சுயாட்சித் தமிழகம்'' என்றோ, ''தமிழக சுயாட்சி'' என்றோ கூறாமல், ''மாநில சுயாட்சி'' என்று ஆதிமுதலே கழகம் கூறி வருகிறது.

சுயாட்சிப் பிரச்சினை குறுகிய மாகாண உணர்ச்சியிலிருந்து பிறந்த தன்று. தேசிய ஒருமைப்பாடு, ஜனநாயக உணர்ச்சி,

சோஷலிசப் பற்று ஆகிய பரந்த மனப்பான்மைகளிலிருந்து பிறந்ததாகும்.

மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்கி மத்தியில் உண்மையான சமஷ்டி அமைத்தாலொழிய, தேசிய ஒருமைப்பாடு நிலைபெறாதென்று - ஜனநாயகம் தழைத்து வளராதென்று - சோஷலிச சமுதாயத்தைப் படைக்க முடியாதென்று தமிழரசுக் கழகம் உறுதியாக நம்புகிறது. அதனால், மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்குவதை அவசியப் பிரச்சினையாக மட்டுமல்லாமல், அவசரப் பிரச்சினையாகவும் கழகம் கருதுகிறது.

## சுயாட்சி எது?

'சுயாட்சி' என்பதன் பொருள் கழகத்தின் கருத்திலே இதுதான்: தமிழகத்தில் நடப்பது தமிழினத்தார் ஆட்சியாக இருக்கவேண்டும். பிற மாநிலங்களின் நிலையும் இதுவாகவே இருக்க வேண்டும்.

இப்போது, தமிழகத்திலே ஆட்சி இருக்கிறது. அது, 'சுய-ஆட்சி'யாக இல்லை. மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப் பட்டிருப்பதனால், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களிலும் மத்திய அரசுக்கு மேலதிகாரம் இருப்பதனால், மாநில அரசு சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. இந்த நிலையில், மத்திய - மாநில உறவானது ஆண்டான் - அடிமை உறவாகத்தான் இருக்கிறது.

மற்று, மாநில அரசுக்குள்ள பொறுப்பை நிறைவேற்ற அதற்குப் போதிய நிதி வசதியில்லை. அதனால், பொதுவாக மாநில, அரசும் - குறிப்பாக, அதன் ஒவ்வொரு துறையும் மத்திய அரசிடம் கையேந்தி மானியம் பெறவேண்டி யிருக்கிறது. அந்த மானியமும் மாநிலம் கோருகிற அளவிற்கோ, தேவைக்கேற்ற அளவிற்கோ கிடைப்பதில்லை இதனால், மாநில அரசுக்கு மத்திய அரசின்மீது வெறுப்பு ஏற்படுகிறது; மத்திய - மாநில உறவு பாதிக்கப்படுகிறது.

இந்த நிலை மாற, பாதுகாப்பு - போக்குவரத்து- அயல் நாட்டுறவு ஆகிய மூன்றும் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட வேண்டும்; 'மிச்ச அதிகாரங்கள்' உள்பட இதர எல்லா அதிகாரங்களும் மாநில அரசுகளுக்கே உரிமையாக்கப்பட வேண்டும். மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளிலே ஒன்றில்கூட மத்திய அரசுக்கு மேலதிகாரம் இருக்கக்கூடாது.

மற்றும், மாநில அரசுகளுக்குத் தனிக் கொடி, தனித்த ராஜ்ய கீதம், தனியாக அரசமைப்புச் சட்டம் இருக்க வேண்டும். அமெரிக்கா, சோவியத் யூனியன், மலேசியா ஆகிய சமஷ்டி நாடுகளிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனிக் கொடி, தனித்தனி கீதம், தனித்தனி அரசியல் சட்டம் இருந்து வருகின்றன.

'சுய ஆட்சி' என்பதன் பொருள் இதுதான்!

## தி.மு.க நிலை என்ன?

தற்போது தமிழகத்தை ஆளும் தி.மு.கழகம் மாநில சுயாட்சிப் பிரச்சினையிலே தனது நிலையினை மாநில மாநாடொன்றில் நிறைவேற்றப்படும் அதிகார பூர்வமான தீர்மானத்தின் மூலம் தெளிவு படுத்த வேண்டும்.

அதிகாரங்களைப் பரவலாக்கக் கோருவது வேறு; மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி கோருவது வேறு.

இன்னொரு முறையும் சொல்லுகிறேன்; 'அதிகாரப் பரவல்' என்பது, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமான நிர்வாகப் பிரச்சினை; தேசிய இனங்களின் உரிமைப் பிரச்சினை அல்ல. 'அதிகாரப் பரவல்' பிரச்சினை மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே மட்டும் இல்லை; மாநில அரசுக்கும், ஊராட்சி மன்றம் - ஊராட்சி ஒன்றியம் - நகர மன்றம் ஆகியவற்றிற் கிடையேயும் உள்ளன. அதற்குப் பெயர் மாநில சுயாட்சி அல்ல; கிராம சுயாட்சி; நகர சுயாட்சி. அது அவசியம்தான் என்றாலும்; அது வேறு பிரச்சினை; அது ஒவ்வொரு மாநிலத்துக்குரிய

உள்நாட்டுப் பிரச்சினை. மாநிலங்களுக்குச் சுயாட்சி கோருவது, மொழிவழித் தேசிய இனங்களின் உரிமைப் பிரச்சினை.

தமிழர் 4 கோடிப் பேர். அவர்கள் ஒரு ஜனக்கும்பலல்ல; தனித்த மொழி, தனித்த வரலாறு, தனித்த பண்பாடு, தனித்த பழக்க வழக்கங்கள் உடைய தனித் தேசீய இனத்தார். அவர்களுக்கென்று தனித்த தாயகம் உண்டு. அது, தமிழ்நாடு. அது தனி நாடுதான். ஆயினும், இந்திய சமஷ்டியில் அங்கமாக்கப்படுவதால் அதனை 'மாநிலம்' என்கிறோம். அந்த மாநிலத்திற்குச் சுயாட்சி கோருவது, தமிழ் இனத்திற்குச் சுயாட்சி கோருவதாகும். இதனை 'அதிகாரப் பரவல் முறை' என்ற சின்னஞ் சிறு பிரச்சினை ஆக்கிவிடக்கூடாது.

இதனையும் தி.மு.க. தெளிவுபடுத்திவிட வேண்டும். அது, மாநில அரசுக்குக் கூடுதலான அதிகாரங்கள் கேட்கின்றதா? தமிழினத்தின் தாயகமான தமிழகத்திற்குச் சுயாட்சி கேட்கிறதா? - என்பது சில சமயங்களில் எதிர்க்கட்சிகளால் குழப்பப்படுகிறது.

## ஆண்டான் – அடிமை உறவு!

மத்திய அரசிடம் கூடுதலான நிதிவசதியை எதிர்பார்த்து அதற்கு 'மாநில சுயாட்சி' என்று பெயர் கொடுக்கிறது என்றும் எதிர்கட்சிகளால் விமர்சிக்கப்படுகிறது. 'சுய - ஆட்சி' என்ற பெயர் மானியம் பெறும் ராஜ்யத்திற்குப் பொருந்தாது. சுயாட்சி யுடைய மாநிலங்களை அங்கங்களாகக் கொண்ட உண்மையான சமஷ்டியிலே, மானியம் தருவதும் பெறுவதுமான நிலை இருக்கவே இருக்காது; இருக்கவும் கூடாது. மானியம் தருவதும் பெறுவதுமான மத்திய மாநில உறவானது, ஆண்டான் - அடிமை உறவு போன்றதாகும். சுயாட்சி கோரும் மாநில அரசு மானிய உதவியைக் கூடுதலாக்குமாறு மத்திய அரசைக் கோருவது 'சுய - ஆட்சி' கோரும் பண்புக்குப் பொருந்தாது. சுயாட்சி என்பது மாநிலப் பிரச்சினையாக இருக்கலாம். ஆனால், அது மானியப் பிரச்சினை அல்ல.

டாக்டர் பி.வி. இராசமன்னார் குழு அறிக்கையின் அடிப்படையில் மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்க வேண்டுமென்று தி.மு.க மாவட்ட மாநாடுகள் சிலவற்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி கோருவோர் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் சட்டம் முழுவதையுமே மாற்றியமைக்குமாறு கோரியாக வேண்டும். அதற்காக, வயதுவந்த வாக்காளர்களாலோ, மாநில சட்ட மன்றங்களாலோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய மன்றம் ஒன்றை அமைப்பதுபற்றி மத்திய அரசு மாநில அரசுகளோடு கலந்து பேச முடிவெடுக்கவேண்டும்.

இவ்வளவு பெரிய அடிப்படை மாறுதல் தேவையில்லையென்றால், தற்போதைய நாடாளுமன்றமும் ராஜ்ய சபையுமே அரசியல் நிர்ணய மன்றமாகவும் மாறக்கூடிய வகையில் நடைமுறையிலுள்ள அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இது, தமிழரசுக் கழகத்தின் உறுதியான கோரிக்கையாகும்.

தி.மு. கழகத்தின் நிலையும் இதுதான் என்று நம்புகிறேன்.

## மூவர் குழுவின் பரிந்துரை

டாக்டர் பி.வி. இராசமன்னார்; தனது குழுவின் பரிந்துரைகளைக் குறை கூறியவர்களுக்குப் பதிலளிக்கையில் கீழ்வருமாறு கூறினார்:

''தற்போதுள்ள அரசியல் சட்டத்தின் வரம்புக்குள் மாநிலங்கள் நிதி வருவாய்களை விரிவுபடுத்தவும் அதிகாரங்களைப் பெறவும் வழிவகுப்பதே இந்தக் குழுவின் நோக்கமாகும்.

''மேலும் நிதிவசதிகளை மாநிலங்கள் அடையும் வகையில் அதிகாரங்கள் சில கிடைக்க வழிகாணும் முயற்சியைத்தான் மூவர் குழு பரிந்துரை செய்துள்ளது.''

உண்மையில் மூவர் குழுவின் பரிந்துரையைப் படித்துப் பார்த்தால், தி.மு.க கோருகின்ற மாநில சுயாட்சி லட்சியத்திற்கு - தி.மு.க. தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுப்பும் ''மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி'' என்ற கோஷத்திற்கு அடிப்படையாக அமையும் தகுதி அதற்கு இல்லையென்பது புலனாகிறது.

மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வளர்ச்சிபற்றிய வரலாறு பல அத்தியாயங்களுடன் கொண்ட மிகப் பெரிய நூலுக்கு உரியதாகும். அதனை எழுதி வெளியிட வேண்டுமென்ற ஆர்வம் எனக்கிருப்பினும், எழுத அவகாசமின்மையால் இச்சிறுநூலை வெளியிட்டு ஆறுதலடைகின்றேன்.

**வளர்க, சுயாட்சிக் கிளர்ச்சி!**

***

பூங்கொடி பதிப்பகம்